


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ தேரில் வந்த திருமகள்...! ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ தேரில் வந்த திருமகள்..! ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
தேரில் வந்த திருமகள்...!

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

தேரில் வந்த திருமகள்..!

ஆசிரியர் கடிதம்...

என் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே..!

2014-ம் வருடம்.. ஜீன் மாதம்.. தேனூர் சிவன் கோவிலுக்கு முதல் முதலாய் போனேன்.. அதற்கு முன் அந்தக் கோவிலைப் பார்த்ததில்லை.. என் கணவரின் மலரும் நினைவுகளாக அந்தக் கோவிலைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்..

"நாங்க ரெண்டு ஊரு ஜனங்க.. மாட்டு வண்டிகளைக் கட்டிக்கிட்டு சோழவந்தான் பக்கத்திலுள்ள தேனூரு சிவன் கோவிலுக்குப் போவோம்.. மூணு நாளு பயணம்.. மொத நாளு பொழுது சாய தேனூருக்குப் போயி, அங்கே மாட்டு வண்டிகள நிப்பாட்டிட்டு கோவிலுக்கு எதிரிலே இருக்கிற மண்டபத்தில தங்கிக்குவோம்.. மறுநாள் காலையிலே பொம்பளைக கோவிலைச் சுத்திக் கூட்டிப் பெருக்கி, சாமிக்கு அலங்காரம் பண்ணி பொங்க வைப்பாங்க.. நாங்க இளந்தாரிப் பசங்க எல்லாம் சோழவந்தான் ஆத்தில குதிச்சு நீச்சலடிச்சுக் குதியாட்டம் போட்டுட்டு, சாமி கும்பிட வருவோம்.. அன்னைக்குக் கோவிலில இருந்துட்டு, மறுநாள் காலையிலே மாட்டு வண்டிகளப் பூட்டினா, பொழுது சாய எங்க ஊருக்கு வந்து சேர்ந்திருவோம்.. கோவிலுக் கிணத்துத் தண்ணி மேலாப்புல கிடக்கும்.. அள்ளிக் குடிச்சாத் தேங்காத் தண்ணி போல அம்புட்டு ருசியா இருக்கும்.."

என் கணவரின் மலரும் நினைவுகளைக் கேட்டுக் கேட்டு என் கற்பனையில் தேனூர் எளியகுருசித்தர் உருவாக்கியிருந்த சிவன் கோவிலைப் பற்றி ஒரு பிம்பம் இருந்தது.. நேரில் பார்த்தால் இடிந்து கிடந்த மண்மேடும்.. அதன் மத்தியில் கருவேல மரங்கள் முளைத்த நான்கு கால் கல் மண்டபத்தின் மத்தியிலிருக்கும் சிவலிங்கமும்தான்

இருந்தது.. அதிர்ந்து போனேன்.. கோவிலுக்குச் சொந்தமாக மானிய நிலங்கள் இருக்கின்றன.. அதன் மதிப்பு கோடிக்கணக்கில்.. தங்க புதையல் கிடைத்திருக்கிறது.. அப்பேற்பட்ட கோவில் இடிந்து கிடக்கிறதே.. அதை ஏனென்று கேட்க ஒருவர் கூட இல்லையா..?

என் கோள்வியை எனது முகநூல் பக்கத்தில் பதிய ஆரம்பித்தேன்.. கதை கேக்க வாரீகளா மக்கா என்று அழைத்து தினந்தோறும் நான் பதிந்த தேனூர் சிவன் கோவிலைப் பற்றிய பதிவைத் தொடர்ந்து படித்தவர்கள் ஏராளம்.. 6 வருடங்கள் கழித்து தேனூர் சிவன் கோவிலை நேரில் பார்க்க விரும்பிச் சிலர் சென்றிருக்கிறார்கள்.. கோவிலின் நிலைகண்டு அதிர்ந்து தேனூர் சிவன் கோவில் என்ற முகவில் பக்கத்தைத் துவக்கியிருக்கிறார்கள்.. அதில் கோவிலின் சிதிலமடைந்த நிலையை வீடியோவாக பதிவு பண்ணியிருக்கிறார்கள். மனதார்ந்த எந்த ஒரு பிரார்த்தனைக்கும் வெற்றி கிடைக்கும் என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு எதுவுமில்லை.. விரைவில் மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகில் உள்ள தேனூர் கிராமத்தில் எளியகுருசித்தர் வழிபட்ட சிவன் கோவில் கட்டப்படும்.. கும்பாபிஷேகம் நடக்கும்.. அதைப் பார்க்க எனக்கு அழைப்பு வரும் என்று நம்புகிறேன்..

ஓம் நமச்சிவாய..!

நட்புடன்

முத்துலட்சுமி ராகவன்

கவிதை சொல்லவா

தேரேறி நீ வந்தாய்..

வேராக எனக்கு வாழ்வு தந்தாய்..

திருமகளே..! உன் துணையுடனே

திக்கெட்டும் நான் பறந்தேன்..
உன் கடைக்கண் பார்வையிலே
கடல் தாண்டும் பலம் பெறுவேன்..
உன் கொவ்வையிதழ் சிரிப்பினிலே
மூவுலகை நான் வெல்வேன்..
உன்னருகில் நானிருந்தால்
வாழ்வு முழுதும் இனிமையாகும்..
என்னருகில் நீயிருந்தால்..
இவ்வுலக வாழ்வு சோலையாகும்..

1

"ஸ்ஸ்ஸ்..."

மார்கழி மாதத்தின் ஊதல்காற்று காதுகளின் ஜவ்வைத் துளைத்து உள்இறங்கியது.. காதுகளைப் பொத்திக் கொண்டான் ரகுநந்தன்..

"யோவ்.. மெதுவாப் போய்யா.. ஆட்டோதானே இது..? என்னவோ பிளைட்டை ஓட்டறதைப் போல் இவ்வளவு வேகமாப் போற..? ஏர் போர்ட் ரோட்டில ஓட்டினா ஏரில பறக்கனுமா..?"

இவன் அதட்டியதில் ஆட்டோவை விரட்டிக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் காண்டானான்.. சென்னையின் போக்குவரத்து நெரிசலைப் பற்றி வெளியூர்வாசிக்கு என்ன தெரியும்..? சந்து கிடைத்தாலும் அதில் ஆட்டோவை நுழைத்து சிந்து பாடி ஓடிக் கொண்டிருக்கா விட்டால் ஆட்டோக்காரர்கள் பிழைக்கவே முடியாது..

"உன் ஒருத்தனுக்காக நாள் பூராவும் ஆட்டோ ஓட்டிக்கினு இருக்க முடியுமா..? கம்முன்னு குந்திக்கினு வாய்யா.. கேப் கிடைச்சா அதில பூந்துப் பறந்துக்கினே இருந்தாத்தான்

பொழப்பு ஓடும்.. நாள் ஒன்னுக்கு நாலு சவாரியப் பாத்தாத்தான் ஆட்டோவுக்கு டியூ கட்ட முடியும்.."

"அதுக்காக இப்படியா விரட்டுவ..?"

"வேற எப்புடி ஓட்டறதாம்.. இதோ.. நடந்து போறவன் கூட ஓவர் டேக் பண்றதப் போல, திருவாரூர் தேரு கணக்கா, அசைஞ்சு ஆடி போயிக்கிட்டு இருக்கே.. அந்த ஆட்டோவைப் போல ஓட்டச் சொல்றியா..?"

ஆட்டோக்காரன் முன்னால் ஊர்ந்து சென்ற ஆட்டோவைக் காட்டினான்.. பாவம்.. போக்குவரத்து விதிகளை மதித்து ஓட்டும் ஆட்டோக்காரன் போல.. வரிசையில் முந்தாமல், சிதறாமல் பதவிசாக நகர்த்திக் கொண்டிருந்தான்..

"டிராபிக் ரூலைப் ஃபாலோ பண்ற ஆட்டோ போல.."

"அதுசரி.. அப்புடி ஃபாலோ பண்ணிக்கிட்டு இருந்தா நீ ஊர் போய் சேர்ந்தாப்புலதான்.."

"என்னைப் பத்தி நீ கவலைப்பட வேணாம்.. ஆகாயத்தில பறக்காம பூமியில ஓட்டு.. அது என்ன திருவாரூர் தேர்ன்னு என்னை வம்புக்கு இழுக்கற..?"

"உன்ன வம்புக்கு இழுத்தேனா..? யாரு..? நானு..? யோவ்.. இன்னா.. எதுக்கோ எதையோ இணை கூட்டற..? அந்த ஆட்டோக்காரன் இந்தக் கேள்வியக் கேட்டா அத்தில ஒரு அர்த்தமிருக்கு.. நீ ஏய்யா கிடந்து தவ்வுற..?"

"ஆமாமாம்.. நான் தவளை பாரு.. தவ்வறேன்.. அந்த ஆட்டோக்காரன் எந்த ஊரோ.. எனக்குத் தெரியாது.. நான் பொறந்து வளர்ந்தது எல்லாம் திருவாரூர்.. எங்க ஊர் தேரைப் பத்தி நீ என்கிட்டேயே கிண்டலடிப்பியா..?"

"நீ யாரு, என்ன பேருன்னு கிட எனக்குத் தெரியாது.. உன் ஊரைப் பத்தியா எனக்குத் தெரியும்..? ஆட்டோவை விட்டு நீ இறங்கின பின்னால நீ யாரோ.. நான் யாரோ.. நீ பேசினதுக்குப் பதிலச் சொன்னா வம்பு வளக்கிறயா..? கம்முன்னு வா.. ஆமா.."

"உன் ஆட்டோவில் ஏறினா கம்முன்னு வரச் சொல்லுவியா..? அதெல்லாம் முடியாது.. நான் பேசிக்கிட்டுத்தான் வருவேன்.."

"யோவ்.. உன்கூட பெரிய ரோதனையாப் போச்சுய்யா.. மனுசப்பய ஆட்டோவ ஓட்டவா வேணாமா..?"

"வேணாம்ன்னா விட்டிரு.. நான் இறங்கி வேற ஆட்டோ பிடிச்சுக்கிறேன்.."

"இதுவரைக்கும் சவாரி பண்ணினதுக்கு துட்டு எவன் கொடுப்பான்..? ஆட்டோ என்ன தண்ணியிலயா ஓடுது.. காலங்கார்த்தால தகராறு பண்ணாம அடங்கிக் குந்து.. அஆங்.."

"எங்கே குந்தறது..? நீ ஆட்டோவில பறக்கிற பறப்பில நான் பறக்கிறேன்ய்யா.. கொஞ்சம் மெதுவாத்தான் ஓட்டு.."

"இன்னாய்யா மன்சன் நீ.. இதுவரைக்கும் என் ஆட்டோவில ஏறின ஜனங்க எல்லாம் காலில சுடுதண்ணிய ஊத்திக்கிட்டதப் போல வேகமாப் போ, வேகமாப் போன்னுதான் பதறுவாங்க.. நீ என்னடான்னா கட்ட வண்டிய ஓட்டிக்கிட்டுப் போறதப் போல ஆட்டோவ ஓட்டச் சொல்றியே.. கோயம்பேடு பஸ்ஸ்டாண்டுக்குத்தான போகிற.. சீக்கிரமா வீட்டுக்குப் போக ஆசையில்லையா..?"

'அப்படி ஆசையிருந்தா உன்கூட ஏன்ய்யா மல்லுக் கட்டறேன்.?'

ஆயாசமாக இருந்தது ரகுநந்தனுக்கு.. ஊருக்குப் போக வேண்டும் என்று நினைத்தாலே அடி வயிற்றைக் கலக்கியது.. போன மாதம் ஊருக்குப் போயிருந்தபோது நடந்த குடும்ப களேபரத்தில் அரண்டு போய் ஓடி வந்தவன் ஐந்து நாள்கள் காய்ச்சலில் விழுந்து விட்டான்.. இப்போதுதான் கொஞ்சம் இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கிறான்.. அது பொறுக்காத வீடு அவனுக்கு அவசர அழைப்பு விடுத்து விட்டது..

"ரகு.." செல்போனில் அவனுடைய அப்பா தசரதன் அழைத்தார்..

"அப்பா.."

"உன் அம்மாவுக்கு காய்ச்சல்டா.. உன்னைப் பார்க்கனும்னு புலம்பறா.."

"அப்பா.. காய்ச்சல் வந்தா டாக்டரைத்தான் பார்க்கனும்.. என்னைப் பார்த்து என்ன செய்ய...? நான் பேங்க் மேனேஜர்.. டாக்டரில்லை.."

"பெத்த தாய்க்கு காய்ச்சல்ங்கிறேன்.. அப்படியாப்பான்னு ஓடி வராம வியாக்கினமா பேசற..?"

ரகுநந்தன் அப்படி வியாக்கினம் பேசுகிறவனல்ல.. அவனைப் பெற்ற தாயான சுமித்ரா மீது உயிராக இருப்பான்.. அவளுக்குக் காய்ச்சல் என்றுகூட சொல்ல வேண்டியதில்லை.. ஜலதோசம் என்று சொன்னாலே விக்ஸீம் கையுமாக பறந்து போயிருப்பான்.. அப்படிப்பட்ட அம்மா பாசம் கொண்டவனை வியாக்கினம் பேச வைத்தது வேறு யாருமல்ல.. அவனுடன் பிறந்த தங்கை ரதி மீனாதான்.. தசரதனின் போன் வருவதற்கு முன்பே ரதிமீனாவிடமிருந்து ரகுநந்தனுக்கு போன் வந்து விட்டது..

"அண்ணா.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு அப்பா போன் பண்ணுவார்.. நம்பி விடாதே.."

"உனக்கெப்படி தெரியும்..?"

"அப்பாவும் அத்தையும் சதியாலோசனை செய்ததை நான் ஒட்டுக்கேட்டேன்.."

"ஒட்டுக் கேட்கிறது கெட்ட பழக்கம்ன்னு உனக்குத் தெரியாதா..?"

"தெரியுமே.. நான் நேர்மையின் திருவுருவமா ஒட்டுக்கேட்டு உனக்கு உளவு சொல்லாம சமத்துப் பொண்ணா இருந்துக்கறேன்.. நீ அம்புஜம் அத்தையின் மக சிற்றானைக்குட்டி சித்ராவைக் கட்டிக்கிறயா..?"

"அதுக்கு ஏழுகடல் ஏழு மலையைத் தாண்டி ஓடியே போயிருவேன்.."

"தெரியுதில்ல.. அண்ணனும் தங்கையும் என்ன காய் நகத்தறாங்கன்னு அம்மாவாலேயே கண்டு பிடிக்க முடியலை.. நான் ஒட்டுக்கேட்டு உனக்கு உளவு சொன்னாத்தான் உண்டு..

என்ன செய்யட்டும்..? ஒட்டுக் கேட்கவா..? அதை விட்டுத் தொலைக்கவா..?"

"கும்பிட்டுக் கேட்டுக்கறேன் ரதி.. என் செல்லத் தங்கையில்ல.. என்னை அந்த சிற்றானைக் குட்டி சித்ராகிட்ட இருந்து காப்பாத்திரும்மா.. உனக்கு கோடி புண்ணியமாப் போயிரும்.."

"அஃது.. நீதி போதனை பண்றதுக்கு முன்னாலே யோசிச்சு வாயைத் திறக்கனும்.. திருவாரூர் நிலவரம் கலவரமா இருக்கு.. நீ சென்னையில போய் நெருப்புக்கோழி தலையை மணலுக்குள்ளப் புதைச்சுக்கிட்டு தப்பிச்சுட்டோம்ன்னு நிம்மதிப் பெருமூச்சு விடறதைப் போல ஒளிஞ்சுக்கிட்டாத் தப்பிச்சுற முடியுமா..?"

"பீதியைக் கிளப்பாம விசயத்தைச் சொல்லு.."

"உன்னை.. சென்னையில இருந்து திருவாரூருக்கு இழுக்க சதி நடக்குது.. அம்மா பெயரைச் சொன்னா நீ ஓடி வந்திருவேன்னு அத்தை தூபம் போட்டாங்க.. அதுக்கு அப்பா பொறாமைப்பட்டு, ஏன் எனக்கு ஒன்னுன்னா என் மகன் ஓடி வந்துற மாட்டானான்னு போட்டி போட்டார்.. அத்தை உடனே உன் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லைன்னு நீ போன் போடுவண்ணா.. உனக்கு உடம்பு சரியில்லைன்னு உன் மகனுக்கு அண்ணி போன் போடுமான்னு ஒரு போடு போட்டுச்சு.. அடங்கிட்டார்.. அம்புஜம் அத்தைக்கு உடம்பெல்லாம் மூளை.."

"இப்ப அவங்க பெருமையை நான் கேட்டேனா..?"

"அம்மாவைப் பார்க்க நீ ஓடி வந்தேன்னா உன்னை வீட்டில லாக் செய்து மிரட்டி உருட்டி அத்தை மக ரத்தினத்தை உன் தலையில் கட்டி வைச்சுறலாம்ன்னு இங்கே பக்காவா பிளான் போட்டு வைச்சிருக்காங்க.."

"அத்தை மக ரத்தினமா..? உனக்கு மனச்சாட்சியே இல்லையா..? ரத்தினமா அது.. சிற்றானைக்குட்டி அது.."

தசரதனின் தங்கையான அம்புஜத்தின் மகள் சித்ரா பிறக்கும் போதே பொந்தான் பொதுக்கென்று புஷ்டியாக பிறந்தவள்.. வளர,வளர நான்கு பேரின் உடல்வாகை ஒருடலாக பெற்று வளர்ந்தவள்.. ரகுநந்தனைக் கண்டு விட்டால் வெட்கப்படுவதாக நினைத்துக் கொண்டு நாணிக்கோணி அவள் செய்யும் சேஷ்டைகளில் இவனது சர்வாங்கமும் பதறி விடும்.. அதிலும் அவள் இமைகளை படபடவென்று அடித்து..

"மாமா.." என்று அழைத்து விட்டால் காய்ச்சலிலே விழுந்து விடுவான்..

அவளை அருமை பெருமையாக அறைக்குள் வைத்து அண்ணன் மகனுக்கென்றே வளர்ப்பதாக அம்புஜம் பேசும் பெருமையில் சிறுவயதிலேயே வீட்டை விட்டு ஓடி ராணுவத்தில் சேர்ந்து விட்டால் என்ன என்று பலமுறை ரகுநந்தன் ஓட முயன்றிருக்கிறான்.. கடைசி வினாடியில் அம்மா வைக்கும் அயிரை மீன் குழம்பின் நறுமணமோ, இல்லை கோழிக்குழம்பின் வாசனையோ அவனை தடுத்து நிறுத்தி வீடு தங்க வைத்துவிடும்..

அப்படி பிறந்ததிலிருந்து அவனுக்கு யானை சொப்பனமாக இருந்து பயமுறுத்திக் கொண்டிருப்பவள்தான் சித்ரா.. அவள் வயதுக்கு வந்தவுடன் அம்புஜம் தசரதனுக்கு வேப்பிலை அடிக்க ஆரம்பித்து விட்டாள்..

"அண்ணா.. என் வீட்டுக்காரரோட அக்கா மகனுக்கு நம்ம சித்ராவைக் கட்டிக்கனும்னு அம்புட்டு ஆசை.. கட்டினா சித்ரா வைத்தான் கட்டிக்குவேன்னு ஒத்தைக்காலில நின்னான்.. நான் ஊம்ன்னு சொல்லலையே.. அதில உங்க மச்சானுக்கு என்மேல வருத்தம்தான்.. என்னைக்கு இருந்தாலும் என் அண்ணன் மகனுக்குத்தான் என்மகளைக் கட்டிக் கொடுப்பேன்னு அடிச்சுச் சொல்லிட்டேனே.." என்று அவள் தசரதனிடம் ஒருநாள்

புரூடா விட்டுக் கொண்டிருந்த போது அங்கு இருந்த சுதர்சனம்..

"அண்ணனுக்கு அடி பலமா அண்ணி..? அதேன் காலையில நான் பார்க்கறப்ப நொண்டிக்கிட்டே நடந்து வந்தாரா..?" என்று சிரிக்காமல் கேட்டு விட்டார்..

"என்னது..?" சண்டைக் கோழியாக சிலிர்த்த அம்புஜம் அன்று முழுவதும் சுதர்சனத்தைப் பேசித் தீர்த்து விட்டாள்..

அதில் சுமித்ராவுக்கு கோபம் வந்து விட்டது.. சுதர்சனம் அவளது உடன் பிறந்த அண்ணன்.. பக்கத்து கிராமத்தில் பெருந்தனக்காரர்.. தங்கையைப் பார்த்துப் போக வந்திருந்தார்.. அவரை அம்புஜம் எப்படிப் பேசலாம் என்று அவள் களத்தில் இறங்க தசரதனுக்கும் சுமித்ராவுக்கும் சண்டை மூண்டு விட்டது..

இப்படி ஒற்றுமையாக இருக்கும் காதல் கணவன் மனைவிக்கு இடையே பேச்சுவார்த்தையே இல்லாமல் போக வைத்து விடும் பெருமையெல்லாம் அம்புஜத்தையே சேரும்.. மலர்ந்தும் மலராத பாசமலர் அவள் என்று தசரதனிடம் பாசப்பயிர் வளர்ப்பதில் அவர் நடிகர்திலகமாகி உருகி விடுவார்.. தங்கை பாசத்தில் எங்கே சிற்றானைக் குட்டி சித்ராவை அவன் தலையில் தந்தை கட்டி விடுவாரோ என்று பயந்து அடிக்கடி தலைமறைவாகி தாய்மாமன் வீட்டில் போய் ஒளிந்து கொள்வான் ரகுநந்தன்..

"நான் இருக்கேண்டா மாப்பிள்ள.. என் தங்கச்சி மகன நானு விட்டுக் கொடுத்திருவேனா.. பயப்படாதே.." என்று சுதர்சனம் சமாதானப் படுத்தி அவனை திருவாருரில் கொண்டு வந்து விட்டுவிட்டுச் செல்வார்..

அந்த அளவுக்கு சித்ராவைப் பற்றிய பீதி ரகுநந்தனைப் பீடித்திருந்தது..

விர்ரென்று காற்று வந்து ரகுநந்தனின் முகத்தில் மோதியதில்.

"யோவ்.. வேகத்தைக் குறைய்யா.." என்று முகம் சுளித்தான்..

"உனக்கு இந்த டயலாக்கை விட்டா வேற டயலாக்கே வாயில் வராதா..? அந்தாண்டை பாருய்யா.. திருவாரூர் தேரே அசைஞ்சு ஆடி ஜோடி போட வந்திருச்சு.. உன் பேச்சைக் கேட்டு வேகத்தைக் குறைச்சா இப்படித்தான்.. ஆடி அசையிற தேரும் என்னை ஓவர் டேக் பண்ணும்.. என்னை இன்னான்னு நின்ச்சே.. ஆட்டோ ரேஸில கலந்துக்கிற அத்தனை பேரையும் மண்ணைக் கவ்வ வைக்கிற சூரப்புலிய்யா.. என்னாண்டை வைச்சுக்காத.. சொல்லிட்டேன்.."

"யோவ்.. அது ரேஸ்.. இது சவாரி.. புரிஞ்சுக்கய்யா.."

ஆட்டோக்காரனிடம் மல்லுக்கட்டியபடி பக்கத்தில் வந்த திருவாரூர் தேர் என்று வர்ணிக்கப்பட்ட ஆட்டோவை செம காண்டுடன் பார்த்தான் ரகுநந்தன்.. அதனால் அல்லவோ வேகம் குறைந்திருந்த ஆட்டோக்காரன் வீறு கொண்டு எழுந்திருக்கிறான்..

அனல் பறக்க ஆட்டோவைப் பார்த்தவனின் பார்வையில் சோகச் சித்திரம் போல ஆட்டோவின் பக்கவாட்டுக் கம்பியின் மீது சாய்ந்திருந்த தேவதை போன்ற அந்தப் பெண் பட்டாள்..

'பார்ரா.. இவளே திருவாரூர் தேர் போலதான் இருக்கா..' அவனையுமறியாமல் அவளை ரசித்தான்..

ஓர்நொடிகூட ரசித்துப் பார்த்திருக்க மாட்டான்.. அவன் உட்கார்ந்திருந்த ஆட்டோ நொடிப்பொழுதில் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து விட்டது.. ரகுநந்தனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

பாலைவனச் சோலை போல கண்களில் பட்ட பெண்ணை ஓர்நொடியாவது உற்றுப் பார்க்க விடுகிறானா..? ஆட்டோக்காரனுக்குத் தெரியுமா ரகுநந்தனின் அவஸ்தை..?

இப்படி காற்றை விடக் கடுகில் பறந்து அவன் திருவாரூர் போய் என்னத்தைச் சாதிக்கப் போகிறான்..? காத்திருக்கும் பேராபத்தைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருந்தும் தேங்கி நிற்க முடியாமல் பஸ் பிடிக்கப் போய் கொண்டிருக்கிறானே.. இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்லுவான்..?

அவனுக்கு இருக்கும் ஒரே ஆதரவான தாய்மாமனுக்கும் போனை போட்டு அலறினான்.. அவரோ வெகு இலகுவாக பேசிவைத்தார்..

"இப்ப என்ன பேராபத்து வந்திருச்சுன்னு இப்படி அலறுகிற..? அம்புஜத்துக்கு அம்புட்டு யோசனை இருந்தா நமக்கு எம்புட்டு யோசனை இருக்கும்..? நீ கிளம்பி வா மாப்பிள்ள.. நாமா இல்ல அந்த அம்புஜமான்னு ஒரு கை பார்த்துரலாம்.."

"அத்தை இருக்கிற சைஸீக்குப் பத்துக் கையே பத்தாதே மாமா.. ஒரு கை பார்த்து என்னத்த செய்ய..?"

"இப்புடிப் புலம்பிக்கிட்டே இருந்தா வேலைக்கு ஆகாது மாப்பிள்ள.. களத்தில இறங்கி பொளந்து கட்டனும்.."

"யாரை..? அத்தை அம்புஜத்தையா..?"

"அதப் பொளந்து கட்ட அதக் கட்டிக்கிட்ட புருசனாலேயே முடியல.."

"தெரியுதில்ல.. ஊருக்குள்ளே மீசையை முறுக்கி விட்டுக்கிட்டு சண்டியர் கணக்கா நெஞ்ச நிமிர்த்திக்கிட்டு நடக்கிற ஆனானப்பட்ட கிருஷ்ணன் மாமாவே அத்தையைக் கண்டா தோளைக் குறுக்கிக் கூன் போட்டுக் கூழைக் கும்பிடு போடறாரு.. இதில நான் எம்மாத்திரம்..?"

"அதுக்காக திருவாரூருக்கு வராம சென்னையிலேயே ஒளிஞ்சிருக்கப் போறியா..? இதென்ன மாப்பிள்ள சின்னப்புள்ளத்தனமா இருக்கு..? குழந்தைப் புள்ளையாட்டம் பேசற..."

தாய்மாமனின் பேச்சில் வழி கண்டு பிடித்துவிட்ட உற்சாகத்தில்..

"ஹீர்ரே.." என்று துள்ளிக் குதித்துக் கத்தினான் ரகுநந்தன்..

"என்னது.. கர்ரே புர்ரேவா..?" புரியாமல் குழம்பினார் சுதர்சனம்..

"இது வெற்றிக் கூவல் மாமா.. ஜெயிச்சுட்டேன்னு கத்தறோமில்ல.. அந்தக் கத்தல்.." விளக்கம் சொன்னான் ரகுநந்தன்.

"இப்ப என்னத்தை ஜெயிச்சுப்புட்ட மாப்பிள்ள..? அந்தக் கூகை அம்புஜத்தையா..?"

"அத ஜெயிக்க யாராலயும் ஆகாது மாமா.. பிரச்னையைத் தள்ளிப் போடலாமில்ல.. அதுக்கு வழி கண்டு பிடிச்சுட்டேன்.."

"என்னா வழி..?" ஒரு தினுசான குரலில் கேட்டார் சுதர்சனம்..

அவரைச் சொல்லியும் குற்றமில்லை.. அவருடைய தங்கை பெற்ற அருமந்த புத்திரன் ரகுநந்தன் கண்டுபிடிக்கும் வழிகள் எல்லாம் அந்த ரகமானவை..

"இப்ப நீங்க சொன்னீங்களே.."

"என்னத்தைச் சொன்னேன்..?"

"சின்னப் புள்ளைத்தனமா குழந்தைப் புள்ளையாட்டம் பேசறேன்னு.."

"அட..! இந்தக் கழுதையை எப்பவும் நான் சொல்லிக் கிட்டுத்தான இருக்கேன்..? நீ ஆளுதான் வளந்திருக்க.."

புத்தி வளரவில்லை.. என்பதைச் சொல்லால் சொல்லாமல் அறிவுறுத்தினார் சுதர்சனம்.. ரகுநந்தனுக்கு கோபம் தலைக்கேறியதுதான்.. வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டான்.. அவனது தந்தையை எதிர்க்க அவனுக்கு இருக்கும் ஒரே ஆதரவு சுதர்சனம்தான்.. வேறு எவரும் தசரதனின் முன்னால் நின்று பேசத்

தயங்குவார்கள்.. சுதர்சனம் தங்கையைக் கட்டிக் கொடுத்திருக்கும் மைத்துனர் என்ற ஹோதாவில் ஓங்கிப் பேசுவார்.. ஆதலினால் அவரைப் பகைத்துக் கொள்ள முடியாது..

ரகுநந்தன் அரும்பாடு பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தான்.. அது புரியாத சுதர்சனத்தின் மகன்களான கண்ணனும் கோகுலும் போனைத் தந்தையிடமிருந்து பிடுங்கி மாறி மாறி ரகுநந்தனிடம் பேசிக் கலாய்த்தார்கள்..

"என்ன மாமா.. அம்புஜம் பெரியம்மா வீட்டுக்கு வாக்கப்பட்டுப் போகப் போறிகளாமே.." இது கோகுல்.. சின்னவன்..

"அடேய் ரகு.. உன் ஆளு சித்ரா உனக்காக வயக்காட்டில வெயிட் பண்ணிக்கிட்டு இருக்காளாம்டா மச்சான்.. ஓடோடி வாடா மச்சான்.. பாவம் எந்தங்கச்சி.. உன்னப் பாக்காம ஒரு சுத்துப் பெருத்துப் போயிட்டாளாம்.. அவள கண்ட்ரோல் பண்ற அங்குசம் நீ மட்டும்தானாம்.. அவ பிளிறிப்பிளிறி அழுகிறத பாக்கிற சக்தி எனக்கு இல்லைடா.." - இது கண்ணன்.. பெரியவன்.. ரகுநந்தனை விட ஆறுமாதங்கள் மூத்தவன்.. இருவரும் வாடா போடா என்று பேசிக் கொள்வார்கள்..

அவனாவது பரவாயில்லை.. சம வயது.. நண்பன்.. இந்தக் கோகுல் அவர்கள் இருவரையும் விட இரண்டு வயது இளையவன் .... அடக்கி வாசிக்க வேண்டாமா..? அண்ணன்காரனுடன் சேர்ந்து அவனும் ரகுநந்தனை வாருகிறானே..

"அண்ணா.. மாமாவை பறந்து வரச் சொல்லு.. இங்க அம்புஜம் அத்த மருமகனுக்கு மறுவீட்டு விருந்து வைக்க காடை, கவுதாரி, கோழின்னு பறவையினத்த பட்டியல் போட்டுக்கிட்டு இருக்கு.." கோகுல் குரல் கொடுக்க..

"அடேய்.." என்று கண்சிவந்தான் ரகுநந்தன்..

"ஆத்தி.. மச்சான் கோபத்தில கொதிக்கறான்ப்பா.. போனே இந்தச் சூடு சுடுது.." கண்ணன் போனை சுதர்சனத்திடம் கைமாற்றி விட்டான்..

"மாமா.."

"மாப்பிள்ள.."

"எந்தங்கச்சி மகன் இன்னும் சின்னப் புள்ளதான்.. குழந்தைப் பயதான்.. அதனால இப்போக் கல்யாணம் வேண்டாம்ன்னு உங்க தங்கச்சி புருசன்கிட்டச் சொல்லி வையுங்க.."

"சொல்லலாம் மாப்புள்ள.. அதுக்கு குழந்தைப் பயலுக்கு எப்புடி பேங்க் மேனேஜர் உத்தியோகத்தைக் கொடுத்தாங்கன்னு எந்தங்கச்சி புருசன் கேட்டு வைப்பாரே.. என்ன பதிலைச் சொல்ல..?"

"என்னத்தையாவது சொல்லி வையுங்க மாமா.."

"சரிடா மாப்புள்ள.. என்னத்தைச் சொல்றதுன்னு நான் யோசிச்சு வைக்கறேன்.. நீ இப்ப உடனடியா லீவைப் போட்டுட்டு அடுத்த பஸ்ஸைப் பிடிச்சு ஊரு வந்து சேரு.."

"என்னாத்துக்கு..? நான் வர மாட்டேன்.. அங்க காத்திருக்கிற ஆபத்தைத் தெரிஞ்சபின்னாலும் ஊரு வந்து சேர நான் என்ன முட்டாளா..?"

"நீ புத்திசாலிதான் மாப்பிள்ள.. அதனாலதான் பேங்க்கு பரிட்சை எழுதிப் பாஸ் பண்ணி மேனேஜரா உக்காந்திருக்கிற.. ஆனாப் பாரு.. உங்கம்மாவுக்கு சுகமில்லைன்னு உங்கப்பா பண்ணுற போனைக் கேட்ட பின்னாடியும் நீ புறப்பட்டு வராம சென்னையிலேயே ஒளிஞ்சிருந்தியன்னா எந்தங்கச்சி புள்ளய வளத்து வைச்சிருக்கிற லட்சணத்தைப் பாருன்னு ஊரே ஒன்னு கூடி கும்மியடிக்கும்.. தாய் மேல பாசமில்லாத மகன்னு நாக்கு மேல பல்லப போட்டு பேசி வைக்கும்.. தேவையாடா மாப்புள்ள..?"

சுதர்சனம் சிக்கலில் கோர்த்து விட்டார்.. ரகுநந்தன் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டான்.. அம்புஜம் அத்தையின் மகளை நினைத்தாலே அவனுக்கு அடி வயிறு கலங்கியது.. குளிரும் காய்ச்சலும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு சேர்ந்து வந்தது..

"மாமா.." என்றான் அழ மாட்டாத குறையாக..

"ஆம்பள அஞ்சக் கூடாதுடா மாப்புள்ள.. சிங்கம்டா நீ.. தாய் மாமன் நானிருக்கேன்.. நீ கிளம்பி வா.. என்ன ஆனாலும் நீ அந்த சிற்றானைக்குட்டி கழுத்தில தாலியைக் கட்டாமத் தப்பிக்க நான் வழியக் காட்டறேன்.."

யாமிருக்கப் பயமேன் என்று சுதர்சனம் அபயம் கொடுத்தாலும் அஞ்சாமல் கிளம்ப ரகுநந்தனால் முடியவில்லை.. தசரதன் சுமித்ராவுக்கு உடல்நிலை சரியில்லை.. ஓடி வா.. என்று டிராமா போட்ட போது கண்ணகி காற்சிலம்பை தூக்கி எறிந்ததைப் போலக் கையிலிருந்த செல்போனைத் தூக்கிக் கடாசப் போனான்.. சுக்கு நூறாய் உடையப் போவது அவனது செல்போனும், பணமும்தான் என்பதைக் கருத்தில் கொண்டு மனதைத் திடப்படுத்திச் செல்போனைக் கைப்பற்றிக் காதுக்குக் கொடுத்தான்.

"இப்ப என்னை என்னதான் செய்யச் சொல்றீங்கப்பா.."

"பெத்த தாய்க்கு உடம்பு சரியில்லைன்னு சொல்றேன்.. இந்தா இருக்கிற சென்னையில இருந்து ஓடி வராம என்ன செய்யச் சொல்கிறீங்கன்னு என்கிட்டக் கேள்வி கேட்கிற.."

"ஏன்ப்பா என்னைப் பெத்த தாய் உங்களுக்கு என்ன வேணும்..?"

"ஏண்டா டேய்.. இதுக்காடா அவ உன்னைப் பெத்து வளர்த்தா..? உன்னைப் பெத்த தாய், எனக்குத் தாலி கட்டின பெண்டாட்டிடா.."

"கட்டின பெண்டாட்டியைக் காய்ச்சலில் விழ வைத்துட்டு டாக்டருக்குப் போனைப் போட்டு வைத்தியம் பார்க்காம புள்ளைக்கு போனைப் போட்டு புறப்பட்டு வாங்கறிங்க..

எல்லாம் என் மாமனைச் சொல்லனும்.. அழகுத் தங்கச்சிக்கு அருமையான மாப்பிள்ளையைத் தேடிப் புடிச்சுக் கட்டி வைச்சிருக்காரு.. என்னத்தைச் சொல்ல.. நான் கிளம்பி வந்துதான் டாக்டர்கிட்ட கூப்பிட்டுக்கிட்டுப் போகனுமா..? இல்ல.. தாலிகட்டின கடமைக்கு நீங்க ஒரு எட்டுக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டு வர்றீங்களா..?"

நறுக்கென்று நான்கு வார்த்தைகள் பேசிவிட்டு போனை வைத்தவனின் மனம் ஆறவில்லை.. செல்போனும் ஓயவில்லை.. நொடிக்கு ஒருதரம் வீறிட்டு அவனை ஊருக்குக் கிளம்பிவரச் சொன்னது.. மெடிகல் லீவைப் போட்டு விட்டு வரச் சொன்னதற்கு, என் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லையென்றால் நான் எதற்க்காக மெடிகல் லீவு போட வேண்டும் என்று கேட்டு விட்டு வாங்கிக் கட்டிக்கொண்டான். தசரதன் ருத்ரனாக மாறிக் கத்தியதில் அவர் சொன்ன மெடிகல் லீவைப் போட்டு விட்டு ஊரைப் பார்த்துக் கிளம்பிக் கொண்டிருக்கிறான்..

3

அஞ்சன லட்சுமியின் அழகான விழிகளிரண்டும் கண்ணீரில் மூழ்கியிருந்தன.. ஆட்டோ டிரைவர் பார்த்து விடக்கூடாது என்று நாசுக்காக கைக்குட்டையால்

அவளது கண்ணீரை ஒற்றியெடுத்தாள்.. எங்கே போவது என்று தெரியவில்லை.. குறிக்கோள் இல்லாத பயணத்தை மேற்கொள்வாள் என்று அவள் ஒர்நாளும் நினைத்ததில்லை.. சென்னையின் போக்குவரத்து நெரிசலை வெறுமையாக பார்த்தாள்.. எதையோ தொலைத்து விட்ட சோகம் அவள் முகத்தில் அப்பியிருந்தது.. தொலைந்து போன கனவுகளைத் துழாவுபவளைப் போல அவளது பார்வை சூன்யத்தை வெறித்தது.. அவள் மீது சாய்ந்திருந்த பெட்டி அடியில் உருளும் சக்கரங்களுடன் அவளது மனதைப் போலவே ஆடியது..

'எங்கே போகிறேன்..?' அவளது மனம் கேட்டது..

கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.. அவளுடன் படித்த தோழி ஒருத்தி சென்னையில் இருந்தாள்.. அவளைத் தேடித்தான் அஞ்சனலட்சுமி சென்னைக்கு வந்திருந்தாள்.. வளசரவாக்கத்தில் அந்தத் தோழியின் வீடு இருப்பதாக முகவரி சொன்னது.. அங்கே போய்ப் பார்த்தால், தோழியின் குடும்பம் அமெரிக்காவுக்குச் சென்று விட்டதாம்.. வீடு பூட்டியிருந்தது.. தினமும் தொடர்பில் இருக்கும் அளவுக்கு அவள் நெருங்கிய தோழியில்லை.. சென்னைக்கு வருகிறேன் என்று சொல்ல அஞ்சனாவுக்கு நேரமும் இல்லை.. கால் போன போக்கில் ஓடி வந்தவள் கண்ணில் பட்ட பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ்சில் ஏறினாள்.. சென்னை தோழியின் நினைவு  வர, அவளைத் தேடி வந்து விட்டாள்..

'பயணங்கள் முடிவதில்லைன்னு சொல்கிறதைப் போல என் பயணமும் முடியவே முடியாதா..? என்னைக் காப்பாத்திக்க பெங்களூரை விட்டு ஓடி வந்தேன்.. இப்ப சென்னையில இருந்து எங்கே போறதுன்னு தெரியாம போய்கிட்டு இருக்கேன்.. எனக்கு ஏன் இந்த விதி..? நீரோட்டம் போல ஓடிக் கொண்டிருந்த என் வாழ்க்கை ஏன் தடம் மாறியது..? பெத்தவங்களை விட மேலா, தாய்ப்பறவை தன் சிறகுகளுக்கு அடியில் பொத்திப் பொத்தி பாதுகாத்துத் தன் குஞ்சுகளை வளர்ப்பதைப் போல என்னை வளர்த்த என் தாத்தா ஏன் கோமாவில் விழுந்தார்..?'

காலவெள்ளம் எப்படியும் கரை சேர்க்கும் என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொள்ள முடியாமல் சோர்ந்து ஆட்டோவின் கம்பியில் சாய்ந்தாள் அஞ்சனலட்சுமி.. பக்கத்தில் போன ஆட்டோவிலிருந்த ரகுநந்தன் அவளை ரசித்துப் பார்த்ததை அவள் பார்க்கவில்லை.. கடந்த கால நினைவுகளில் அமிழ்ந்திருந்தாள்..

அவள் நந்தவனத்தில் உலவும் தேவதையாக இருந்தாள்... அவளைச் சுற்றிலும் மலர் முகங்கள் மட்டுமே பூத்திருந்தன.. ரோஜாக் கூட்டமாக உறவினர் கூட்டம் அவளை

அரவணைத்திருந்தது.. அப்போதைய அவளின் இருப்பு பாதுகாப்பானதாக பெரிய கோட்டைச் சுவர்களின் மத்தியில் உள்ள அரண்மனையில் வாழும் இளவரசியைப் போல இருந்தது.. அவளது சொல்லே வாக்குறுதி.. அதை கேள்வி கேட்பவர் எவரும் இல்லை..

அன்றைய அவள் எளிதில் அணுக முடியாதவளாக இருந்தாள்.. அச்சம் என்பதை அறியாதவளாக இருந்தாள்.. அவளுக்கான நந்தவனம் வழிவழியாக வந்திருந்தது.. அதனுள் மறைந்திருப்பது விலங்குகள் என்பதை அவள் அறிவாள்.. முற்றிலும் அவை நரிகளின் கூடாரமாக மட்டுமே இருந்தது என்பதை அறியாள்..

அந்த நரிக்கூட்டம் சிங்கக் கூட்டம் போல வேடமிட்டிருந்தது அவளிடம் பாவனைகள் செய்தது.. ஆதுரமாய் அவளை அணைத்து உயிர் காக்கும் உறவுகள் போல போலியாய் பாசவலைகளைப் பின்னியது.. பின்னொரு நாள் அவள் அனைத்தும் ஆட்டம் கண்டு அதிர்ந்து உட்கார்ந்திருந்த பொழுதில் வேடம் கலைத்து ஊளையிட்டது..

அவள் அனைத்தையும் விடுத்து ஓடிக் கொண்டிருக்கிறாள்.. இலக்கில்லாத அம்பின் பயணம் போல அவளது பயணம் அமைந்திருக்கிறது. ஆலமரமாக அனைவரையும் ஆதரித்த வம்சத்தின் குருத்து, நிழல் தேடி நெடும்பயணம் செய்வது விதியின் விளையாட்டு.. காலத்தின் கோலம்.. வாழ்க்கையின் மறுபக்கம்.. இப்படியும் ஒரு நாள் வந்திருக்கிறது..

அவளுடைய நந்தவனத்தை நிலத்துக்குள் புதைக்க முற்படுகிறது அந்தக் கூட்டம்.. அவளை கடலுக்குள்.. தப்பியோடி அவள் ஒளிந்து கொள்ள இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.. என்றேனும் புரண்டு எழும் நந்தவனம் அவளைத் தேடக் கூடும்.. உறக்கமில்லாத அவளது இரவுகள் துயிலை உடனழைத்து அவள் தூங்க மடி காட்டும்.. நிலவும் அவளும் ஒருவருக்கொருவர் துணைக்கு நிற்கும் இப்புவியில் அவளை உறங்கச் சொல்லி மடி தாங்க யாருமில்லை.. இருக்கும் ஓர் ஜீவனும் நினைவில்லாமல் கண்மூடிக் கிடக்கிறது..

கண்களில் வழிய முற்பட்ட கண்ணீர் கைக்குட்டையில் மறைந்து கொள்கிறது.. இமைகளைச் சிமிட்டி அவள் பெருமூச்சுக்களுக்குள் தன் துயரங்களைப் புதைத்து கொண்டாள்.. அவள் நந்தவனத்தின் இளவரசி.. புரண்டிருக்கும் அவளது வனம் அவளைத் தேடி அரவணைத்துக் கொள்ளும் வரை ஒளிந்திருப்பது அவசியம்.. இதை இளவரசிகள் செய்துதான் ஆக வேண்டும்.. மலர் வனங்களில் ஊஞ்சலாடும் வளைகரங்கள் காலத்தின் கட்டாயத்தில் வாளேந்துவதும் உண்டு..

அஞ்சனலட்சுமி அமர்ந்திருந்த ஆட்டோ கோயம்பேடு பேருந்து நிலையத்துக்குள் விரைந்து நின்றது.. அவள் இறங்க வேண்டும் என்ற நினைவில்லாதவளாக எங்கோ வெறித்துக் கொண்டிருந்தாள்.. அவள் இப்போது இறங்குவாள்.. அப்போது இறங்குவாள் என்று காத்திருந்த ஆட்டோ டிரைவர் அவள் இறங்கும் வழியைக் காணோமே என்று பொறுமையிழந்து குரல் கொடுத்தான்..

"அம்மா.. கோயம்பேடு பஸ்ஸ்டாண்ட் வந்தாச்சு.. இறங்கி ஆட்டோவைக் கட் பண்ணினா நான் அடுத்த சவாரியைப் பார்த்துக்கிட்டு போய்கிட்டே இருப்பேன்.."

'இறங்கனுமா..? இங்கேயா..?'

திகைப்புடன் கோயம்பேடு பேருந்து நிலையத்தைப் பார்த்தாள் அஞ்சன லட்சுமி.. அங்கே இறங்கி என்ன செய்வது என்று புரியவில்லை.. ஏன் இங்கே வந்தாய் என்று ஆட்டோ டிரைவரிடம் கேட்க முடியாது.. வேறு எங்கு போக என்று அவன் கேட்டு விட்டால் இவளிடம் பதிலில்லை.. ஆட்டோக்காரன் மீதும் தவறில்லை.. இவள் ஆட்டோவில் ஏறிய போது..

"எங்கே போகனும்மா..?" என்று கேட்டான்தான்..

இவள்தான் கடந்து போன டவுன் பஸ்ஸின் முகப்பு போர்டைக் கவனித்து விட்டு 'கோயம்பேடு பஸ்ஸ்டாப்' என்று சொல்லிவிட்டாள்..

அஞ்சனலட்சுமி பெட்டியுடன் கீழே இறங்கினாள்.. ஹேண்ட் பேகை சரி செய்தபடி யோசனையுடன் நின்றாள்.. அவள் இப்போது பணம் தருவாள்.. அப்போது பணம் தருவாள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த ஆட்டோ டிரைவர் பொறுமையிழந்தவராக..

"ஏம்மா.. ஆட்டோவில வந்தா பணம் கொடுக்கனும்னு தெரியாதா..? என்னவோ பஸ்ஸ்டாண்டை விலைக்கு வாங்கப் போறதைப் போல வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்க.. பணத்தை எடும்மா.." என்று அதட்டினான்.

அதுபோன்ற அதட்டல்களுக்குப் பழக்கப் பட்டிராத அஞ்சனலட்சுமியின் உடல் தூக்கிப் போட்டது.. அவள் யாரென்பதை அவன் அறிவானா..? பெங்களூரில் பளிங்கு மாளிகை போல பரந்து விரிந்திருக்கும் அவளது பங்களாவில் அவள் ஓட்டுவதற்காக வரிசைகட்டி நிற்கும் வெளிநாட்டுக் கார்களின் விலை என்னவென்பதை கணக்கிட்டால் போதும்.. அவன் மயக்கம் போட்டு விழுந்து விடுவான்.. அப்பேற்பட்ட அஞ்சனலட்சுமியிடம் உரக்கப் பேசுகிறான்..

அஞ்சனலட்சுமி அமைதியாக ஆட்டோக்காரனின் முகத்தை ஒர் துறவியைப் போல பற்றற்று பார்த்தாள்.. பதுமைபோல ஹேண்ட் பேகிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.. அவளது தோற்றத்திற்குப் பொருத்தமில்லாத அந்தப் பார்வையில் ஆட்டோக்காரன் விசித்திரமாக அவளைப் பார்த்தான்.

'இந்தப் பொண்ணு என்ன, இமயமலை உச்சியில உக்காந்து தவம் செய்யப் போறதைப் போலவே பாத்து வைக்குது..'

அடுத்து அவளைப் பற்றி யோசிக்காமல்.,.

"ஆட்டோ வருமாப்பா.." என்று வந்த நபரிடம்..

"நீங்க எங்கே போகணும்..?" என்று கேட்டபடி கிளம்பி விட்டான் ஆட்டோக்காரன்..

ஒரு பெருமூச்சுடன் குனிந்து பெட்டியை எடுத்துக் கொண்ட அஞ்சனலட்சுமியின் மனதில் எங்கே போவது என்ற கேள்வி வந்தது.. அதை உட்கார்ந்து யோசிக்கலாம் என்று அவள் பேருந்து நிலையத்துக்குள் நடந்தாள்.. சிந்தனையுடன் நடந்தவளின் மீது மோதி வைத்தான் ரகுநந்தன்.. அவனுக்கும் ஆட்டோக்காரனுக்கும் இடையில் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது..

"எங்கூட சண்டை போடறது பத்தாதுன்னு அந்தப் பொண்ணுமேல ஏன்ய்யா விழுந்து வைக்கிற..?"

அழகான பெண்மீது ரகுநந்தன் மோதி விட்டானே என்ற பொறாமையில் எகிறினான் ஆட்டோக்காரன்..

"விழுந்து வைக்கிறேனா..? யோவ்.. உன்கூட ஓரியாடினதில தெரியாம மோதிட்டேன்ய்யா.. இதுதான் சாக்குன்னு நீ பேர் கட்டிவிடக் கிளம்பிராதே.. ஏங்க.. நான் நீங்க வர்றதைப் பார்க்கவே இல்லைங்க.."

பதட்டத்துடன் விளக்கம் சொல்லியபடி அவளைத் திரும்பிப் பார்த்தவன் அயர்ந்து நின்று விட்டான்..

'இவ அந்த ஆட்டோவில வந்தவ இல்ல..'

அசைந்து ஆடி வந்த ஆட்டோவைத் திருவாரூர் தேர் என்று இவன் ஏறி வந்த ஆட்டோக்காரன் விமரிசித்தான்.. அவளைப் பார்த்தால் தேரில் வந்த திருமகளைப் போன்ற பொழிவுடன்தான் இருந்தாள்.. இவனது மனம் மயங்க யத்தனித்தது.. அதை உணர்ந்து விட்டான் இளம் வயது ஆட்டோக்காரன்.. இனம் இனமறியும்..

"இன்னாய்யா.. போஸ் கொடுத்துக்கினு நிக்கிற..? நீ ஒருத்தன்தான் சவாரியா.? ஊருப்பட்ட சவாரி இருக்குய்யா.. காசை எடு.."

"காசா..?"

"காசுன்னா இன்னான்னு தெரியாமலா நீ ஆட்டோவில குந்திக்கினு வந்த..? வேகமாய் போகாதேன்னு வித்தாரம்

பேசினவனுக்கு காசுன்னா இன்னான்னு தெரியாதா..? ஆருகிட்ட காது குத்தற..? காசுன்னா துட்டு சார்.. துட்டு.."

ஆட்டோக்காரன் ராகமிழுத்தான்.. அதில் அஞ்சனலட்சுமி துயரம் மறந்து சிரித்து விட்டாள்.. அதுதானே ஆட்டோக்காரனுக்கு வேண்டும்.. ரகுநந்தன் அவள் மீது மோதிக் கவனிக்க வைத்தால் இவன் பேசிக் கவனிக்க வைக்க மாட்டானா..?

4

ரகுநந்தனுக்கும் அது புரிந்து விட்டது.. அவன் அம்புஜம் அத்தையின் பெண் என்றால்தான் அரள்வான்.. மற்றபடி ஊரில் உள்ள அழகிய பெண்களின் மீது மன்மத பாணத்தை ஏவுவான்.. அவனுக்கா அவனை வித்தாரம் என்று சொல்லிவிட்டு ஆட்டோக்காரன் செய்யும் வித்தாரம் என்னவென்பது தெரியாது..?

"ரொம்பப் பேசாதே.. எனக்கும் தெரியும்.." ரகுநந்தன் முறைத்தான்..

அவன் எனக்கும் தெரியும் என்று சொன்னது காசு, பணம், துட்டு, மணி மணியல்ல என்பது ஆட்டோக்காரனுக்கும் தெரியும்.

"உனக்குத் தெரிஞ்சிருக்கும்ன்னு எனக்கும் தெரியும்.." ரகுநந்தனின் பாணியிலேயே அவன் பதில் சொன்னான்..

"வம்பு வளர்க்கிறயா..?"

"ஆமாய்யா.. அத வளர்க்கனும்னு எனக்கு நேர்த்திக்கடன் பாரு.. வளர்க்கிறேன்.. துட்ட எடுத்து வைச்சுட்டுப் போவியா.. அத விட்டுட்டு பக்கத்து வீட்டுக்காரன்கிட்ட சண்டை வலிக்கிறதைப் போல ஆட்டோக்காரன்கிட்ட சண்டை வலிக்கிற.."

"வலிப்பா..?"

சென்னை பாஷையில் சண்டை வலிப்பது என்றால் சண்டை போடுவது என்று அர்த்தமாகும்.. ரகுநந்தன் திருவாரூர்காரன்.. அட்சர சுத்தமாகத் தமிழ் பேசுகிறவன்.. அவனுக்கு இது தெரியவில்லை.. அஞ்சனலட்சுமிக்குத் தெரிந்திருந்தது.. அவள் சும்மாயிருக்காமல்..

"சண்டை வலிக்கிறதுன்னா சண்டை போடறதுன்னு மீனிங்.." என்று ரகுநந்தனுக்கு விளக்கம் சொன்னாள்..

"ஓ.."

உதட்டைக் குவித்து 'ஓ' போட்ட ரகுநந்தன் அவளை சுவராஸ்யமாக பார்த்து வைத்தான்..

அந்த சுவராஸ்யம் அவள் சொன்ன விளக்கத்தினால் வந்ததல்ல என்பதில் ஆட்டோக்கரனின் காதுகளில் புகை வந்தது.

"யோவ்.. ஆங்கே 'ஓ' போடறது இருக்கட்டும்.. முதல்ல என் ஆட்டோவை கட் பண்ணு.."

"ஆட்டோவை.. கட் பண்ணனுமா..?"

திரும்பவும் ரகுநந்தன் விழிக்க இப்போது அஞ்சனலட்சுமி வாய்முடி சிரித்தாள்.. ஆட்டோக்காரனின் வயிற்றெரிச்சல் அதிகமானது..

"இதுவேறயா..? ஆட்டோவைக் கட் பண்ணனும்னா காசைக் கொடுத்துக் கட் பண்ணனும்னு அர்த்தம்ய்யா.. இதுக்கும் இவங்ககிட்ட விளக்கம் கேட்டுக்கிட்டு இருக்காதே.. வெறுத்துப் போகுது.. நீ பாட்டுக்கு கடப்பாரையை எடுத்துக்கிட்டு வந்து ஆட்டோ மேல கடாசி கட் பண்ணிருவ போல.. பாடுபட்டு வாங்குன ஆட்டோய்யா.."

"அதை ஏன் என்கிட்டச் சொல்ற..?"

"நீ கொடைவள்ளல்.. இன்னும் நாலு ஆட்டோ வாங்கிக் கொடுப்பன்னுதான்.. யோவ்.. தொண்டத்தண்ணியக் குறைக்காம காசைக் கொடு.. நான் பொழப்பப் பார்க்கணும்.." என்று சொல்லியபடி அஞ்சனலட்சுமியை பார்த்தான் ஆட்டோக்காரன்.

இதுதான் உன் பிழைப்பா என்று கேட்டுவிட வேண்டும் போல இருந்தது ரகுநந்தனுக்கு..

'பொழப்பப் பார்க்கனும்னு சொல்லிட்டு இந்தப் பொண்ண உத்து உத்துப் பார்த்து வைக்கிறான்.. பரதேசி..'

"யோவ்.. நான் சொல்றது உன் காதில் விழலையா..? பொழப்பப் பாக்கப் போகணும்ய்யா.. பொட்டிய வைச்சுட்டு பணத்த எடு.. இப்புடிப் படுத்தி எடுக்கிறயே.. காலையில எழுந்திருச்சதும் யார் மூஞ்சியிலே முழிச்சேனோ.. வில்லங்கமான சவாரியா வந்து சேருது.."

இதற்கும் அஞ்சனலட்சுமி புன்னகைக்க, 'இவ யாரு பக்கம்..?' என்று யோசித்தான் ரகுநந்தன்..

அவன் பகடி பேசினாலும் ரசித்துச் சிரிக்கிறாள்.. ஆட்டோக்காரன் பேசினாலும் ரசித்துச் சிரிக்கிறாள்.. யாராவது ஒருவர் பக்கமாக நிற்க வேண்டாமா..?

ரகுநந்தன் ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தபடி ஆட்டோக்காரனிடம்..

"சந்தேகமே வேணாம்.. உன் மூஞ்சியிலதான் முழிச்சிருப்ப.. உலகத்தில இருக்கிற ஒட்டு மொத்த வில்லங்கமும் உன் மூஞ்சியிலதான் குடியிருக்கு.. என்ன.. எழுந்தவுடனே கண்ணாடி பார்த்தியா..?" என்றான்..

அவன் எதிர்பார்த்ததைப் போலவே அஞ்சனலட்சுமி இதற்கும் சிரித்தாள்..

"பாருய்யா.. அழகுசுந்தரம் பேச வந்துட்டாரு.. ஆமாய்யா ... வில்லங்கம் என் மூஞ்சியில குடியிருக்கு.. நான் அதுகிட்ட வாடகை வசூலிச்சுக்கிட்டு இருக்கேன்.. தெரியுதில்ல.. எங்கிட்ட வம்பு வைச்சுக்காதே.."

"உங்கிட்ட வம்பு வைச்சுக்கிட்டாலும்.."

ரகுநந்தன் ஒருவழியாக பணத்தை எடுத்துக் கொடுத்தான்.. அடுத்த சவாரி ஆட்டோவில் ஏறிவிட.. ஆட்டோக்காரன் அஞ்சனலட்சுமியைப் பிரிய மனமில்லாமல் பெருமூச்சு விட்டபடி ஆட்டோவில் ஏறிக் கிளம்பினான்..

அதற்கு மேல் வேடிக்கை பார்க்கும் பாவனையில் நேரத்தைக் கடத்த முடியாது என்று அன்னலட்சுமியும், வம்பு வளர்த்து காலம் கடத்த முடியாது என்று ரகுநந்தனும் பெருமூச்சு விட்டபடி தம்தம் பெட்டிகளை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள்.. அஞ்சனலட்சுமியின் பெட்டியும் ரகுநந்தனின் பெட்டியும் ஒன்று போல இருப்பதைக் கண்ட ரகுநந்தன்.

"என்னங்க.. உங்க பெட்டி என் பெட்டி போலவே இருக்கு.." என்றான்..

அவனைத் திரும்பிப் பார்த்த அஞ்சனலட்சுமி..

"இல்லைங்க.. உங்க பெட்டிதான் என் பெட்டி போலவே இருக்கு.." என்று கண்களில் சிரிப்போடு சொன்னாள்..

'இவளுக்கு என்னைப் பார்த்தால் ஜோக்கர் போல இருக்கா..?'

மனதுக்குள் வெகுண்டாலும் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல் பேச்சை வளர்த்தான் ரகுநந்தன்.. அழகான பெண்ணிடம் பேசும் வாய்ப்பை இழப்பதா..?

அவனே பாவம்.. திருவாரூரில் பேங்க் மேனேஜராக இருந்தவன் சிற்றானை சித்ராவிற்குப் பயந்து, சென்னைக்கு வாலண்டியராக டெபுடேசன் வாங்கிக் கொண்டு ஓடி வந்திருந்தான்.. வந்த இடத்திலாவது நச்சென்று நான்கு பெண்களைப் பார்த்து மனதை தேற்றிக் கொள்ளலாம் என்று இருந்தவனை சுண்டி இழுத்து திருவாரூருக்கு ஓடி வர வைத்திருக்கிறார் திருவாளர் தசரதன்.. காய்ந்திருக்கும் காளை மாடு சருகையே மேய்ச்சல் பார்வை பார்க்கும்.. பச்சம் பசும் சோலையைக் கண்டால் சும்மா இருக்குமா..?

"ஹி..ஹி.. பூவை 'பூ'ன்னும் சொல்லலாம்.. புஷ்பம்ன்னும் சொல்லலாம்.." முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டினான் ரகுநந்தன்..

இப்போது எதற்காக இந்த உவமானத்தைச் சொல்கிறான் என்று வினோதமாக அவனைப் பார்த்து வைத்தாள்

அஞ்சனலட்சுமி.. அவ்வளவுதானா என்று ஏமாற்றமாக இருந்தது ரகுநந்தனுக்கு.. அவன் பேச்சை வளர்க்க விரும்பினான்.. இருந்திருந்து அழகிலும் அழகான பெண்ணொருத்தியிடம் பேசும் வாய்ப்பு அவனுக்கு கிடைத்திருக்கிறது.. அதை நழுவ விடுவதா..? இதோ.. பஸ்ஸில் காலை வைத்தால் அவன் யாரோ.. அவள் யாரோ.. திருவாரூரில் அவனுக்காக காத்திருக்கும் பஞ்சாயத்திலிருந்து தப்பிப்பதற்குள் அவனுக்கு தாவு தீர்ந்து விடும்.

"எந்த ஊருக்குப் போகிறீங்க..?"

விடாமல் அவன் பேச்சுக் கொடுத்ததில் புருவங்களை நெறித்தபடி அவள் அவனை முறைத்தாள்..

"அது எதுக்கு உங்களுக்கு..?"

பட்டென்று அவள் கேட்டு விட்டதில் அவன் முகம் விழுந்து விட்டது..

"ஐ'ம் ஸாரி.. தெரிந்துக்கலாம்ன்னு கேட்டேன்.. தப்பான இண்டென்சனில கேட்கலை.." முணுமுணுத்தான்..

அஞ்சனலட்சுமிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. அவனைப் பார்க்க பாவமாக இருந்து.. கண்ணியமான தோற்றம்.. ஆர்வமான பார்வை என்றாலும் ஆபாசமில்லாத நேர்கொண்ட பார்வை.

'இருக்கட்டுமே.. அதுக்காக பெர்சனலாப் பேசியாகனுமா..?'

அவளுக்கு அலுப்பாக இருந்தது.. எங்கே போவது என்று தெரியாத நிலையில் அவள் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் சுற்றிக் கொண்டிருப்பதை முன்பின் தெரியாத வாலிபனிடம் பகிர்ந்து கொள்ள முடியுமா..?

"இட்ஸ் ஆல்ரைட்.." அவனைச் சமாதானப் படுத்துவதைப் போலச் சொன்னாள்..

ரகுநந்தனின் முகம் மலர்ந்து விட்டது.. என்ன மாதிரியான ஆள் இவன் என்று மனம் கனிந்தாள் அஞ்சனா.. ஒரு சிறு சொல்லைக் கூடத் தாங்க முடியாமல் முகம் வாடுகிறான்..

பேச்சுக்காக சமாதானப் படுத்துவதைப் போல ஒரு வார்த்தை சொன்னதும் அத்தனையையும் மறந்து விட்டு முகம் மலர்கிறான்..

அஞ்சனலட்சுமி அவனைப் போன்ற ஆண்களைப் பார்த்ததில்லை.. அவளைச் சுற்றியிருந்த வட்டாரத்தில் அவளைக் கண்டதும் மரியாதை கலந்த தோற்றத்துடன் கைகட்டி வாய் பொத்தாத குறையாக வணக்கம் சொல்லும் ஆண்கள்தான் அதிகம்.. உறவினர்களில் வணக்கம் மட்டும்தான் போட மாட்டார்கள்.. மற்றபடி அதே தோற்றம்தான்.. அத்தனையும் வெளிவேடம் என்பதை ஒர்நாள் அவள் அறிந்து கொண்டாள்..

'அந்த ஒருநாளை மறக்க முடியுமா..?' அவளது நெஞ்சம் கனத்தது..

ஆடுகளின் தோல்களைப் போர்த்தியிருந்த நரிகளின் ஊளைச் சப்தம் வெளிப்பட்ட நாள் அது.. சிரிப்பது போல முகமும், சிரிப்புக்குப் பின்னால் விசமும் இருப்பதை அவள் அறிந்த நாள் அது.. நம்ப ஒரு ஜீவனில்லை.. உண்மையான உறவென்று யாருமில்லை என்று அவள் மனம் துடிக்க ஓடி வந்த நாள் அது..

'யாரைத்தான் நம்புவதோ பேதைநெஞ்சம்..?

அம்மம்மா.. பூமியிலே யாவும் வஞ்சம்..'

அவளது மனம் வேதனை கொண்ட போது என்னை நம்பலாமே என்பதைப் போல வெள்ளையாக சிரித்து வைத்தான் ரகுநந்தன்..

"மை நேம் இஸ் ரகுநந்தன்.."

ஒன்றாம் வகுப்புப் பையனைப் போல அவன் ஒப்பித்த விதத்தில் கவலை மறந்து அவள் சிரித்தாள்.

'அடுத்து வாட் இஸ் யுவர் நேம்ன்னு கேட்பானோ..' அவள் நினைத்து முடிப்பதற்குள்..

"வாட் இஸ் யுவர் நேம்..?" என்று ஸ்டைலாக (?) நிற்க முயன்றபடி அவன் கேட்டான்..

'இவன் இருக்கானே..' வாயைத் துடைப்பதைப் போல சிரிப்பை மறைத்தபடி நடந்து விட்டாள் அஞ்சனலட்சுமி..

நின்று பேச ஆசைதான்.. அவனைப் போல குணம் கொண்ட மனிதனிடம் பேசினால் அவள் மனதுக்கு ஆறுதலாக இருக்கும்தான்.. அந்த ஆறுதலுக்கு ஆயுள் உண்டா..? அவன் வழிப்போக்கன்.. அவளைக் கடந்து செல்லும் மனிதர்களில் ஒருவன்.. அவனிடம் நின்று பேசி என்ன செய்ய..? அதனால் அவளுக்கான பயன் யாதுமில்லை..

'போறாளே..'

ரகுநந்தன் பெருமூச்சுடன் நின்றான்.. அவனது சட்டைப் பையிலிருந்த செல்போன் இசைத்தது..

'இதுவேற.. இம்சை..' கோபத்துடன் ஆன் செய்து காதில் வைத்தான்.

"டேய் மாப்பிள்ள.." சுதர்சனம் கூவினார்..

"என்ன மாமா.. அத்தை அம்புஜத்துக்கு ஹார்ட் அட்டாக் வந்திருச்சா..? ஆஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்காங்களா..? பிழைக்கிறது கஷ்டம்ன்னு டாக்டர் கைவிரிச்சுட்டாங்களா..?"

"ஆனாலும் உனக்கு இம்புட்டுப் பேராசை ஆகாதுடா மாப்புள்ள.. அடுக்கடுக்கா ஆசைகள அடுக்கிற.. உன் அத்தை அம்புஜத்துக்கு ஹார்ட்டு இருந்தாத்தானேடா அதுக்கு அட்டாக் வரும்.. அதெல்லாம் நொல்ல.. அது குத்துக்கல்லாட்டாம் புருசன் புள்ளைகளோட உன் வீட்டிலதான் டேரா போட்டிருக்குது.."

"இதைச் சொல்லவா போன் பண்ணினீங்க.. தாய்மாமன்னு நீங்க என்னத்தைக் கழட்டறிங்க..?"

"நான் ஒன்னும் சும்மாயிருக்கலைடா.. பக்கத்தில இருந்து கண்காணிச்சாத்தான் தோதா இருக்கும்ன்னு நானும் என் பொண்டாட்டி புள்ளைகளோட உன் வீட்டுக்கு வந்து இறங்கிட்டேன்.. எப்புடி..?"

"இதைத்தான் கழட்டியிருக்கீங்களா..?"

"இப்போதைக்கு இதைத்தான் கழட்டியிருக்கேன்.. மத்ததை அப்பப்ப சந்தர்ப்ப சூழ்நிலையைப் பாத்துக் கழட்டிக்கலாம்.. நீ வந்து சேரு.."

துணைக்கு தாய்மாமனும் திருவாரூருக்கு வந்து இறங்கியிருக்கிறார் என்பதில் தைரியம் வரப்பெற்றவனாக துணிச்சலை வரவழைத்துக்கொண்டு திருவாரூர் பஸ்ஸில் ஏறிவிட்டான் ரகுநந்தன்.. பஸ்ஸிற்குள் பார்த்தால் அஞ்சனலட்சுமி இருந்தாள்..

5

'இங்கே பாருடா.. தேரில் வந்த திருமகள் பஸ்ஸிக்குள்ள இருக்கா..'

ரகுநந்தனுக்கு விசிலடிக்க வேண்டும் போல இருந்தது..

"ஹலோ.." உற்சாகமாக அவளருகில் போனான்..

திருவாரூர் போவது சரியா, தவறா என்ற குழப்பத்துடன் ஜன்னலில் சாய்ந்திருந்த அஞ்சனலட்சுமி அவனது குரலில் உடல் தூக்கிப் போடத் திரும்பிப் பார்த்தாள்..

'இவனா..?'

மனதில் வருவது நிம்மதியா..? ஏன்..?

அஞ்சனலட்சுமி தடுமாறினாள்.. அவனைப் பார்த்தால் அவளுக்கு மலைபோன்ற ஆறுதல் ஏன் ஏற்படுகிறது..? கானகத்தில் வழி தப்பியவளுக்கு வழித்துணை கிடைத்தால் ஏற்படும் சந்தோசம் அவனைக் கண்டதும் அவள் மனதில் பொங்கியது.. அப்போதைக்கு அவளுக்குத் தெரிந்தவன் என்று பக்கத்தில் நிற்பது அவன் மட்டும்தான்.. எப்படித் தெரிந்தவன், எத்தனை காலமாய் தெரிந்தவன்

என்று கேட்டால் மட்டும் திருதிருப்பாள்.. சில நிமிடங்களுக்கு முன்வரை அவன் யாரென்றே அவளுக்குத் தெரியாது.. இப்போதும் அவன் யாரென்று அவளுக்குத் தெரியாதுதான் என்பது வேறு விசயம்.. அவனது பெயர் ரகுநந்தன் என்று அவன் சொல்லியிருந்தான்.. அவள் அதையும் சொல்லவில்லை என்பதும் வேறு விசயம்.. ஆனால், அந்த அளவுக்காவது தெரிந்தவன் என்று ஒருவன் அந்த நொடியில் அவளருகில் நிற்கிறான் என்பதில் அவளுக்குள் ஓர் ஆசுவாசம் ஏற்பட்டது..

"நீங்களும் திருவாரூர்தான் போறிங்களா..?"

ஆமாம் என்பதைப் போல அவள் தலையசைத்தாள்.. அதற்கே அவள் மணிக்கணக்கில் பேசி விட்டதைப் போல அவன் மகிழ்ந்து போனான்..

"நானும் திருவாரூர்தான்ங்க.."

சுவாதீனமாக அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.. அவள் ஆட்சேபிக்கவில்லை..

இரட்டை இரட்டையாக சீட்கள் அமைந்திருக்கும் ஏஸி டீலக்ஸ் பஸ் அது.. பெரிதான சீட்.. அவளருகில் அவன் அமர்ந்திருப்பது அவளுக்கு சங்கடத்தைக் கொடுக்கவில்லை.

"பாருங்களேன்.. நான் சும்மாதான் எந்த ஊருக்குப் போறிங்கன்னு கேட்டேன்.. இப்போப் பார்த்தா நீங்க எங்க ஊருக்குத்தான் வர்றீங்க.."

திருவாரூரில் அவனுக்குக் காத்திருக்கும் ஆபத்தை மறந்து உற்சாகமாக அவளுடன் வாய் வளர்க்க ஆரம்பித்தான் ரகுநந்தன்..

'இவன் ஊர் திருவாரூரா..?'

பேருந்து நிலையத்துக்குள் நடந்தவளுக்கு எங்கு போவது என்று தெரியவில்லை.. எதிரில் திருவாரூர் என்ற போர்டுடன் பஸ் நின்று கொண்டிருந்தது.. அங்கே ஓர் தோழி இருந்தாளே என்று நினைவு வர அஞ்சனலட்சுமி பஸ்ஸில்

ஏறிவிட்டாள்.. சென்னையில் இருந்த தோழி அமெரிக்காவுக்குப் பறந்து விட்டதைப் போலத் திருவாரூர் தோழியும் வேறு எங்கேனும் போயிருக்கலாம்.. அவளுடைய போன் நம்பர்கூட இல்லை.. கோவிலுக்கு எதிரே இருந்த தெரு ஒன்றைக் குறிப்பிட்டு இருந்ததாக ஞாபகம்.. அவள் பெயரும் அவளுடைய தந்தை பெயரும் நினைவில் இருந்தன..

குறிக்கோள் இல்லாத பயணத்தில் அடுத்து பயணிக்க ஒரு ஊர் என்றுதான் பஸ்ஸில் ஏறினாள் அஞ்சனலட்சுமி.. எங்கே போகிறோம் என்று தெரியாமல் ஓடிக் கொண்டிருப்பதை விட ஏதேனும் ஓர் ஊருக்கு பயணம் செய்தால் ஓர் இளைப்பாறுதல் கிடைக்கும்.. அப்படியொரு இளைப்பாறுதலுக்கு அஞ்சன லட்சுமியின் மனம் ஏங்கியது.. அறியாத ஊருக்குப் பயணிக்கும் போது வழித்துணையாக ஓர் தெரிந்த முகம் இருப்பது ஆறுதலான ஒன்றுதானே..

"ஆமாம்.. திருவாரூர்ல நீங்க யார் வீட்டுக்கு வர்றீங்க..?"

அவன் அடுத்த கேள்விக்கணையைத் தொடுத்தபோது திணறிப் போனாள்..

"அதுதான் உங்க சொந்த ஊருன்னு சொல்லிராதீங்க.. அங்கே பிறந்து வளர்ந்தவன் நான்.. உங்களை இதுவரைக்கும் எந்த ஏரியாவிலும் பார்த்ததா ஞாபகமில்லை.. ஸோ.. நீங்க எங்க ஊரா இருக்கவும் முடியாது.. யார் வீட்டுக்காவது விருந்தாளியா வர்றீங்களா..? இல்லை.."

அவன் கேள்வியோடு நிறுத்திவிட்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான்.. எதற்காக இந்தப் பார்வை என்று அஞ்சனலட்சுமி குழம்பிப் போனாள்.. அவன் பார்வை வித்தியாசமாகவும் இருக்கவில்லை..

"என்ன..?" என்று கை குவித்துக் கேட்டாள்..

"கையில குடை இல்லைன்னாலும் பார்க்கிறதுக்கு அச்சு அசல் டீச்சரைப் போலவே இருக்கீங்க.. எங்க ஊருக்கு டீச்சர்

வேலை பார்க்க வர்ரீகளோ.."

அவன் பெரிய கண்டுபிடிப்பைச் சொல்லி விட்டதைப் போல பெருமையுடன் அவளை 'எப்புடி..?' என்று ஓர் பார்வை பார்த்து வைத்தான்.. அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

'என்னைப் பார்த்தா டீச்சரைப் போல இருக்கா..?'

அவளுக்குத் தெரியவில்லை.. கடந்த இரண்டு நாள்களாக அவள் கண்ணாடியை எங்கே பார்த்தாள்..? தப்பியோடும் அவசரத்தில் கைக்குக் கிடைத்த உடைகளையும் முக்கியமான கம்பெனி டாக்குமெண்டுகளையும் ஒரு பெட்டியில் அள்ளிப் போட்டுக் கொண்டு, சுவர் அலமாரியின் லாக்கரில் இருந்த நகைகளையும், பணத்தையும் ஹேண்ட்பேகில் நிரப்பிக் கையில் எடுத்துக் கொண்டு ஓடி வந்தவள் சென்னை ரயில் நிலையத்தின் ஓய்வு அறையில் குளியலறையில் புகுந்து குளித்து உடை மாற்றிக் கொண்டாள்.. அந்த நிலையில் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா..?

"டீச்சர்ன்னா கையில் குடை வைத்திருப்பாங்களா..?"

"சினிமாக்களில எல்லாம் அப்படித்தானே காட்டறாங்க.. நீங்க கடலோரக் கவிதைகள் படம் பார்த்ததில்லையா..? அதில் ரேகா கையில் விரித்த குடையைப் பிடித்துக்கிட்டு அசத்தலா வருவாங்க.."

'இவன் எந்தக் காலத்தில இருக்கான்..?'

பழமையின் மணம் மாறாமல் அதை விரும்பி ரசிக்கும் ரகுநந்தனை இளநகையுடன் பார்த்தாள் அஞ்சனலட்சுமி.. அவள் பார்வையில் அவனது கண்களில் வந்த மின்னலை ரசித்தாள்.. அவளை ரசிப்பதை மறைக்காத ஆர்வத்துடன் அவன் பார்ப்பதையும் ரசித்தாள்.. கத்தரிவெயிலின் மழைத்துளிகள் போல அவனது அறிமுகம் அவளது வெம்மையான நொடிகளை குளிர்ச்சியாக மாற்றியது..

"டிக்கெட்.. டிக்கெட்.." என்றபடி கண்டக்டர் வந்தார்..

"திருவாரூருக்கு இரண்டு டிக்கெட்.."

ரகுநந்தன் பணத்தை எடுத்துக் கொடுத்தான்..

அஞ்சனலட்சுமி மறுத்துப் பேசப் போனாள்.. அதற்குள் கண்டக்டர் இரண்டு டிக்கெட்டுகளைக் கிழித்து ரகுநந்தனின் கையில் கொடுத்து விட்டார்.. அவர் நகர்ந்ததும் அஞ்சனா பணத்தை நீட்டினாள்..

"இருக்கட்டும்ங்க.." அவன் மறுத்தான்..

"எனக்கு மத்தவங்களுக்கு பணம் கொடுத்துத்தான் பழக்கம் மிஸ்டர் ரகுநந்தன்.. மத்தவர்களிடம் வாங்கிப் பழக்கமில்லை.." கம்பீரமாகச் சொன்னாள்..

"அதற்கென்னங்க.. முதன் முதலா என்னிடம் கடன்படுங்களேன்.. இது ஒரு டிபரண்ட் எக்ஸ்பீரியன்ஸா உங்க லைஃபிலே இருக்குமே.." ரகுநந்தன் சிரித்தான்..

'முதன் முதலாய் கடன்படுவது..' அஞ்சனலட்சுமி பெருமூச்சு விட்டாள்..

இந்த இரண்டு நாள்களில் முதன்முறையாக என்று அவள் எத்தனை அனுபவங்களைத்தான் சந்திப்பாள்.. ?

சிங்கம் போன்ற தாத்தா பேச்சு மூச்சில்லாமல் கோமாவில் விழுந்தபோது முதன் முறையாக அதிர்ந்து செயலற்று நின்றாள்.. அவளுக்கு அவளுடைய தாத்தாதான் எல்லாமுமாக இருந்தார்.. கைக்குழந்தையாக இருந்த போதே பெற்றோரை இழந்த சிறுமிக்கு தாய், தந்தையாக.. ஆசானாக.. பாதுகாவலனாக.. தோழனாக.. என்று கோட்டைச் சுவராக அவளை காவல் காத்த தாத்தா..

அவரும் மூர்ச்சையுற்று விழக்கூடும்.. கோமாவில் அமிழக்கூடும் என்று அவள் நினைத்துப் பார்க்கவில்லை.. முதன் முதலாக அந்த அதிர்ச்சியை சந்தித்தாள்..

தாத்தா வலிமையுடன் இருந்தபோது அவளுக்கு கூழைக்கும்பிடு போட்ட உறவுகள் எல்லாம் அவளை ஒழித்துக் கட்டத் திட்டம் போட்டபோது முதன்முறையாக திகிலடைந்தாள்..

முதன்முறையாக யாருமற்ற அநாதை போல வீட்டை விட்டு ஓடினாள்.. விமானத்தில் பறந்து பழக்கப்பட்டவள் முதன் முறையாக ரயிலில் பயணித்தாள்.. முதன்முறையாக ஆட்டோவில் ஏறினாள்.. முதன் முறையாக பஸ்ஸில் பயணம் செய்வது எப்படியிருக்கும் என்பதை அறியப் போகிறாள்.. இப்போது முதன் முறையாக ஒருவனிடம் கடன்படுகிறாள்..

"என்ன.. இப்படி ஸ்டன்னாகிப் பார்க்கறீங்க..?" இலகுவாக அவன் சிரித்தான்..

அவளுக்குப் பொறாமையாக இருந்தது.. சுமைகள் ஏதுமற்று அவன் இருக்கிறான்.. இறக்கை ஒன்றுதான் இல்லை..

"ஃப்ரீ மைண்டா இருக்கறிங்க..?"

"யாரு..? நானா..? நீங்க வேற.. மனசுக்குள்ளே உங்களைப் பார்க்கிற வரைக்கும் வண்டு குடைஞ்சுக்கிட்டு இருந்ததுங்க.. எங்கேயாச்சும் ஓடிப் போகலாம்ன்னு கூட நினைச்சேன்.."

"நீங்களுமா..?"

சட்டெனக் கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் அஞ்சனா.. அவன் ஆச்சரித்துடன் அவளைப் பார்த்தான்..

"நீங்களுமான்னு கேக்கறிங்களே.. அப்படின்னா நீங்க அப்படி நினைச்சிருக்கீங்களா..?"

"நினைத்ததே இல்லை.." அவள் மனவலியுடன் சொன்னாள்..

"அதானே.. நீங்க ஏன் நினைக்கப் போறிங்க.. உங்களுக்கென்ன என்னைப் போல சிற்றானைக்குட்டி சித்ராவா காத்திருக்கு..?"

"சிற்றானைக்குட்டி சித்ராவா..?"

அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.. அவளது கவலைகள் மறந்து போயின..

"ஆமாங்க.." அலுத்துக் கொண்டான் ரகுநந்தன்..

பஸ் இன்னும் கிளம்பவில்லை.. ஏஸி பஸ்தான் என்றாலும் புழுக்கமாக உணர்ந்தாள் அஞ்சனலட்சுமி.. எப்போது பஸ் கிளம்பும் என்ற கேள்விக்கு..

"இப்போ என்னங்க அவசரம்..?" என்று கேட்டு அயர வைத்தான் ரகுநந்தன்..

"ஏங்க.. திருவாரூருக்குப் போகத்தானே டிக்கெட் வாங்கியிருக்கீங்க..?"

"ஆமாங்க.. அதிலென்ன சந்தேகம்..? எனக்கு மட்டும் வாங்கலைங்க.. உங்களுக்கும் சேர்த்துத்தான் வாங்கியிருக்கேன்.."

"இப்படிச் சொல்லிக் காட்டத்தான் எனக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கினீங்களா..? இப்பவே உங்க பணத்தைத் திருப்பிக் கொடுத்தாத்தான் எனக்கு நிம்மதி.."

அஞ்சனலட்சுமி ஹேண்ட்பேகை கையிலெடுக்க, ரகுநந்தன் அதைப் பிடுங்கினான்.. அவர்களது சீட்டைக் கடந்து போன மூதாட்டி அதைக் கண்டு சிரித்தபடி தன் கணவரின் இடுப்பில் முழங்கையில் இடித்து அவர்களைப் பார்க்கச் சொன்னாள்..

"புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி போல.. பஸ்ஸீக்குள்ள சரசம் பண்ணுதுக.. நமக்கு எதுக்குடி இந்தக் கண்ராவியெல்லாம்..?" பெரிசு பார்க்கக் கூடாததை பார்த்து விட்டவரைப் போலத் துண்டால் முகத்தை மறைத்தபடி நகர்ந்தார்..

"இவர் ஏன் இப்படி மாஸ்க் போட்டு மறைச்சுக்கிட்டுப் போகிறார்..?" அஞ்சனலட்சுமிக்கு விளங்கவில்லை..

"அவரை நாம பார்த்துடக்கூடாதுன்னு அப்படிப் போகலைங்க.. நம்மள அவரு பார்த்துரக் கூடாதாம்.. அதான்.. முகமூடி போல துண்டால் முகத்த மறைச்சுக்கிட்டுப் போறார்.." ரகுநந்தன் விசமமாக விளக்கினான்..

அவனையும் அஞ்சனலட்சுமியையும் இணைத்து வைத்து அந்த வயோதிகத் தம்பதிகள் பேசியதில் இவனுக்கு கொள்ளை மகிழ்ச்சி.. அஞ்சனலட்சுமியைப் போன்ற பேரழகிக்கு கணவன் என்று எவரோ ஒருவர் நினைக்கிறாரே.. அது போதும் ரகுநந்தனுக்கு.. அழகான பெண் கிடைத்தாலே போதும் என்று தவம் செய்பவன் அவன்.. வெறும் பேச்சிலாவது அவனுக்கு ஓர் பேரழகி மனைவியாக கிடைத்தாளே..

6

பாவம் அஞ்சனலட்சுமி.. அவளுக்கு அந்த வயோதிகத் தம்பதி பேசியது, தலையும் புரியவில்லை.. காலும் புரியவில்லை..

"புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடின்னா என்ன மீனிங்..?" இமைகள் படபடக்க அவள் கேட்டது கவிதையைப் போல இருந்தது..

'உன் இமைகள் சிறகடித்ததில்

என் மனமல்லவா பறக்கிறது..'

அவன் மனம் அவசரக் கவிதை ஜொள்ளியது.. அவனுக்கும் கவிதை வருமென்று அவனாலேயே நம்ப முடியவில்லை..

'கவித..' மகிழ்ந்து போனான்..

அவன் முகத்தில் பரவிய ஆயிரம் வாட்ஸ் வெளிச்சத்திற்கான காரணம் புரியாமல் அவள் இமைகளைச் சுருக்கினாள்.. அவள் ஏதாவது நினைத்துவிடப் போகிறாளே என்று சிரமப்பட்டு இயல்பாக இருப்பது போன்ற பாவனையை வரவழைத்துக் கொண்டான்..

"புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடின்னா நியு மேரிட் கப்புள்ன்னு மீனிங்.."

கள் குடித்த சிங்கமாக கண்கள் ஜொலிக்க சொல்லி விட்டான்..

"வாட்..?" அஞ்சனலட்சுமி பதறிப் போனாள்..

'இவ எதுக்கு இப்படிப் பதட்டப்படறா..?' ரகுநந்தனுக்கு ஏமாற்றமாகி விட்டது..

அவனுக்கு மனைவி என்று தெரியாமல் ஒரு வார்த்தை சொல்லி விட்டதையே இவளால் தாங்கிக் கொள்ள முடிய வில்லையா..?

'நல்லாத்தானே இருக்கேன்..?' செல்போன் திரையில் முகம் பார்த்துக் கொண்டான்..

"அந்த ஓல்டு மேனும், ஓல்டு லேடியும் அப்படி மிஸ் அண்டர்ஸ்டாண்டிங் பண்ணிட்டாங்களா..? ஓ காட்.."

"இதுக்கெல்லாம் ஏங்க கடவுளைக் கூப்பிடறிங்க..? அப்படி என்னங்க உங்களுக்குத் துன்பம் நடந்துருச்சு..?"

"நான் போய் அவர்களிடம் சொல்லி விட்டு வரவா..?"

"என்னன்னு..?"

"நீங்க யாரோ, நான் யாரோன்னு.."

"எதுக்குங்க..? அப்புறம் எதுக்காக ஹேண்ட் பேகைத் தூக்கிப் போட்டு விளையாடிக்கிட்டு இருந்தீங்கன்னு பெரிசு வில்லங்கமா கேள்வி கேட்டு வைக்கவா..? பேசாம உட்காருங்க.."

"இது என்னங்க வம்பாப்போச்சு.. ஃபிரண்ட்லியா பேசி விளையாடினா இவங்க உடனே நியு மேரிட் கப்புள்ன்னு டிசைட் பண்ணிருவாங்களா..?"

"பண்ணினாப் பண்ணி விட்டுப் போகட்டுங்க.. இதில் உங்களுக்கு என்ன நஷ்டக் கழுதையாப் போச்சு..?"

"ஹலோ.. முன்பின் தெரியாதவங்க கூட சம்பந்தப்படுத்தி என்னைப் பேசினா அது எனக்கு கஷ்டம்தான்.."

"இவ்வளவுதானே உங்க பிரச்னை..? இப்ப என்னையே பாருங்க.."

ஏதோ வித்தை செய்யப் போகிறவனைப் போல ரகுநந்தன் எழுந்தான்.. அவன் முகத்தை புத்திசாலித்தனமாக வைத்துக் கொண்டதில் இவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

'இப்ப என்ன கோணங்கித்தனம் பண்ணப் போறானோ..'

அவள் நினைத்தபடிதான் அவன் நடந்து கொண்டான்.. நேராக நடந்து சென்று பஸ்ஸின் கதவைத் தொட்டான்.. திரும்பி நடந்து வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.. எதையோ வெட்டி முறித்து விட்டதைப் போல அவன் புருவங்களை சித்தாய்ப்பாய் உயர்த்த..

"என்ன்ன்......ன..?" என்றாள் அவள் கேலியாக..

"பார்த்தீங்கள்ல.."

"என்னத்தைப் பார்த்தேன்..?"

"முன், பின் பார்த்தீங்கள்ல.."

"அதுக்கு..?"

"இனி என்னை முன் பின் பார்த்திராதவன்னு நீங்க சொல்ல முடியாதுங்க.. மிஸ்...?"

ரகுநந்தன் ராகம் இழுத்தான்.. அவளுக்கு புன்னகை அரும்பியது.. அவளது பெயரை தெரிந்து கொள்ள வேண்டுமாம்.. மறைமுகமாக முயற்ச்சிக்கிறானாம்..

'இவனெல்லாம் கெஸ் பண்ண டிரை பண்ணி.. ம்ஹீம்..'

அவள் புரியாததைப் போல இமை கொட்டினாள்.. அவன் பொறுமையிழந்தவனாக..

"உங்க பெயரென்ன மிஸ்ஸியம்மாவா..?" என்றான்..

"பாட்டி காலத்து பிலிம் பெயரைச் சொல்கிறீங்களே.."

"வேற வழி.. நீங்கதான் உங்க பெயரைச் சொல்ல மாட்டேங்கறிங்களே.."

அவன் அலுத்துக் கொண்டான்.. அவனைப் பார்க்கப் பாவமாக இருந்ததில் அவள் போனால் போகட்டும் என்று தன் பெயரைச் சொன்னாள்.. பெயரைச் சொல்வதில் என்ன வந்து விடப் போகிறது..?

"மிஸஸ் அஞ்சனலட்சுமி.." குறும்புடன் சொன்னாள்..

'மிஸ்ஸீன்னா சொன்ன..? மிஸஸ்ன்னு சொன்னா உன் ரியாக்சன் எப்படியிருக்கும்ன்னு நான் பார்க்கனுமே..'

எப்படியும் இல்லை.. கழுத்தைச் சாய்த்து ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தபடி ஒற்றை வார்த்தையில்..

"பொய்.." என்று அவளது பொய்யை உடைத்து விட்டான்..

"நீங்க மிஸ் அஞ்சனலட்சுமிதான்..?"

"ஹலோ.. நான் மிஸ்ஸா, மிஸஸ்ஸான்னு நான்தான் சொல்லனும்.. உங்களுக்கு எப்படி அது தெரியும்..?" கோபப் படுவதைப் போல அவள் நடித்தாள்..

"கழுத்தில் தாலி இல்லை.. நெற்றி வகிட்டில் குங்குமம் இல்லை.. காலில் மிஞ்சி இல்லை.."

"நான் மோதிரம் மாத்தி மேரேஜ் பண்ணிக்கிட்டேன்.."

"யாரை..? ஜார்ஜையா..? அப்பக் கழுத்தில சிலுவை தொங்கனுமே.. எங்கே..? அஞ்சனலட்சுமி ........மோதிரம் மாற்றிக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களாம்.. யாரு காதில பூ வைக்கறீங்க..? நான் திருவாரூர்காரன்.."

"என் மேரேஜ் ரெஜிஸ்டர் மேரேஜ்.. தாலியெல்லாம் கட்டலை.."

"நெற்றியில திருநீறு.. கடவுள் பக்தியோட இருக்கிறவங்க அட்லீஸ்ட் நெற்றியில குங்குமத்தையாவது தீற்றிக்குவாங்க.. இப்ப ரெஜிஸ்ட்ரர் ஆபிசில் கல்யாணம் பண்ணிக்கிறவங்களும் தாலி கட்டிக்கிறது உண்டுங்க."

"அது என் இஷ்டங்க.."

"அதை நம்பறது எனக்குக் கஷ்டங்க.."

விட்டுக் கொடுக்காமல் அவன் வழக்கடித்ததில் அவள் வெகு நேரம் நடிக்க முடியாமல் சிரித்து விட்டாள்.. அவளது சிரிப்பில் அவனும் இணைந்து கொள்ள.. பஸ் புறப்பட்டது.. வேகமெடுத்து சாலைப் போக்குவரத்தில் கலந்தது.. அதுவரை சிரித்துக் கொண்டிருந்த அஞ்சனலட்சுமி கலவரமடைந்தாள்.. திருவாரூரில் அவளை வரவேற்க யாரும் காத்திருக்கவில்லை.. எந்த நம்பிக்கையில் பயணிக்கிறாள்..?

அஞ்சனலட்சுமிக்கு பஸ் கிளம்பியது பிடிக்காததைப் போல ரகுநந்தனுக்கும் பிடிக்கவில்லை.. ஓடாத பஸ்ஸில் உட்கார்ந்து அவளுடன் உரையாடிக் கொண்டே இருந்தால் எப்படி இருந்திருக்கும்.. ம்ஹீம்..

"இந்த டிரைவர் இப்ப பஸ்ஸைக் கிளப்பலைன்னு யார் அழுதா..?" கோபத்துடன் முணுமுணுத்தான்.. அஞ்சனலட்சுமி சிந்தனை கலைந்து அவனைப் பார்த்தாள்..

"என்ன சொன்னீங்க..?"

"நான் என்னத்தைங்க சொல்லப் போறேன்..? ஒன்னும் சொல்லலை.."

"ஏதோ சொன்னதைப் போல இருந்தது.."

"வாய்விட்டு சத்தமா எதையும் சொல்லலைங்க.."

"ஓ.. அப்ப மனசுக்குள்ள பேசிக்கிற மௌனி கேரக்டரா நீங்க..?"

"நான் மட்டும் இல்லைங்க.. இந்த உலகத்திலே நிறையப் பேர் மௌனி கேரக்டர்தாங்க.. நினைத்ததை எல்லாம் வெளியில் பேசிவிடும் வரம் எல்லோருக்கும் கிடைப்பதில்லைங்க.."

"அது என்னவோ உண்மைதாங்க.."

அஞ்சனலட்சுமி தன் சோகத்தில் ஆழ்ந்து விட்டாள்..

'இவ மனசில் என்ன சோகம்..? ஒரு நேரம் சிரிச்சுப் பேசறா.. அடுத்த செகண்டே சோகமாயிடறா.. தன்னாலே,

திருவாரூரிலே சிற்றானைக்குட்டி சித்ரா காத்திருக்கிற சேதி தெரிஞ்சும் சோகமாகாம தைரியமா நான் பயணப்பட்டுக்கிட்டு இருக்கேன்.. இவளுக்கென்ன வந்தது..?'

அவளது பார்வை அவன் பார்வையைச் சந்தித்துப் பிரிந்தது.. அஞ்சனா ஒரு பெருமூச்சுடன் ஜன்னல் கண்ணாடியில் சாய்ந்து கொண்டாள்.. அவன் அருகில் அமர்ந்திருந்தது ஆறுதலாக இருந்தது.. அவள் மனதில் இருந்த தனிமையுணர்வு மறைந்திருந்தது.. அவனுக்கும் அவளுக்கும் ஒரு பந்தமுமில்லை.. அவன் யாரோ.. அவள் யாரோ.. இதை ரயில் சிநேகிதம் என்று பெயரிட்டு அழைக்க அவர்கள் ரயிலிலும் பயணம் செய்யவில்லை.. பஸ் பயணம்..

'இது முடிந்தவுடன்..?'

அவள் ஆயாசத்துடன் விழிகளை மூடிக் கொண்டாள்.. அதன் பின்னால் அவன் பிரிந்து அவன் வழியில் சென்று விடுவான்.. அவள் தேடி வந்திருக்கும் தோழியின் இருப்பிடத்தைக் கண்டறிய வேண்டும்.. தோழி இல்லையென்றால் வேறு ஒரு ஊருக்குப் பயணிக்க வேண்டும்..

'எந்த ஊருக்குப் போவது..?'

விடை தெரியவில்லை.. பஸ்ஸின் வேகத்தில் இமைகள் செறுக தூக்கம் அவள் விழிகளைக் கவ்வியது.. பாதுகாப்பற்ற சூழலில் ஓடிக் கொண்டிருந்தவளுக்கு இரண்டு நாள்களாக தூக்கமில்லை.. இப்போது பக்கத்தில் ரகுநந்தன் இருக்கும் பாதுகாப்பு உணர்வில் அயர்ந்து அவன் தோளில் தலைசாய்த்து ஆழ்ந்து உறங்க ஆரம்பித்து விட்டாள்..

ரகுநந்தனால் நம்பவே முடியவில்லை.. அவன் மீது சாய்ந்திருக்கும் பூக்குவியலை சர்வ ஜாக்கிரதையுடன் ஆனந்தமாக அவன் தாங்கிக் கொண்டான்.. தூக்க மிகுதியில் துவண்டவள் சரிந்து அவன் மடிமீது சுருண்டு படுத்துக் கொண்டபோது.. சிறகில்லாமல் வானில்

பறந்தான்.. அவள் விழுந்து விடாமல் இருக்க அனிச்சையாக அவனது கை அவளைச் சுற்றி வளைத்து அரணாக இறுக்கிக் கொண்டது..

7

ஜாக்பாட் அடித்த மனநிலையில் இருந்தான் ரகுநந்தன்.. இன்னும் அவன் மடியில் அவள் படுத்திருக்கிறாள் என்ற உண்மையை அவனால் நம்பவே முடியவில்லை.. திருவாரூரில் காத்திருக்கும் சிற்றானை சித்ராவையும், அவளை அவன் தலையில் கட்டக் காத்திருக்கும் அத்தை அம்புஜத்தையும், அப்பா தசரதனையும் மறந்தான்.. அப்போதைய தேன் தடவிய மணித்துளிகளில் தேங்கி நிற்க விரும்பினான்..

இங்கே இப்படியிருக்க திருவாரூரில் அவன் வீட்டில் உள்வீட்டு யுத்தம் கனன்று கொண்டிருந்தது.. தங்கை மகனைத் தடுத்தாட்கொள்ள மனைவி மகன்கள் சகிதம் திருவாரூர் வந்து இறங்கியிருந்தார் சுதர்சனம்.. மைத்துனனின் பேச்சில் தமையன் மதி மயங்கி விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் அம்புஜம் தன் கணவன், பிள்ளைகளோடு அண்ணன் வீட்டிற்கு வந்து விட்டாள்.. வீட்டில் குழுமியிருக்கும் விருந்தினரைக் கவனிப்பதற்குள் சுமித்ராவிற்கு தாவு தீர்ந்தது..

"என்னடி கொடுமை இது.." மகளிடம் புலம்பினாள்..

"நீங்க சொல்கிறீங்க.. என்னால சொல்ல முடியல.."

"எதைடி..?"

"இந்த முறை மாப்பிள்ளைகளோட ஜொள்ளைத்தான்.."

"அடிச்சேன்னா பாரு.. நான் என்னத்தச் சொல்றேன்.. நீ என்னத்தச் சொல்ற..? இப்படியாடி பேசி வைப்ப..?"

"உங்களுக்கு உங்க கவலை.. எனக்கு என் கவலை.. இந்த அம்புஜம் அத்தை ஒன்னோடு நின்னாத் தேவலாம்.. இது பெண்ணையும் இங்கே கொடுக்கனுமாம்.. பெண்ணையும் இங்கேதான் கட்டனுமாம்.. பேராசைம்மா.."

சுமித்ராவின் முகம் இறுகியது.. உலகிலேயே அம்புஜமும் தசரதனும்தான் அண்ணன் தங்கையாக பிறந்து விட்டார்கள் என்பதைப் போல அம்புஜம் அலட்டிக் கொள்ளும் அலட்டலை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. திருமணமாகி தசரதனின் மனைவியாக அந்த வீட்டில் பாதம் பதித்த நாளிலிருந்து இன்றுவரை அம்புஜத்தின் ஆட்டத்தை அவளால் கட்டுப்படுத்தவும் முடியவில்லை.. கண்டு கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை.. அம்புஜம் ஆடும் ஆட்டம் அத்தகையது..

"கடைசியில ரெண்டும் கனவாப் போகப் போகுது பாரு.." வெறுப்புடன் கூறினாள்..

"அது என்னவோ உண்மைதான்ம்மா.. பெத்து வைச்சிருக்கிற ரெண்டுமே பொந்தாம் பொதுக்குன்னு இருக்குதுக.. ஒன்றைக் கூட சூஸ் பண்ண முடியாது.."

"சத்தம் போட்டுப் பேசித் தொலைக்காதேடி.. உன் அத்தை காதில விழுந்து வைக்கப் போகுது.. சரியான லங்கிணி அது.." பயத்துடன் சுற்று முற்றும் பார்த்து வைத்தாள் சுமித்ரா..

"இப்படியாப்பட்ட தொடை நடுங்கி அம்மா வயித்தில பொறந்த கொடுமைக்குத்தான் அண்ணன் டெபுடேசன்ங்கிற பேரில தலைமறைவாகி சென்னைக்கு ஓடிப் போயிருச்சு.. இது என் வீடா, ஊரார் வீடான்னு தெரியாம நான் ரூமுக்குள்ள பதுங்கிக்கிட்டு இருக்கேன்.." தலையில் அடித்துக் கொண்டாள் ரதி மீனா..

"என்னை என்னடி பண்ணச் சொல்ற..? உங்கப்பாதான் ஊரில இல்லாத தங்கச்சியக் கண்டுட்டதைப் போலப் பாசப்பயிர வளர்க்கிறாரே.."

"அவரு மட்டும்தான் பாசப்பயிர வளர்ப்பாரா..? உங்களுக்கு வளர்க்கத் தெரியாதா..? இல்ல.. நீங்களும் உங்க அண்ணனும் பயிர் வளர்த்தா பாசமலர் மலராதா..?"

"ம்ஹீம்.. என்மேல என் அண்ணன் காட்டற பாசத்துக்கு இணையாகுமாடி உன் அப்பா தங்கச்சி மேல காட்டற பாசம்..?"

சுமித்ரா கர்வத்துடன் கேட்டாள்.. அதற்கும் தலையில் அடித்துக் கொண்டாள் ரதி மீனா..

"ஏண்டி..? நீதான பாசப்பயிரை வளர்க்கச் சொன்ன..?" சுமித்ரா பரிதாபமாக கேட்டாள்..

"இந்த லட்சணத்தில் வளர்க்கச் சொல்லலை.. ஏம்மா இப்படி எகனைக்கு மொகனையா புரிஞ்சு வைக்கறிங்க..? சும்மாவே அப்பா மலர்ந்தும் மலராமல்ன்னு ஆடிக்கிட்டு இருக்காரு.. இதில நீங்க வேற காலில சலங்கையைக் கட்டி விட்டிங்கன்னா ஆட்டம் ஜாஸ்தியாகிறாதா..?" மகள் சுட்டிக் காட்டினாள்..

"ஆத்தி.." சுமித்ரா பயந்து போனாள்..

"இதையே தாங்க முடியலை.. இன்னும் கொஞ்சம் கூடுச்சுன்னா என் கதியும் அண்ணன் கதியும் என்ன ஆகும்ன்னு யோசிச்சுப் பாருங்க.. மாமாவைத் துணைக்குக் கூப்பிட்டு அத்தை அம்புஜத்தோட ஆட்டத்தை அடக்கற வழியைப் பாருங்கன்னு சொன்னா நீங்க அண்ணன் தங்கை பாசத்தில எந்த அண்ணன் தங்கை பாசம் உசத்தின்னு போட்டியை அனௌன்ஸ் பண்ணி அப்பாவை உசுப்பேத்தி விடறிங்க.."

"அம்புஜத்தோட பேச்சை எடுத்தாலே புத்தி பேதலிச்சுருதுடி மகளே.. அடங்கறவளாடி அவ.."

"அதைச் சொல்லுங்க.. அடங்காத ஜல்லிக்கட்டுக் காளையை அடக்கற வீரன்களாலக் கூட இந்த அம்புஜம் அத்தையை அடக்க முடியாது.. இவங்க அவங்களை அடக்கி ஓட்டி விட்டிருவாங்க.." ரசித்துச் சொன்னாள் ரதி.. அதில் சுமித்ராவுக்கு கோபம் வந்து விட்டது..

"ஏண்டி.. ஆக்கிப் போடறது நானு.. நீ புகழ் பாடறதெல்லாம் உன் அத்தைக்கா..?"

"கோவிச்சுக்காதீங்கம்மா.. ஆயிரம்தான் சொல்லுங்க.. அத்தை 'செம தில் லேடி..' அதுக்கு இருக்கிற சாகசமும் தில்லும் யாருக்கு வரும்ங்கறிங்க..? அப்பாவோட ஜெராக்ஸா ஆம்பள மூஞ்சியா இருக்கறாங்க.. அதை அதிரூப சுந்தரின்னு கட்டிக்கிட்ட புருசன் வாயாலே சொல்ல வைக்கிறாங்க.. இந்தப் பக்கம் நீயும் நானும் ஒரு தாய் மக்கள் மட்டுமில்லண்ணே, ஒரு மூஞ்சி மக்கள்ன்னு அப்பாகிட்ட கண்ணாடியைக் கொடுத்து மூஞ்சியப் பாத்து உருகவும் வைக்கிறாங்க.. இதில வீதியில போகிறவங்களுக்குக் கூட வித்தாரக் கள்ளின்னு பெயரை வைக்கிறாங்க.."

"இது வித்தாரக்கள்ளியிலும் வித்தாரக்கள்ளி..! இது ஊருக்கே வித்தாரக் கள்ளின்னு பேரை வைக்குது.. புருசன் பிள்ளைகேளோட இங்கே வந்து டேரா போட்டிருக்குதே.. ஒரு துரும்பை எடுத்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம்ன்னு நகர்த்தி வைச்சிருக்குமா..? அத்தனையையும் என் அண்ணி பார்த்துக்கிட்டு இருக்காங்க.."

"அவங்க குணம் அப்படி.."

பிரியத்துடன் தாய்மாமனின் மனைவியான துளசியைப் பார்த்தாள் ரதிமீனா.. பெயருக்கேற்றார் போல அழகு சொட்டும் களையான முகம்.. அதில் தெரியும் சாந்தம் மிக்க சாத்வீகம்.. பூஜையறையில் சுவாமி படங்களுக்கு கற்பூர ஆரத்தி காட்டிக் கொண்டிருந்தாள் துளசி..

அதை ஹாலில் இருந்த சோபாக்களில் ஒன்றில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அம்புஜத்திற்கு கடுப்பென்றால் கடுப்பு.. அப்படியொரு கடுப்பு.. அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.. அதற்கான காரணங்களாக பல இருந்தாலும் அதி முக்கிய காரணமாக தசரதன் அங்கே இருந்தார்.. சும்மாவும் உட்கார்ந்திருக்காமல் துளசி பூஜை செய்வதை பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்..

தசரதனின் வீடு பழமை மாறாத பணக்காரத்தனம் நிறைந்த அரண்மனை போன்ற பெரிய வீடு.. செல்வச் செழிப்பின் அடையாளங்கள் வீடு முழுவதும் காணப்பட்டன..

"மாணிக்க வீணையேந்தும்..

மாதேவி கலைவாணி..!

தேன்தமிழ் சொல்லெடுத்து

பாடவந்தோம் - அம்மா

பாட வந்தோம்.."

துளசி பக்தியுடன் பாடினாள்.. அம்புஜம் பற்களை நறநறத்தாள்..

'அடிக்கிறது மணி.. இதில பாட்டு வேற.. இங்க என்ன பாட்டுக் கச்சேரியா நடக்குது..?'

தசரதனின் முகத்தைக் கவலையுடன் பார்த்தாள்.. அவள் பயந்ததைப் போலவே அவர் முகத்தில் பக்திரசம் வழிந்தோடியது.. பாட்டை ரசித்து அவரது கைகள் தொடை தட்டி தாளம் போட்டன..

அம்புஜத்திற்கு பொறுக்கவில்லை.. உடன் பிறந்தவள் பக்கத்தில் இருக்க, உடன் பிறந்தவளைப் போன்ற துளசியிடம் தசரதன் பாசம் காட்டுவது அவளுக்குப் பிடிக்கவில்லை..

"பாட்டு என்ன பெரிய பாட்டு..? உன் மருமக வாயத் திறந்து பாடினா எட்டு ஊருக்குக் கேட்கும் அண்ணா.." பெருமை பேசினாள்..

"பாடினா என்ன.. உங்க மக வாயத்திறந்து ஒரு வார்த்த பேசினாலே எட்டு ஊருக்குக் கேட்குமே அண்ணி.. தொண்டையா அது..? வெங்கலத் தொண்டை.." வெக இயல்பாக விமர்சித்தபடி உள்ளே வந்தார் சுதர்சனம்..

'வந்துட்டானா..?' நிஷ்டூரமாக முறைத்தாள் அம்புஜம்..

'உன் முறைப்பை வேறு எங்காவது வைத்துக் கொள்..' அலட்டிக் கொள்ளாமல் பேப்பரை படிக்க ஆரம்பித்தார் சுதர்சனம்..

"மாமான்னா மாமாதான் மாம்.. ஊமைக்கிளி உங்களுக்கு தடாலடியான அண்ணன் வாய்ச்சிருக்கிறது உலக மகா அதிசயம் தெரியுமோ.. அடங்காப்பிடாரி அம்புஜம் அத்தைக்கே தண்ணியைக் காட்டற வீராதி வீரனில்ல என் மாமா.."

ரதிமீனா தாய்மாமனை புகழ்ந்து முணுமுணுத்ததில் பூரித்துப் போனாள் சுமித்ரா.. கண்ணனின் தங்கை சுபத்திரை கொள்ளும் பெருமிதப் பூரிப்பு அது..

பாடலை முடித்த துளசி கற்பூரத் தட்டுடன் பூஜையறையை விட்டு வெளியில் வந்தாள்.. அம்புஜம் முகவாயை கன்னத்தில் மோதி இடித்துக் கொண்டாள்.. அவள் காட்டிய நொடிப்பைக் கண்டு கொள்ளாமல் தசரதனுக்கும், சுதர்சனத்திற்கும் கற்பூர ஆரத்தியைக் காண்பித்தாள்.. அவர்கள் தொட்டுக் கும்பிட்டதும் பூஜையறைக்குத் திரும்பினாள்.. அதில் அம்புஜம் கோபம் கொண்டாள்..

'வித்தாரக்கள்ளி விறகொடிக்கப் போனாளாம்.. கத்தால முள்ளு குத்துச்சுன்னு அதக் கொத்தோட அள்ளிக்கிட்டு வந்தாளாம்.. அந்தக் கதையாயில்ல இந்தக் கத இருக்கு.. இங்க குத்துக்கல்லாட்டம் நான் உக்காந்திருக்கேன்.. இவ நேரா எங்கண்ணன் முன்னாடி கற்பூரத்தைக் காட்டிச் சாம்பிராணி போடறா.. எங்கண்ணன் கூடப் பொறந்தது நானா, இல்ல இவளா..?'

கற்பூரத்தின் ஒளியை மிஞ்சிய சாந்தத்தின் ஒளி துளசியின் முகத்தில் இருந்ததில் அம்புஜத்தின் முகத்தில் கோபச்சிவப்பு வந்தது..

"ஏன் துளசி.. கற்பூர ஆரத்திய ஆம்பளைகளுக்கு மட்டும்தான் காட்டனும்.. பொம்பளைகளுக்கு காட்டக் கூடாதுன்னு சட்டம் கிட்டம் இருக்கா..?" திமிராக கேட்டாள்..

துளசி திகைத்தாள்.. சுதர்சனம் பேப்பரிலிருந்து பார்வையை உயர்த்தினார்..

"ஏன்க்கா இப்படிக் கேக்கறிங்க..?"

"இதப்பாரு.. உனக்கு ஒன்னுமே தெரியாதாக்கும்..? அதை நான் நம்பனுமாக்கும்..? ஓடற தண்ணியில ஒன்பத்தெட்டு சுளுக்கெடுக்கிறவ நீ.. எங்கிட்டயே விளக்கம் கேட்கிற.. பிழைச்சுக்குவ துளசி.."

'அந்தச் சுளுக்கையெல்லாம் நீதான் எடுப்ப.. எம்பொண்டாட்டி பாவம்.. சாது.. உன்னப் போல ஆட்டக்காரியில்ல..' மனதுக்குள் வெகுண்ட சுதர்சனம்..

"அவ என்கூட சேர்ந்து வாழ்ந்து பிழைத்துக்கிட்டுத்தான் இருக்கா அண்ணி.. நீ போ துளசி.. அண்ணிக்கு வெறும் வாயை மெல்ல முடியலை போல.. சண்டைக்கு ஆள் தேடறாங்க.. அதுக்கான ஆள் நீயில்லன்னு எல்லோருக்கும் தெரியுமே.. அவங்களுக்குத்தான் தெரியலை.. பாவம்.." என்றார்..

கணவர் சொன்னதும் கிடைத்தது வாய்ப்பென்று துளசி விரைந்து விட்டாள்.. அம்புஜம் போர்க்களம் புக ஆயத்தமானாள்..

"என்ன.. கொளுந்தனாரே.. இடக்கு மடக்கா பேச்சு வருது.. உங்க பெண்டாட்டி சாதுன்னா.. நான் யாரு..? கேடியா..?"

"அதை நான் சொன்னா நல்லாயிருக்காது.. இந்தா.. என் தங்கச்சியக் கட்டிக்கிட்ட மச்சானே இங்கிருக்கார்.. அவரே சொல்லட்டும்.." சுதர்சனம் தசரதனின் பக்கம் கை காட்டி விட்டார்..

தசதரதன் முகத்தைச் சுளித்தார்.. சற்றுமுன் பக்தி ரசம் பரவியிருந்த வீட்டின் அமைதியை அம்புஜம் கெடுப்பதைப் போல உணர்ந்தார்..

"அம்புஜம்.. உனக்கு எந்த நேரம் எதைப் பேசறதுன்னு அறிவே இருக்காதா..? கற்பூர ஆரத்தியை ஒற்றிக்கனும்னு ஆசையிருக்கிறவ கால்மேல கால் போட்டுக்கிட்டு

சோபாவில உக்காந்திருக்கக் கூடாது.. பூஜை பண்ணப் போயிருக்கனும்.. அத விட்டுட்டு இங்க உக்காந்துக்கிட்டு வெட்டி உரிமை பேசிக்கிட்டு இருக்கக் கூடாது.."

எப்போதுமே தசரதனின் கோபக்குரல் எழும்பி விட்டால் அம்புஜம் பம்மி விடுவாள்.. தசரதனின் கோபம் அத்தகையது.. எப்படி பாசப்பயிரை வளர்த்து வேப்பிலை அடித்தாலும் மலையிறங்க மாட்டார்.. அப்படி அவர் மலையிறங்கா விட்டால் அம்புஜம் மற்றவர்களின் முன்னிலையில் தோல்வியைத் தழுவி விடுவாளே.. கெட்டிக்கார அம்புஜம் உடனே எழுந்து விட்டாள்..

"ஊரில உலகத்தில தாயிற் சிறந்த கோவிலுமில்லை.. தந்தை சொல் மிக்க மந்திரமில்லைன்னு வளர்ந்திருப்பாங்கண்ணே.. நான் அப்படியில்லை.. அண்ணன் ஒரு கோவில்.. அண்ணன் சொல்லே வேதம்ன்னு வளர்ந்தவ.. நீங்க ஒரு வார்த்த சொல்லி நான் மீறுனதா சரித்திரம் இருக்கா..?"

குரல் விம்ம, கண்களில் நீர் பனிக்க அவள் உருக்கத்துடன் பேசியதில் சுதர்சனம் பேப்பரைப் படிப்பதைப் போல..

"அடேங்கப்பா.. ஆக்டிங் பிரமாதம்.." என்றார்..

அம்புஜம் எரி தனலாய் முறைத்தாள்.. தங்கை பேசிய வார்த்தைகளில் நெக்குருகிப் போயிருந்த தசரதன்..

"என்ன மச்சான்..?" என்றார்..

"புதுப்பட விமரிசனம் மச்சான்.. தூள் கிளப்பியிருக்கான்.." என்றார் சுதர்சனம்..

உன்னை இன்னொரு சமயம் கவனித்துக் கொள்கிறேன் என்ற மிரட்டலை பார்வையில் சொன்ன அம்புஜம் பூஜையறைக்குள் போனாள்..

ஆடிக்காற்றில் அம்மியே பறக்கும்.. அம்புஜம் வாயைத் திறந்தால் ஊரே பம்மும்.. அப்பேற்பட்ட வாய் தாட்டியக்காரியிடம் வந்து பார் வட்டப்பாறைக்கு என்று அசால்ட் ஆறுமுகமாக சவால் விட்டுக் கொண்டிருந்தார் சுதர்சனம்.. ஊரே பம்மும் வாய்தாட்டியம் படைத்த அம்புஜம் சுதர்சனத்திடம் பம்ம வேண்டியிருந்தது.. அவள் எதைப் பேசினாலும் அதற்கு எதிர் பேச்சைப் பேசி வாயை அடைத்து விடும் சுதர்சனத்தைப் பேச்சில் ஜெயிக்க அவளால் முடியவில்லை.

'எதப் பாடினாலும் எசப்பாட்டு படிக்கறவனைப் போல, எதப் பேசினாலும் எசப்பேச்சு பேசி வாய அடைக்கிறானே.. வித்தாரக் கள்ளன்..! ஆனாலும் இவனுக்கு இம்புட்டு அறிவு ஆகாது..'

பூஜையறைக்குச் சென்றபடி விரல்களை நெட்டி முறித்தாள் அம்புஜம்.. அதை சுமித்ரா பார்த்து விட்டதில் இவள் கண்களில் கனல் பறந்தது...

சுமித்ரா தசரதனிடம் போட்டுக் கொடுத்து விடுவாள் என்ற அச்சமெல்லாம் அவளுக்கு இல்லை.. அப்படி அவள் போட்டுக் கொடுக்க வேண்டும்.. 'பார் அண்ணா.. உன் பெண்டாட்டி என்னை எப்படியெல்லாம் பேசுகிறாள் என்று பார்..' என்று கண்ணைக் கசக்கி.. தசரதனைத் தூண்டி விட்டு, சுமித்ராவின் குடுமியைப் பிடித்து ஆட்டவேண்டும் என்ற கனவு அவளுக்கு வெகு காலமாக இருந்தது.. சுமித்ரா அதற்கு வாய்ப்புக் கொடுத்ததேயில்லை.. அம்புஜத்திடம் அவள் வாய் கொடுக்க மாட்டாள்.. தசரதனிடம் நாத்தனாரைப் பற்றிப் போட்டுக் கொடுக்கவும் மாட்டாள்..

'அம்மணி கோள் சொல்ல மாட்டாகளாம்.. பொறணி பேசவும் மாட்டாகளாம்.. ஆனா அத்தனையையும் கொண்டு போயி அவ அண்ணன் காதில மட்டும் ஓதுவாளாம்.. அவன் நேரம் பாத்து என்ன எங்கண்ணன்கிட்ட மாட்ட வைப்பானாம்.. ஊமை ஊரக் கெடுக்குமாம்.. பெருச்சாளி வீட்டக் கெடுக்குமாம்.. வித்தராக்கள்ளி.. ஊமக் கோட்டான் மாதிரி வேசம் கட்டிக்கிட்டு கூடப் பொறந்தவனத் தூண்டி

விடுவா.. அண்ணன்காரன் எட்டு ஊரையும் வித்தாரம் பேசியே விரட்டியடிப்பாங்கிற தெனாவெட்டு..'

அம்புஜத்திற்கு வயிறு எரிந்தது.. சுதர்சனத்தின் திறமையை குறைத்து மதிப்பிடக்கூடாது என்ற புத்திசாலித்தனம் கொண்டவள் அம்புஜம்.. மதியூகி.. !

அமைதியாக இருந்தபடியே அவளை ஆட்டிப் படைக்கும் சுதர்சனத்தின் வருகை அவளது வயிற்றில் புளியைக் கரைத்தது.. அண்ணன் மகனின் தலையில் தன் மகளைக் கட்டி வைத்து விடும் திட்டத்தை சுதர்சனம் தூள் பறக்கச் செய்து விடுவாரோ என்ற சந்தேகமே அவளுக்கு வரவில்லை.. நிச்சயமாக அவர் அதை செய்து விடுவார் என்று அவளுக்குத் தெரியும்..

'யாரு இவன்..? கடைஞ்செடுத்த வினயக்காரனாச்சே..'

என் அண்ணன் மகனுக்கு நான் பெண் கொடுக்கிறேன்.. ஊடே வர நீ யார் என்று கேட்டு விடவும் முடியாது.. ரகுநந்தன் அவளுக்கு அண்ணன் மகனென்றால் சுதர்சனத்திற்கு தங்கை மகன்..

'வாயத் தொறக்கட்டும்.. அப்போப் பார்த்துக்கலாம்..'

அம்புஜம் சுதர்சனம் வாயைத் திறந்தால் கொடுத்துக்கட்டி விடலாம் என்று காத்திருந்தாள்.. சுதர்சனமும் எது எதற்கோ வாயைத் திறந்து அம்புஜத்தைக் கொடுத்துக் கட்டித் தோரணமாக தொங்க விட்டார்.. தங்கை மகனின் திருமணத்தைப் பற்றி மட்டும் வாயைத் திறக்கவில்லை..

'கல்லுளி மங்கன்..!'

அம்புஜம் மனதுக்குள் திட்டித் தீர்த்தாள்.. சுதர்சனத்தின் அமைதிக்குள் அடங்கியிருக்கும் புயலைப் பற்றிய அச்சம் அவளது தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தது.. காரணமில்லாமல் சுதர்சனம் தன் பெண்டாட்டி பிள்ளைகளுடன் தங்கை வீட்டில் முகாமிட்டிருக்க மாட்டார் என்று அம்புஜத்திற்கு நன்றாகவே தெரியும்..

ரகுநந்தன் தொட்டதெற்கெல்லாம் தாய்மாமனிடம் ஓடி விடுவான்.. சுதர்சனமும் தோள் தட்டிக் கொண்டு நியாயம் கேட்க வந்து விடுவார்.. ஆனானப்பட்ட தசரதனே மைத்துனன் குரல் கொடுத்தால் அடங்கிப் பதில் சொல்லுவார் எனும்போது அம்புஜத்தால் பேச முடியுமா..?

'மகராசன்.. வாயத் தொறந்தா டாண் டாண்ணு மணியடிச்ச மாதிரி பாயிண்டு பாயிண்டா பிச்சு உதறுறானே.. வக்கீலுக்குப் படிச்சிருந்தா கொடி கட்டிப் பறந்திருப்பான்.. மத்த வக்கீலுக பொழைச்சுப் போகட்டும்ன்னு விட்டு வைச்சுட்டான் போல..'

அம்புஜமே மனதுக்குள் பாராட்டுப் பத்திரம் வாசித்து விடுவாள்.. மருமகன் என்று வந்து விட்டால் சுதர்சனம் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வீடுகட்ட வந்து விடுவார்..

ஒன்றும் இல்லாததிற்கே ஒரு நாள் முழுக்கப் பஞ்சாயத்து வைக்கும் சுதர்சனம், தங்கை மகனின் வாழ்க்கைப் பிரச்னையைப் பற்றி வாயே திறக்காமல் இருப்பதுதான் அம்புஜத்திற்குக் கோராமையாக இருந்தது... அவளும் சுதர்சனம் இருக்கும் போது வேண்டுமென்றே தசரதனிடம் திருமணத்தைப் பற்றிய பேச்சை வளர்த்தாள்..

"நம்ம சித்ராவுக்கு ரகுமேல கொள்ள ஆசையண்ணா.."

இதற்கு சுதர்சனம் என்ன பதிலைச் சொல்லப் போகிறார் என்று ஓரக் கண்ணில் பார்த்தால், அவர் மூக்கை உறிஞ்சி வாசனை பிடித்தார்..

"சுமித்ரா.. இன்னைக்கு விடக்கோழி கொழம்பு போல... எட்டூருக்கு வாசம் வருது.. அப்புடியே சுக்கா வறுவலும் வைச்சா ஒரு வெட்டு வெட்டிறலாம்.."

கடைசி இரண்டு வார்த்தைகளைச் சொல்லும் போது மட்டும் அம்புஜத்தைப் பார்த்து வைத்தார்.. அவளுக்குப் பகபகவென வந்தது.. பக்கத்தில் அவளைத் தொட்டுத் தாலிகட்டிய கிருஷ்ணனும் இருக்கிறார்.. ஏண்டா.. என் மனைவியைப் பார்த்து ஜாடை பேசுகிறாய் என்று ஒரு

வார்த்தை கேட்க வேண்டாமா..? அதை விட்டு விட்டு அந்த மனிதர் நாக்கைச் சப்புக்கொட்டி..

"சுக்கா வறுவலெல்லாம் மட்டன் கறியில செய்யனும் தம்பி.. அதான் நல்லாயிருக்கும்.." என்று அபிப்ராயம் சொல்லிக் கொண்டிருந்தார்..

'திங்கப் படிச்ச மனுசன்..! திங்கறதத் தவிர வேற எதையும் பேச வாயத் திறக்கிறதில்ல..' பற்றிக் கொண்டு வந்தது அம்புஜத்திற்கு..

வேறு பேச வாய் திறந்தால் அம்புஜம் உண்டு இல்லையென்று ஆக்கி விடுவாள் என்பதினால் அவர் உண்பதைத் தவிர வேறு எதற்கும் வாயைத் திறப்பதில்லை என்பது அவளுக்கு வசதியாக மறந்து போனது..

"சித்ரா பாடினா இன்னைக்கு முழுவதும் கேக்கலாம்.. ரகு கொடுத்து வைத்தது அண்ணா.." அம்புஜம் சொல்லி வாய்மூடுமுன்..

"அவன் கொடுத்து வைத்த லட்சணம்தான் ஊருக்கே தெரியுமே.. சொந்த ஊரிலே வேலை கிடைச்சும், சென்னைக்கு டெபுடேசன் வாங்கிக்கிட்டு ஓடிப் போயிருக்கானே.. இதவிடவா கொடுத்து வைக்கணும்..?" என்று கேட்டு அம்புஜத்தின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார் சுதர்சனம்.. அத்துடன் நிறுத்தாமல்..

"ஏன் அண்ணா..? உங்க மகளுக்குப் பாடத் தெரியுங்களா..?" என்று படு ஆச்சரியமாக கிருஷ்ணனைப் பார்த்து கேட்டு வைத்தார்.

அவரையும் மதித்துக் கேள்வி கேட்டதில் புளகாங்கிதப் பட்டுப்போன கிருஷ்ணன் பரவசமாக..

"ஆமாம் தம்பி.. எங்க சித்ரா வாயத் தொறந்து 'கொட்டப் பாக்கும், கொழுந்து வெத்தல'யும் பாட்டப் பாடினா எங்க வீட்டு எருமமாடு கட்டுத்தறிய அறுத்துக்கிட்டு ஓடிரும்ன்னா பாருங்களேன்.." என்று பெருமை பீற்றி அம்புஜத்தின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தார்..

'விளங்கிரும்.. இந்த ஆளு புருசன்னு எங்கண்ணன் என் தலையில கட்டி வைச்சதில என்பாடு பெரும் பாடா இருக்கு.. ஆணொன்னு பொண்ணொன்னு ரெண்டு புள்ளைகளுக்கு அப்பனா இருந்து என்ன பிரயோசனம்.. அதுகள கரையேத்தனும்ங்கிற பொறுப்பு கடுகளவாவது இந்த மனுசன்கிட்ட இருக்குதா..? இம்சை.. பொறந்ததுக ரெண்டும் இந்த ஆளைப் போலவே தின்னிப் பண்டாரமா இருந்து என் உயிரைக் குறைக்குதுக.. குண்டனையும் குண்டத்தியையும் யாரு கட்டிக்குவாங்க..? என் அண்ணன் வீட்டில பொண்ணைக் கொடுத்து பொண்ண எடுத்தாத்தான் என் பொழைப்பு பொழைப்பா இருக்கும்.. இல்லேன்னா இதுகளுக்கு வழி பார்க்கிறதுக்குள்ள நான் ஒருவழியாகிருவேன்.. இதெல்லாம் இந்த வெட்டி ஆம்பளைக்கு பிடிபடுதா..?'

அம்புஜத்தின் மனம் புலம்பும் புலம்பலை அச்சுப் பிசகாமல் அவதானித்து விட்ட சுதர்சனம் குறுஞ்சிரிப்பு சிரித்து வைத்தார்.

"கேட்டுக்கங்க மச்சான்.. உங்க தங்கச்சி மக பாடினா எரும மாடே கட்டுத்தறிய அறுத்துக்கிட்டு ஓடிப் போயிருமாம்.. அஞ்சறிவு இருக்கற அதுவே ஓடிப் போகும் போது ஆறறிவு படைச்ச என் தங்கச்சி மகன் ஊரு விட்டு ஊரு ஓடி ஒளிய மாட்டானா..?"

சுதர்சனம் கேட்ட கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்க தசரதன் தங்கையின் மீது எரிந்து விழுந்தார்..

"இப்ப உன் மக 'கொட்டப் பாக்கும்.. கொழுந்து வெத்தலயும்'ன்னு பாட்டுப்பாடி எருமையை ஓட வைச்ச கதையை ஊரு முழுக்க சொல்லியாகனுமா..?"

"அண்ணா.. அது வந்து.."

"வாயை மூடு.. எரிகிற கொள்ளியில எண்ணையை ஊத்திக்கிட்டு.. பேசத் தெரிஞ்சா பேசு.. இல்லேன்னா வாயை மூடிக்கிட்டு இரு.. அதுக்கு முதல்ல உன் மக வாயை பாட்டுப் பாடக் கூடாதுன்னு மூடி வை.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லன்னு புறப்பட்டு வர்ற ரகு, உன் மக பாட்டக் கேட்டு

பின்னங்கால் பிடறியில பட சென்னையைப் பாத்து ஓடிறப் போறான்.."

"அண்ணா..?"

பேச முடியாமல் வாயடைத்துப் போனாள் அம்புஜம்.. சுதர்சனத்திடம் உறண்டை இழுக்க அவள் பேசப் போனால் வினை அவள் பக்கமே திரும்பி வீடு கட்டி விளையாடுகிறதே.. தங்கை மகள் என்ற பாசத்திலிருக்கும் தசரதனே சித்ரா பாட்டுப் பாட வாயைத் திறக்கக் கூடாது என்று சொல்லி விட்டாரே.

"ஹா.. ஹா.. ஹா.. மச்சான்.. முடியலை போங்க.."

விழுந்து விழுந்து சிரித்து அம்புஜத்திற்கு வெறியைக் கிளப்பி விட்டார் சுதர்சனம்.. அவரே அம்புஜத்தைக் கடுப்பேற்ற வாய்ப்புக் கிடைப்பதற்காக காத்திருப்பவர்.. லட்டு போல வரிசையாக முதல்லட்டு, இரண்டாம் லட்டு என்று 'சுதர்சனா.. லட்டு திங்க ஆசையா..?' என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புகள் வந்தால் விட்டு வைப்பாரா..? கபால் என்று பாய்ந்து கேட்ச் பிடித்து லபக் லபக் என்று விழுங்கி விட மாட்டாரா..?

"கிருஷ்ணன் அண்ணா.. அண்ணி பேசற பேச்சக் கேட்டு எங்க ஊரு திருவிழாவில பாட்டுக்கச்சேரி நடத்த சித்ராவத்தான் கூப்பிடலாம்னு இருந்தேன்.. கழுதையில இப்படி ஆகிப் போச்சே.. மச்சானே தங்கச்சி பொண்ணு வாயத் தொறந்து பாடிரக்கூடாதுன்னு 'தடா' போடுறாருன்னா, எங்க ஊரு ஆளுக என்ன பொளந்து கட்டியிருப்பாங்க.. நல்லவேளை அண்ணா.. தப்பிப் பிழைச்சேன்.."

"அப்படியா தம்பி.. அடப் பாவமே.. உங்கள நல்லவரு, வல்லவரு.. நாலும் தெரிஞ்சவருன்னுல்ல நினைச்சுக்கிட்டு இருந்தேன்.. இப்படியொரு அப்புராணியா இருந்துருக்கீங்களே.."

"அப்புராணி..? யாரு..? நானு..? ஏனுங்க அண்ணா, உங்க மனசில என்னப் பத்தி இம்புட்டு உயர்வான அபிப்ராயங்கள

வைச்சிருக்கிறது அண்ணிக்குத் தெரியுங்களா..?"

நமட்டுச் சிரிப்புடன் சுதர்சனம் கேட்ட பின்புதான் அம்புஜம் அருகில் இருக்கிறாள் என்ற விவரம் கிருஷ்ணனின் புத்தியில் உரைத்தது.. அவர் கலவரத்துடன் மனைவியைப் பார்த்தார்.. அவள் பார்வையில் அவரை 'கைமா' பண்ணி விடும் வெறி தெரிந்ததில் நடுநடுங்கிப் போனார்..

"ஹி..ஹி.. நான் நினைச்சேன்னு சொல்லலை தம்பி .. ஊர் நினைச்சதுன்னு சொன்னேன்.."

"இனி மாத்திப் பேசி பிரயோசனமில்லண்ணா.. ஊர் நினைச்சது உங்களுக்கு எப்படித் தெரியும்ன்னு நீங்க தனியா எம்புடும் போது அண்ணி மண்டகப்படி நடத்துவாக.. அவுகளுக்குப் பதில் சொல்லிக்கங்க.. சுமித்ரா.. சுக்கா வறுவல் ரெடியாம்மா..?"

சுதர்சனம் வெற்றிவாகை சூடியவராக கோழி வறுவலை ஒரு கை பார்க்கக் கிளம்ப, கூடவே கிருஷ்ணனும் தொற்றிக் கொண்டார்.. அம்புஜத்திடம் அகப்பட்டால் அவள் திருவிழா கொண்டாடி விடுவாளே..

"இருங்க தம்பி.. நானும் வர்றேன்.."

"உங்களுக்கு மட்டன் சுக்காதானே பிடிக்கும்..? இது சிக்கன் சுக்கா.."

"ஐ.. அஸ்க்கு, புஸ்க்கு..! யாருகிட்ட..? இப்படிச் சொல்லி சிக்கன் சுக்காவை என் கண்ணிலேயே காட்டக் கூடாதுன்னு ஐடியா பண்றீங்களா..? உங்களுக்கு இது தங்கச்சி வீடுன்னா, எனக்கு மச்சினன் வீடு.. நீங்க பொண்ணைக் கொடுத்திருக்கீங்கன்னா, நானு பொண்ணைக் கட்டியிருக்கேன்.. உங்களுக்கு இருக்கிற உரிமை எனக்கும் இருக்கு.. ஆமா.. சொல்லிட்டேன்.."

"ஆஹா..! கோழிக்கறிக்காக உரிமைப் போராட்டம் நடத்தறீங்களே.. இப்பேற்பட்ட புருசனைக் கட்டிக்க அண்ணி தவமாய் தவமிருந்திருக்கணும் போங்க.. அசத்தறிங்க அண்ணா.."

சுதர்சனம் அம்புஜத்தைப் பார்த்த கேலிப் பார்வையில் பூமியில் புதையுண்டு போனாலென்ன என்று வெறுத்துப் போனாள் அம்புஜம்..

இப்படிக் கோழிக்கறிக்கு மட்டும் உரிமை பேசும் கணவரை வைத்துக் கொண்டு அவள் நினைத்ததை எப்படி செய்து முடிப்பாள்..?

9

ஓடிக் கொண்டிருந்த பஸ் சாலையிலிருந்து பிரிந்து விலகி ஒரு ஹோட்டலின் முன் நின்றது.. அங்கே பலபஸ்கள் நின்று கொண்டிருக்க நடுநாயகமாக நின்ற பஸ்ஸில் இருந்து குதித்து இறங்கிய டிரைவர், கண்டக்டர் வருகிறாரா என்று திரும்பிப் பார்த்தார்..

"பஸ் இங்கே கால்மணி நேரம் நிற்கும்.. டீ, காபி சாப்பிடறவங்க சாப்பிட்டுக்கலாம்.."

பொதுவான ஒரு அறிவிப்பைக் கொடுத்து விட்டுக் குதித்து இறங்கிய கண்டக்டர் டிரைவருடன் ஜோடி போட்டுச் சிரித்துப் பேசியபடி ஹோட்டலுக்குள் நுழைந்தார்..

ரகுநந்தன் மடியில் பூக்குவியலாக உறங்கிக் கொண்டிருந்த அஞ்சனலட்சுமியைப் பார்த்தான்.. எழுப்ப மனமில்லை.. அவன் எழுப்பவில்லையென்றாலும்.. அவனருகில் நடந்த பயணிகளின் காலடிச் சப்தமும்.. பேச்சுக் குரல்களும் அவளை எழுப்பி விட்டன..

"கால்மணி நேரத்தில என்ன என்னத்தைப் பார்க்கிறதாம்..?"

"அப்புடித்தான் சொல்லுவாங்க.. ஆள் வரலைன்னு சொன்னாக் காத்திருப்பாங்க.. நீ வா.. வயித்தப் பசிக்குது.. நாலு புரோட்டாவ வாங்கி வயித்தில தள்ளலாம்.."

"நான் ஒற்றை புரோட்டவ திங்கவே ஒரு மணி நேரம் பத்தாது.. இதில நாலு புரோட்டவை வயித்தில தள்ள நேரம் வேணுமே.."

தலைமாட்டில் நடந்த உரையாடல் காதுக்குள் ரீங்காரமிட்டதில் கண்விழித்த அஞ்சனா மெத்து மெத்தென தலையணையின் மீது படுத்திருப்பதைப் போல உணர்ந்தாள்..

'என்னதிது..?'

கேள்வியுடன் பார்த்தவளின் முகத்துக்கு நேரே குனிந்திருந்தது ரகுநந்தனின் முகம்.. அவசரமாக அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தவள் அவன் மடியில் சுருண்டு படுத்து உறங்கி விட்டதை உணர்ந்தாள்.. கனிவான அவனது பார்வையில் அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது..

'இவன் என்னன்னு நினைத்திருப்பான்..?'

அவன் என்னவோ நினைத்து விட்டுப் போகட்டும் என்று தட்டி விட்டும் போக முடியாது.. அவளுக்கு இதுபோன்ற நிகழ்வு பழக்கமல்ல.. நுரை மெத்தையில் படுத்து உறங்கியவள் இன்று ஓடும் பஸ்ஸில் அருகிலிருக்கும் வாலிபனின் மடி சாய்ந்து அயர்ந்து உறங்கும் அவலம் வந்து விட்டது..

"ஐ'ம் ஸாரி.." சங்கடத்துடன் முணுமுணுத்தாள்..

"இட்'ஸ் ஆல்ரைட்.." அவன் பெருந்தன்மை போல காட்டிக் கொண்டான்..

மனதுக்குள் பூமாரி பொழிந்து கொண்டிருந்தது.. அவள் அவனுடைய மடியில் சொந்தத்துடன் சுருண்டு படுத்துக் கொண்டிருப்பதை ஒட்டு மொத்த பஸ் பயணிகளும் பார்த்திருந்தனர்.. அதில் வேறு அந்தப் பெரியவர்..

"பொண்டாட்டிய இந்தத் தாங்கு தாங்காதேப்பா.. உன்னைப் போலதான் நானும் வயதுக்காலத்தில் என் பொண்டாட்டியத் தூக்கித் தலமேல வைச்சுக்கிட்டு

ஆடினேன்.. இன்னும் இறக்கிவிட முடியல.." என்று அவருடைய அனுபவத்தை மேற்கோள் காட்டி அறிவுரை வேறு சொல்லி விட்டுச் சென்றார்..

'ஆஹா.. இவளை என் பொண்டாட்டினுல்ல சொல்றாரு..'

தாத்தா என்று பெரியவரைக் கட்டிப் பிடித்து முத்தமாரி பொழிய வேண்டும் போல இருந்தது.. மடியில் அஞ்சனா இருந்ததினால் தன் பாசப்பெருக்கை அணை போட்டுத் தடுத்து வைத்தான்..

"ஹோட்டல் போல இருக்கே.."

அஞ்சனா சுற்றும் முற்றும் பார்த்தாள்.. பஸ்ஸில் ஒருவருமில்லை.. காலியாக இருந்தது.. அதிகாலையில் கிளம்பிய பஸ்.. காலை உணவை முடிக்க அனைவரும் ஹோட்டலில் தஞ்சமடைந்திருக்க வேண்டும்.. இல்லையென்றால் இயற்கை உபாதை இழுத்திருக்கும்.. பஸ் நிற்கும் இடத்தில் இருக்கும் பாத்ரூமை உபயோகப்படுத்திக் கொண்டால்தான் உண்டு.. அடுத்து எங்கு நிற்குமோ..? யாருக்குத் தெரியும்..?

"ஆமாம்.. வாங்க.. சாப்பிட்டு வந்து விடலாம்.."

இருவரின் பெட்டிகளும் பஸ்ஸில் இருக்க அவர்கள் இருவரும் இறங்கி ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள்..

"அங்கே ஏஸி ஹால் இருக்கு.." அஞ்சனா கை காட்டினாள்..

தலையை ஆட்டிய ரகுநந்தன் இரண்டு டேபிள்கள் தள்ளி அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த டிரைவர், கண்டக்டரிடம் சென்று..

"நாங்க சாப்பிட்டு வந்துடறோம் சார்.. லேட்டாகிருச்சுன்னா விட்டுட்டுப் பஸ்ஸைக் கிளப்பிராதீங்க.. பெட்டி ரெண்டும் பஸ்ஸில் இருக்கு.." என்று சிரித்தபடி கோரிக்கை வைத்தான்..

"ஆகட்டும்.. அதுக்காக புருசனும் பொண்டாட்டியும் கதை பேசிக்கிட்டே காலத்தக் கடத்தாம சட்டுப் புட்டுன்னு சாப்பிட்டுட்டு வந்திருங்க.. ரொம்ப நேரம் காத்துக்கிட்டு

இருக்க முடியாது.." கறாராக சொல்லி அனுப்பி வைத்தார் கண்டக்டர்..

ரகுநந்தன் நகர்ந்தான்.. டிரைவர் கண்டக்டரிடம் கடிந்து கொண்டார்..

"எதுக்குய்யா.. இந்த எகிறு எகிறுகிற..?"

"நீ வேற.. இந்த எகிறு எகிறலென்னா ரெண்டு பேரும் ஏஸி ஹாலுக்குள்ள டூயட் பாடிக்கிட்டு இருப்பாங்க.. பஸ்ஸிக்குள்ள படு குஷாலா அந்தப் பொண்ணு இந்தாளு மடியில படுத்து தூங்கிக் கிட்டு வருது.. இந்தாளு என்னவோ கைப்புள்ளய அணைச்சு பிடிச்சுக்கிட்டு இருக்கிறதப் போல அந்தப் பொண்ண அணைச்சுப் பிடிச்சுக்கிட்டு வந்தான்.."

"பாத்தா புதுசா கட்டிக்கிட்ட ஜோடிக போல இருக்கு.. அந்தாளு பொண்டாட்டிய அவன் பார்த்துக்கிறான்.. உனக்கேன்ய்யா காண்டு..? சின்னஞ்சிறுசுக சந்தோசமா இருந்துட்டுப் போகட்டுமே.. கரிச்சுக் கொட்டாதே.."

"ஆமாய்யா.. அதுக சின்னஞ்சிறுசுக.. நீயும் நானும் தடிய ஊண்டிக்கிட்டு இருக்கிற கிழவனுக.. போவியா.."

அந்த உரையாடலை செவி மடுத்த ரகுநந்தன் இறக்கை கட்டி வானில் பறக்காத குறையாக உற்சாகமடைந்தான்.. அவனையும் அஞ்சன லட்சுமியையும் கணவன் மனைவியென்று பஸ்ஸின் கண்டக்டரும் டிரைவரும் நினைத்துப் பேசியதில் அவனது உள்ளம் மகிழ்ந்தது..

இஞ்சி தின்ற குரங்கைப் போல வாயை இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை இழுத்துச் சிரித்து மகிழ்ந்தபடி ஏஸி ஹாலுக்குள் வந்து உட்கார்ந்த ரகுநந்தனை விசித்திரமாக பார்த்தாள் அஞ்சனா..

"வாட் ஹேப்பன்..?"

"அது நடந்துச்சு நிறைய.. அது எதுக்கு உங்களுக்கு..? நாம சாப்பாட்டைக் கவனிப்போம்.."

அருகில் வந்த சர்வரிடம் அஞ்சனலட்சுமிக்கும் சேர்த்து அவனே ஆர்டர் செய்தான்.. முறைப்பாக அவனைப் பார்த்த அஞ்சனலட்சுமி..

"எனக்கு என்ன வேணும்னு நீங்களே டிசைடு பண்ணக் கூடாது.. என்ன வேணும்னு என்னைக் கேட்டிருக்கனும்.." என்று பாய்ந்தாள்..

"உங்களைப் பார்த்தா பீட்ஸா, பர்கர்ன்னு சாப்பிடறவங்களப் போல இருக்குதுங்க.. இங்கே அதெல்லாம் இருக்காது.. ஸோ.. நானே ஆர்டர் பண்ணிட்டேன்.." சண்டைக்கு வராமல் பின்வாங்கினான் ரகுநந்தன்..

அஞ்சனா அவன் சொன்ன அயிட்டங்களைத்தான் சாப்பிடுவாள்.. அதனால் வாயை மூடிக் கொண்டாள்.. சூடான உணவு வகைகள் வந்ததும் அவள் நொடிப் பொழுதில் காலிசெய்ய..

'இவ்வளவு பசியுடன் இருந்தாளா..?' என்று புருவங்களைச் சுருக்கினான் ரகுநந்தன்.. அவர்கள் சாப்பிட்டு முடித்து எழுந்து கொள்ளும் போது..

"ரெஸ்ட்ரூம் எங்கே..?" என்று பேரரிடம் கேட்டாள் அஞ்சனா..

அவன் கைகாட்டிய திசையில் அவள் விரைந்துவிட.. ரகுநந்தன் ஹோட்டல் வாசலுக்கு வந்தான்.. பஸ்ஸின் ஹாரன் ஒலி கேட்டது.. ஏறிட்டுப் பார்த்தான்.. அவர்கள் வந்த பஸ் கிளம்பிக் கொண்டிருந்தது.. கண்டக்டர் படியருகே நின்று.

"வாய்யா.. சீக்கிரம்.." என்று சப்தம் போட்டுக் கொண்டிருந்தான்..

"ஒரு நிமிசம் சார்.. அவங்க பாத்ரூம் போயிருக்காங்க.." இவன் இங்கிருந்து கூவினான்..

"இந்தப் புதுசா கட்டிக்கிட்ட ஜோடியோட தொல்லை தாங்க முடியல.." தலையில் அடித்துக் கொண்டான் கண்டக்டர்..

அஞ்சனா வருகிறாளா என்று ரகுநந்தன் வழிமீது விழிவைக்க..

"என்ன ரகு.. புதுசாக் கட்டிக்கிட்ட பொண்டாட்டியாமே.. ஊரில என்னடான்னா உங்கப்பன் உன் அத்தை மகளை உனக்குக் கட்டி வைக்க நாள் குறிச்சுக்கிட்டு இருக்கான்.. நீ என்னடான்னா யாருக்கும் தெரியாம திருட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டு பொண்டாட்டியோட ஊரைச் சுத்திக்கிட்டு இருக்க.." என்று அவன் காதோரம் குரல் கேட்டது..

'யாருடா இது..?'

உக்கிரமாக திரும்பியவன் அரண்டு போனான்.. அங்கே நின்றிருந்த பெரியவர் தசரதனுக்கு பெரியப்பா முறையிலுள்ள உறவினர்..

"தாத்தா.." என்ன சொல்வது என்று தெரியாமல் திருதிருத்தான்..

"பாண்டிச்சேரியில ஒரு வேலையிருந்தது.. நேத்து வந்தேன்.. வேலை முடிஞ்சு ஊரைப் பாத்து போயிக்கிட்டு இருக்கேன்.. உன்னைப் பாத்ததும் கையோட என் காரில கூப்பிட்டுக்கிட்டுப் போயிரலாம்ன்னு நின்னா, நீ உன் புதுப்பொண்டாட்டியோட வந்திருக்க.. உங்க ரெண்டு பேரையும் என் காரில ஏத்திக்கிட்டுப் போனேன்னு வைய்யி.. உங்க கல்யாணத்த நான்தான் முன்னே நின்னு நடத்தினேன்னு உன் அத்தை அம்புஜம், என்னை அக்கு வேறு ஆணி வேறா பிரிச்சுப் போட்டிருவா.. நான் வேற ரெண்டு நாளா ஊரில இல்ல.. எனக்கெதுக்கு வம்பு..? நான் காரில முன்னாடி போறேன்.. நீ பஸ்ஸில உன் புதுப்பொண்டாட்டியக் கொஞ்சிக்கிட்டே பின்னாடி வந்து சேரு.. எப்படியோப்பா.. அம்புஜம் மக சித்தானை சித்ராகிட்ட இருந்து தப்பிச்சுட்ட பாரு. அந்த வகையிலே நீ கெட்டிக்காரன்தான்.."

பெரியவர் காரில் ஏறிப் பறந்துவிட ரகுநந்தன் சிலையாக நின்றான்.. அஞ்சனலட்சுமி வந்த பின்னும் அசையாமல் நின்ற ரகுநந்தனைப் பார்த்த கண்டக்டர் கனல் கண்ணனாக அலறியடித்துக் கொண்டு அஞ்சனலட்சுமியுடன் பஸ்ஸீக்குள் பாய்ந்தான்.. பதுமை போல அஞ்சனலட்சுமி ஜன்னலோர சீட்டில் அமர, அருகே

அமர்ந்த ரகுநந்தனின் மனம் திருவாரூரில் காத்திருக்கும் பேராபத்தை மறந்தது.. நூதனமானதொரு இன்ப உணர்வு மனதை மாற்றிவிட கள்ளுண்ட வண்டாக மாறி அவளைப் பார்த்தான்.

10

அம்புஜம் மனதின் பதட்டத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயன்றாள்.. தசரதனின் தாட்டியத்தைப் பற்றி அவளுக்கு யாதொரு சந்தேகமும் இல்லை.. தங்கையின் மகளைக் கட்டாயம் தன் மகனுக்கு திருமணம் செய்து வைக்க முனைவார்.. 'கட்டுடா தாலியை' என்று ரகுநந்தனை மிரட்டுவார்..

ஆனால் அவர் மகன் அதற்கென்ன அப்பா என்று தாலியைக் கையில் எடுக்க வேண்டுமே.. எங்கே உள்ளூரில் இருந்தால் குண்டுக்கட்டாக அவனைத் தூக்கி மணமேடையில் உட்கார வைத்து விடுவார்களோ என்ற பயத்தில் உள்ளூரில் பார்த்த வேலையை சென்னை டெபுடேசன் என்ற பெயரில் மாற்றிக் கொண்டு ஓடி ஒளிந்து கொண்டவன் அவன்.. ஊர்ப்பக்கம் எட்டிப் பார்த்தால் தந்தை கல்யாணத்தைப் பற்றி பேச்செடுத்து விடுவார் என்று ஊர்ப்பக்கமே எட்டிப் பார்க்காமல் சென்னையே கதியென்று இருந்தவன்..

'உன்னைப் பெற்ற தாய்க்கு உடம்பு சரியில்லை..' என்று பொய் சொல்லியல்லவா கிளம்ப வைத்திருக்கிறார்கள்..

'அவன் மட்டும் இங்கே வந்து அண்ணி சமையல்கட்டில கோழியை வறுத்துக்கிட்டு இருக்கிறதைப் பார்க்கனும்.. என்னை வறுத்துருவான்.. எதுக்கும் அவன் வந்ததும் அண்ணன் பின்னாலே ஒளிஞ்சு நின்னுக்கனும்..'

தசரதனைப் பார்த்தாள் அம்புஜம்.. அவர் தங்கையைப் பார்க்காமல் சுதர்சனத்திடம் எதையோ ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்.. அந்தப் பக்கம் அமர்ந்திருந்த

கிருஷ்ணன் கோழி சூப்பை சுவைத்து ரசித்து பருகிக் கொண்டிருந்தார்.. அம்புஜத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது..

'விவரம் கெட்ட மனுசன்.. நாம பொண்ணைக் கட்டிக் குடுக்கனும்ங்கிறதுக்காக வந்திருக்கிறோம்ங்கிற நினப்பில்லாம என்னவோ மறுவீட்டுக்கு வந்திருக்கிற புதுமாப்பிள்ளை மாதிரி கறிக்கஞ்சிக்குப் பறந்துக்கிட்டு இருக்குது.. இம்சை.. இப்படியிருந்தா எங்கண்ணன் எப்படி தங்கச்சி புருசன்னு கையில பிடிப்பாரு..? இந்தா.. இந்த மனுசன் பக்கத்தில உக்காந்திருக்கப்பவே மச்சினன் கூட இல்ல பழமை பேசிக்கிட்டு இருக்காரு..? அது இந்த மனுசன் புத்தியில் கொஞ்சமாச்சும் உறைச்சிருந்தா கோழி சூப்பை இந்த உறிஞ்சு உறிஞ்சிக்கிட்டு இருக்குமா..? எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கு பாரு..' மானசீகமாக சுவரில் முட்டிக் கொண்டாள்..

தசரதனுடன் பேச்சு பேச்சாக இருந்தாலும் அம்புஜத்தையே ஆராய்ச்சி பார்வை பார்த்துக் கொண்டிருந்த சுதர்சனத்தின் விழிகளில் கேலி மிண்ணியது.. அவளது முகபாவத்திலிருந்தே மனவோட்டத்தைப் புரிந்து கொண்டவர் நமட்டுச் சிரிப்புச் சிரித்தார்.. அம்புஜத்திற்கு உயிரே போவது போல இருந்தது..

அம்புஜத்திற்கும் சுதர்சனத்திற்கும் இடையில் நடக்கும் பனிப்போர் தசரதனின் குடும்பத்தின் மீது யாருக்கு முதல் உரிமை என்பதினால் மட்டும் ஆரம்பித்த போரல்ல...

அதற்கு முன்னரே, தசரதன் சுமித்ராவைத் திருமணம் செய்து கொள்ளப் பேச்சு வார்த்தை நடந்த போதே ஆரம்பித்து விட்டது.. தசரதன் - சுமித்ராவின் திருமணப் பேச்சு வார்த்தையை இடையிலிருந்து நடத்தி வந்த பொதுவான உறவினர் ஒரு வார்த்தையை விட்டார்..

"ஏன் தசரதா.. உனக்கும் சின்ன வயசிலேயே தாய், தகப்பன் தவறிட்டாங்க.. அங்ஙன சுதர்சனத்தின் வீட்டிலயும் அப்பாம்மா இல்ல.. அண்ணன், தங்கச்சி மட்டும்தான்.. சொத்து, சுகத்தில நீயும், சுதர்சனமும் ஒருத்தருக்கொருத்தர்

விட்டுக் கொடுத்தவங்க இல்ல.. நீங்க ரெண்டு பேரும் ஏன் பொண்ணுக் கொடுத்துப் பொண்ண கட்டிக்கக் கூடாது..? ஒன்னுக்குள்ள ஒன்னா ஒருத்தருக்கொருத்தர் ஆதரவாய் போயிருமில்ல..?"

உறவினரின் கேள்வியில் தசரதன் யோசிக்க ஆரம்பித்தார்.. அம்புஜம் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல் ஆணவமாக குறுக்கிட்டாள்..

"அந்த வீட்டில பொண்ணு எடுக்கறதே பெரிய விசயம்.. இதில நான் வேற வாக்கப்பட்டுப் போகனுமா..? எங்கண்ணனும் அந்த சுதர்சனமும் இணையா..? அந்தாளுக்கு வேணும்னா எங்கண்ணனுக்குப் பொண்ணக் கட்டிக் கொடுக்கறது பெருமையா இருக்கலாம்.. அந்தாளுக்குத் தங்கச்சியைக் கட்டிக் கொடுக்கறதில எங்கண்ணனுக்கு ஒன்னும் பெருமை கிடையாது.. யாரு தங்கச்சிய யாரு கட்டிக்கிறது..?"

அம்புஜத்தின் பேச்சு சுதர்சனத்தின் காதை எட்டியது.. அவர் கொதித்துப் போனவராக இடையில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த உறவினரிடம் கண்டித்து சொல்லி விட்டார்..

"பாருங்க பெரியப்பா.. ஊடே பேச்சு வார்த்தை நடத்தினது நீங்கங்கிறதினால பொறுமையாப் போறேன்.. உங்க முகத்துக்காகப் பார்க்கிறேன்.. இல்லேன்னா நடக்கிறதே வேற.."

"பொறுமையாப் போ சுதர்சனா.. அந்தப் பொண்ணு அம்புஜம்தான் அகங்காரம் பிடிச்சது.. தசரதன் குணசாலி.. கெட்டிக்காரன்.."

"அதுக்காகத்தான் நானும் யோசிக்கிறேன்.. இல்லேன்னா இந்த சம்பந்தமே வேணாம்ன்னு ஒட்டு மொத்தமா தூக்கியடிச்சிருப்பேன்.. தசரதனுக்கு என் தங்கச்சியைக் கட்டிக் கொடுக்கிறதுக்கு மட்டுமே எனக்குச் சம்மதம்.. அத விட்டுட்டு அந்த அம்புஜத்த என் தலையில கட்ட நினைச்சீங்க.. என் தங்கச்சிக்கு வேற மாப்பிள்ளையைப் பார்த்து அடுத்த மூகூர்த்தத்திலேயே நாளைக் குறிச்சுக்

கட்டிக்கொடுத்திட்டுப் போய்க்கிட்டே இருப்பேன்.. சொல்லிட்டேன்.."

சுதர்சனத்தின் நிபந்தனை தசரதனின் செவியை எட்டியது.. அவர் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார்.. சுதர்சனம் அம்புஜத்தைப் புறக்கணித்து விட்டார் என்று குற்றம் சொல்ல முடியாது... இங்கே அம்புஜம்தான் சுதர்சனத்தை புறக்கணிப்பதைப் போல பேசியிருக்கிறாள்.. சுமித்ராவின் அழகும் அமைதியும் திருவாரூரைச் சுற்றியிருந்த ஊர்களில் பிரசித்தமானது.. தேர்த் திருவிழாவைக் காண வரும் சுமித்ராவைப் பார்க்காததைப் போலப் பார்த்து மயங்கிப் போய் பெண் கேட்டு விட்டவர் தசரதன்.. சுமித்ராவை எப்படி மறப்பார்..?

"அந்தாளுக்கு இருக்கிற கொழுப்பைப் பார்த்தீங்களாண்ணே.. உங்களுக்கே கண்டிசன் போடறாரு.. இப்பவே இப்படின்னா நாளைக்குப் பொண்ணைக் கொடுத்த பின்னாடி தலையில ஏறி உக்காந்துக்க மாட்டாருன்னு என்னண்ணே நிச்சயம்..? அப்படி நான் என்ன சொல்லக் கூடாததையா சொல்லிட்டேன்..? என் அண்ணன் எனக்கு உயர்த்தி.. அதைத்தான் சொன்னேன்.. நீங்க எப்படித் தணிஞ்சு போய் பொண்ணு கேட்டு விட்டுப் பேச்சு வார்த்தையை ஆரம்பிச்சீங்க.. அத மனசில வைச்சுக்கிட்டு அந்த ஆளு தணிஞ்சு போகனுமா, வேணாமா..? அந்தாளு தங்கச்சி மட்டும் உசத்தி.. உங்க தங்கச்சி என்ன மட்டமா..?" அம்புஜம் உருவேற்றி விட்டாள்..

அவளது திட்டமே அதுதானே.. அவளுக்குத் தசரதனை விட்டால் பிறந்த வீட்டுச் சொந்தமென்று யாருமில்லை.. அதை தசரதன் உணர்ந்து விடாமலிருக்கும் பொருட்டு வாய்க்கு வாய்..

"என் அண்ணனுக்குச் சொந்தம்ன்னு சொல்லிக்க என்னை விட்டா யாரிருக்கா..?" என்று சொல்லி அவர் மனதில் உருவேற்றி வைத்திருந்தாள்..

அது மாறப் போகிறது.. தசரதனுக்கு என்று ஒருத்தி வரப் போகிறாள்.. அதுவும் அவர் மனதுக்குப் பிடித்தவள், அவர் விரும்பிப் பெண் கேட்டு விடும் அளவுக்கு அவர் மனதைக் கவர்ந்தவள் என்பதில் அம்புஜத்தின் தலையில் இடி இறங்கியது.. தசரதனின் மீதான அவளது உரிமைப் பிடிப்பு ஆட்டம் கண்டது..

அண்ணியாக வருபவளை அடக்கி ஒடுக்கி மூலையில் உட்கார வைக்க வேண்டுமென்றால் ஆரம்பத்திலேயே தசரதனை இறுக்கிப் பிடித்து நிமிர்ந்து நிற்க வைக்க வேண்டும்.. இளகிப் போய் மனைவி, மைத்துனன் என்று கலந்துறவாட விட்டு விடக்கூடாது.

அம்புஜம் அதைத்தான் செய்தாள்.. சுமித்ராவைப் பெண் பார்க்கப் போனபோதே ஆணவமாக கால் மேல் கால் போட்டு உட்கார்ந்தாள்.. எனக்கு நீங்களெல்லாம் இணையா என்பதைப் போலத் துச்சமாக பார்த்து வைத்தாள்.. அதில் சினம் கொண்ட சுதர்சனத்தின் முறைப்பு அவளைக் கவர்ந்தது..

'தெனாவெட்டா இருக்கானே.. தங்கச்சிக்கு கொடி பிடிப்பானோ.. ஆரம்பத்திலேயே இவனத் தட்டி வைச்சிரனும்..'

அப்படிச் செய்வதாக நினைத்து யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதைப் போல அம்புஜமும் அவள் தலையில் அவளே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டாள்..

சுதர்சனத்திற்கும் அவளுக்குமான திருமணப் பேச்சு வார்த்தை எழுந்தது அவளுக்கு இன்ப அதிர்ச்சிதான்.. சுதர்சனத்தின் அலட்சியம் நிரம்பிய ஆளுமைக் குணம் அவளை ஈர்த்ததுதான்.. அதை ஒப்புக் கொண்டால் அவள் எப்படி அம்புஜம் ஆவாள்..?

'அவன் தங்கச்சி இந்த வீட்டில நாத்தனான்னு எங்கிட்ட பயந்து சாகனும்.. அவ பொறந்த வீட்டில நான் அண்ணிகாரி, என் தயவு வேனும்னு பயந்து அடி பணியனும்.. அந்த சுதர்சனம் என்னை ஒரு சொல்லு

சொன்னா அவன் தங்கச்சி வாழா வெட்டியா வீட்டுக்கு வந்திருவான்னு அஞ்சி நடந்துக்கனும்.. என்னைக் கட்டிக்கக் கொடுத்து வைச்சிருக்கனும்னு எனக்கு பாதபூஜை பண்ணனும்.. எனக்கு அவன் இணையில்லங்கிற நினைப்பு அவன் மனசில இருக்கனும்.. அவனுக்கு நான் கிடைச்சது பூர்வ ஜென்மத்தில அவன் செஞ்ச புண்ணியம்ன்னு மகிழ்ந்து போகனும்.. அண்ணனும் தங்கச்சியும் நான் நில்லுன்னா நிக்கனும்.. உக்காருன்னா உக்காரனும்.. ஆக மொத்தத்தில இந்த அம்புஜத்துக்கு ஆயுள் கால அடிமைகளா இருக்கனும்..'

இப்படி நினைத்தால் நடக்குமா..?

சுதர்சனம் தான் யாரென்று காட்டி விட்டார்.. தசரதன் சுமித்ராவைத் திருமணம் செய்து கொள்வதாக இருந்தால் உடனே சொல்லியனுப்ப வேண்டும்.. இல்லையென்றால் அந்த வார இறுதியில் பக்கத்து ஊர் பண்ணையார் மகனுக்குத் திருமணம் பேசி முடித்து விடுவோம் என்று அவர் சொல்லியனுப்பியதில் தசரதனுக்கும் கோபம் வந்தது.. அதுதான் வாய்ப்பென்று சுமித்ரா வேண்டாமென்று அம்புஜம் தூபம் போட்டாள்.. அவனை வேண்டாமென்று சொன்ன சுதர்சனத்தின் தங்கையை அவளது அண்ணன் திருமணம் செய்து கொள்வதா..?

"தூக்கியடிங்கண்ணே.. உலகத்திலேயே இவன் தங்கச்சிதான் ரதியா..? அழகு பெத்த பொண்ணுக ஆயிரம் இருக்கு.. அடுத்த முகூர்த்தத்திலேயே அதுகள்ல ஒன்னு கழுத்தில நீங்க தாலியைக் கட்டுங்க.. இவனுக்குத்தான் பக்கத்து ஊரு பண்ணையார் மகன் கிடைப்பானா..? நமக்கு அடுத்த ஊரு பணக்காரன் மகள் கிடைக்க மாட்டாளா..? விட்டுத் தள்ளுங்கண்ணே.."

தசரதன் அம்புஜத்தின் பேச்சைத்தான் தள்ளி வைத்தார்.. இந்த விசயத்தில் அம்புஜத்தின் தூபப்புகையை தட்டிவிட்டார்..

"பொண்ணுக் கேட்டுப் போனது நாம.. இப்ப பொண்ணை அவன் வேற இடத்தில கட்டிக் கொடுத்தா நமக்குத்தான்

தலைகுனிவு.."

'உனக்குத் தலைகுனிவுன்னு சொல்லு.. உன்னோட எதுக்கு என்ன இணை கூட்டற..?' அம்புஜம் மனதுக்குள் புகைந்தாள்..

'ஆனாலும் உனக்கு இம்புட்டு விவரம் ஆகாதுண்ணே.. என்னை அந்த சுதர்சனம் வேண்டாம்ன்னு சொல்லிட்டான்.. அது உனக்குத் தலை குனிவு இல்ல.. நீ கட்டிக்க நினைச்ச பொண்ண அவன் வேற பக்கம் கொடுத்துட்டா மட்டும் உனக்கு தலைகுனிவு வந்துருமாக்கும்..?'

தசரதன் திருமணத்துக்கு நாள் குறித்து விட்டார்.. அம்புஜம் தோல்வியைத் தழுவ மனமில்லாமல் கட்டை கொடுத்தாள்..

"பாருங்கண்ணா.. உத்தமனான உங்களப் பத்தி ஊருக்குள்ளே குறைவாப் பேசறாங்க.. என்னைப் பேசினா பொறுத்துக்குவேன்.. என் அண்ணனைப் பேசினா எப்படிப் பொறுத்துக்குவேன்..?" என்று கண்ணைக் கசக்கினாள்..

"யாரு, என்ன சொன்னது..?" தசரதனின் மீசை துடித்தது..

"நீங்க சுயநலக்காரனாம்.. வயசுக்கு வந்த தங்கச்சி வீட்டிலிருக்க உங்களுக்குப் பெண் தேடிக்கிட்டிங்களாம்.. தாய், தகப்பனில்லாத தங்கச்சியக் கட்டிக் கொடுக்காம தான் முதல்ல கல்யாணம் கட்டிக்கனும்னு நாள் குறிச்சிருக்கானே.. இவனெல்லாம் ஒரு மனுசனான்னு ஊரிலே பேசித் தெளிக்கிறாங்கண்ணே.." அம்புஜம் கண்களைக் கொட்டியபடி அவள் பேச நினைத்ததை ஊர் பேசியதாக சொல்லித் தீர்த்தாள்..

"அதுவும் சரிதானே.." தசரதன் கிளம்பி விட்டார்..

அம்புஜத்தின் குணமறிந்து நடந்துகொள்ளும் கிருஷ்ணனை மாப்பிள்ளையாகப் பார்த்து ஒரு வாரத்திற்குள் திருமணத்தை நிச்சயித்து மறு வாரத்தில் தடபுடலாக திருமணத்தை நடத்தியும் முடித்தார்..

ஏற்கனெவே 'சிறுவாடு' என்ற பெயரில் வீட்டில் இருந்த பணத்தையெல்லாம் சுருட்டி வைத்திருந்தாள் அம்புஜம்..

அவளுடைய தாயின் நகைகளைக் கைப்பற்றியிருந்தாள்.. இவை எதையும் அறியாத தசரதன் அறுநூறு பவுன் நகை, வைர அட்டிகை, திருவாரூரில் வீடு, அறுபது ஏக்கர் நிலம் என்று சொத்தில் முக்கால்வாசியை தங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தார்..

வீட்டில் குண்டு மணித் தங்கம் கூட இல்லாமல் அம்புஜம் வழித்து எடுத்து சென்றுவிட.. மகாலட்சுமியாக வலது காலை எடுத்து தசரதனின் வீட்டில் வைத்து வாழ வந்தாள் சுமித்ரா.. அள்ள அள்ளக் குறையாத சீர்வரிசைகளுடன் வந்து தசரதனையும் வாழ வைத்தாள்..

தங்கையின் திருமணம் முடிந்தவுடன் துளசியைத் திருமணம் செய்து கொண்டார் சுதர்சனம்.. குடும்பத்திற்கு ஏற்ற குத்துவிளக்காக இருந்தாள் துளசி.. அவளையும் சுதர்சனத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது அம்புஜத்தின் அடிவயிறு எரியும்.. ஏதேனும் ஓர் வகையில் சுதர்சனத்தைத் தோற்கடித்து விடத் துடித்தாள் அம்புஜம்.. சுதர்சனமோ சவால் விடாமலே ஜெயித்துக் கொண்டிருந்தார்..

## 11

ஜன்னல் வழியே தெரியும் காட்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அஞ்சனா.. மனம் தாத்தா சாம்பசிவத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தது.. அவர் எப்படியிருக்கிறாரோ என்ற நினைவில் கண்ணீர் விட்டாள்..

'தாத்தாவுக்கான ட்ரீட்மெண்டில் குறைவிருக்காது.. அவர் கண்விழித்தால் அவங்களுக்கு லாபம்தானே.. அவருக்கு உடம்பு சரியில்லைன்னு ஆனதும் நான் எங்கேயோ ஓடிப் போயிட்டேன்னு கதை கட்டிவிட தோதா இருக்குமே.. அவங்க அதைத் தானே செய்ய நினைத்தாங்க.. என்ன ஒன்று.. என் கதையை முடித்துட்டு அப்படி கதை கட்டி விடலாம்னு

பேசிக்கிட்டாங்க.. இப்ப என் கதையை முடிக்காமலே கதை கட்டி விடப் போறாங்க..'

அவளை சைட் அடித்துக் கொண்டிருந்த ரகுநந்தன் துணுக்குற்றான்..

"என்னங்க ஆச்சு..?"

அவளது கண்ணீரை அவன் கவனித்து விட்டான் என்பதில் பதட்டம் கொண்ட அஞ்சனா அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்..

"நத்திங்.. கண்ணிலே ஏதோ டஸ்ட் பட்டிருச்சு.. தட்ஸ் ஆல்.."

ஏஸி பஸ்ஸின் கண்ணாடி ஜன்னல் கதவை அவன் ஓர்முறை பார்த்துவிட்டு அவளை வினோதமாகப் பார்த்தான்..

"அடைச்சிருக்கிற கதவை ஓட்டை போட்டு தூசி உள்ளே வந்து உங்க கண்ணில விழுந்துச்சா..? யாரிடம் சரடு விடறிங்க..?"

"சரடா..?"

"சரடு மீன்ஸ் த்ரடு, காயில், சம் ஒன்.. அதை விடுங்க... அதுவா இப்ப முக்கியம்..? உங்களுக்கு என்ன பிரச்னை..?"

"தட் இஸ் மை பிராப்ளம்.."

முகத்தில் அடிபட்டதைப் போல உணர்ந்தான் ரகுநந்தன்.. இனிய கனவு கலைந்ததைப் போல இருந்தது.. சற்று முன் அவன் மடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தவள் இது என்னுடைய பிரச்னை என்று விலக்கி வைக்கிறாள்.. அதுதானே உண்மை..

"இருக்கட்டுங்க.. உங்க பிரச்னை என்னன்னு என்னிடம் ஷேர் பண்ணிக்கலாமில்ல..?"

"வாட் ஃபார்..? என் பிராப்ளம் என்னோடு.."

"ஓகே.. உங்க பிரச்னையில் நான் உரிமை கொண்டாடலை.. அதை நீங்களே லாக்கரில் வைத்துப் பூட்டிக்கங்க.. கண்

கலங்காதீங்க.. மனசுக்கு கஷ்டமாயிருக்கு.. யாருக்குத்தான் பிரச்னையில்லை..? பிரச்னையைக் கண்டு கண்ணீர் விட்டுக்கிட்டு இருந்தா எல்லாம் சரியாகிருமா..? எதிர்த்து நிக்கனுங்க.. ஃபைட் பண்ணி ஜெயிக்கனும்.."

அவன் முஷ்டியை உயர்த்திக் காண்பித்தான்.. கவலை மறந்து அவள் சிரித்தாள்.. அவன் முகம் மலர்ந்தது..

"மத்தவங்க பிராப்ளத்தை தள்ளி நின்று வேடிக்கை பார்த்துட்டு அட்வைஸ் பண்றது செம ஈஸி ரகுநந்தன்.. பிராப்ளத்துக்கு உள்ளே இருக்கிறவங்களுக்குத்தான் தெரியும் வலியும், ரணமும்.. உங்களுக்கென்ன சார்.. உலகம் பிறந்தது எனக்காகன்னு உல்லாசமா ஹேப்பியா லைஃபை என்ஜாய் பண்ற ஆள் நீங்க.. பிராப்ளமே இல்லாத லைஃப் உங்களுடையது.. என் பிராப்ளம் உங்களுக்குப் புரியாது.. விட்டு விடுங்க.."

'உன்னை விடுவதா..?'

விட்டுத்தான் ஆக வேண்டும்.. திருவாரூரில் பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் அவள் யாரோ, அவன் யாரோ என்ற உண்மை தாக்கியதில் அவனது மனம் வலித்தது..

"ஆமாங்க.. எனக்குப் பிரச்னையில்லை.. உல்லாசமா ஊர் சுத்தறேன்.. ஏங்க நீங்க வேற.. ஓடிக்கிட்டு இருக்கேங்க.."

அவள் நம்பாத பார்வை பார்த்தாள்.. ரகுநந்தனின் போன் இசைத்தது.. அவன் அலுத்துக் கொண்டான்..

"நான் என்ன சொன்னாலும் நீங்க நம்பப் போவதில்லை.. இதோ.. என் பிரச்னையே என்னை அழைக்குது.."

அஞ்சனா போனை பார்த்தாள்.. அப்பா என்ற எழுத்துக்கள் ஒளிர்ந்தன.. அவள் புருவங்களைச் சுருக்கினாள்..

"உங்க டாட் கால் பண்றார் போல.. இவரையா பிராப்ளம்ன்னு சொல்கிறிங்க..? டூ பேடு.."

"அவர் எனக்கு குட் டாடியா இருக்கனுமே.. அவரோட தங்கைக்கில்ல குட் பிரதரா இருந்து தொலைக்கிறாரு.."

ரகுநந்தன் அலுத்துக் கொண்டபடி போனை ஆன் செய்தான்..

"அப்பா.."

"எங்கேடா இருக்க..?"

"பஸ்ஸில் இருக்கேன்ப்பா.."

"அந்த வெங்காயமெல்லாம் தெரியுது.. எந்த இடத்தில இருக்க..?"

"இப்பத்தான் திண்டிவனத்தை பஸ் தாண்டுது.."

"இப்பத்தான் திண்டிவனத்தைத் தாண்டுதா..? ஏன்..?"

"இந்தக் கேள்வியை டிரைவரிடம்தான் கேட்கனும்.."

"சரி, சரி.. சீக்கிரமா வந்து சேரு.. உங்க அம்மா, புலம்பிக்கிட்டே இருக்கா.. உன்னப் பார்க்கனுமாம்.."

"பஸ்ஸ விட்டு இறங்கினதுமே வீட்டுக்குத்தானே வந்து சேரப் போறேன்..? அப்ப ஆசை தீரப் பார்த்துக்கச் சொல்லுங்க.."

எரிச்சலுடன் போனை அணைத்தவனை விசித்திரமாகப் பார்த்தாள் அஞ்சனா..

"ஏன் இந்தப் பார்வை..?" ரகுநந்தன் புருவங்களை உயர்த்தினான்..

"அப்பா போன் பண்ணினா பிராப்ளம்ங்கறிங்க.. அம்மா பார்க்கனும்னு புலம்பறாங்கன்னா எரிச்சலாப் பேசறிங்க.. அப்பாம்மா பாசம் கிடைக்கிறதுக்கு கொடுத்து வைச்சிருக்கனும் ரகுநந்தன்.. அவங்க இல்லாதவங்களுக்குத்தான் தெரியும் பேரண்ட்ஸோட அருமை.."

தொண்டை கரகரக்கப் பேசியவளை இரக்கத்துடன் பார்த்தான் ரகுநந்தன்..

"உங்களுக்குப் பேரண்ட்ஸ் இல்லையா..?"

"இல்லை.." அவள் பெருமூச்சு விட்டாள்..

'இருந்திருந்தா நான் ஏன் இப்படி ஓடிக்கிட்டு இருக்கப் போகிறேன்..?' அவள் மனம் அழுதது..

"எனக்கொன்னும் என் அப்பாம்மா மேல வெறுப்பில்லைங்க.. அப்பாவுடன் பிறந்த அத்தை ஒன்னு இருக்கு.. அதுக்கு ஒரு பொண்ணு இருக்கு.. அதை என் தலையில கட்டனும்னு முடிவோட அது செயல்படுது.. அதுக்கு அப்பா தலையை ஆட்டறாரு.. அங்கே இருந்தா தினமும் போராட்டம்தான்னு டெபுடேசன் வாங்கிக்கிட்டு சென்னைக்கு ஓடிப் போனேன்.. டிரான்ஸ்பர் வாங்க முடியாது.. அப்பா ரகளை பண்ணுவார்.. ஓடிப் போனவன கல்யாணத்தில் மாட்டி வைக்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, உன்னைப் பார்க்கனும்னு சொல்லுதுன்னு டிராமா போட்டு வர வைக்கிறாரு.. கோபம் வராம எப்படிங்க இருக்கும்..?"

"அது டிராமான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"என் தங்கை போன் பண்ணி விசயத்தை சொல்லிட்டா.."

"உங்களுக்குத் தங்கை இருக்கிறாளா..?"

"ஆமாம்.. ஒரே தங்கை.. ரதி மீனான்னு பெயர்.."

அவனுடைய குடும்ப விவரங்களை அவளிடம் சொல்வதில் அவனுக்கு உற்சாகமாக இருந்தது.. மனதுக்குள் விசிலடித்துக் கொண்டான்.. வெளிப்படையாக விசில் அடித்தால் அவள் அவனை 'விசிலடிச்சான்' என்று எண்ணி விடலாம்.. பஸ்ஸில் உடன் பயணம் செய்யும் பயணிகள் ஒரு மார்க்கமாக பார்த்து வைக்கலாம்.. ஏன் கண்டக்டர்தான் விசிலடிக்கிறார் என்று டிரைவர் பஸ்ஸை நிறுத்தி விடலாம்..

அடுத்தடுத்து வந்து விடும் அபாயங்களைத் தவிர்க்கத்தான் அவன் மனதுக்குள் விசிலடித்தது.. இதிலெல்லாம் அவன் செமவிவரம் என்று அவனுடைய ஆதர்ச கதாநாயகன் சுதர்சனமே சான்றிதழ் வழங்கியிருக்கிறார்..

"அமுக்குளியா ஆட்டம் போடறதில உன்ன அடிச்சுக்க யாராலேயும் முடியாதுடா மாப்பிள்ள.."

அந்த நினைவில் புன்னகைத்துக் கொண்டான்.. இடுக்கண் வரும் போதே சிரிக்கலாமாம்.. வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்.. இங்கே இடுக்கண்ணை எதிர்கொள்ள இன்னும் நேரமிருக்கிறது.. இது பஞ்சவர்ணக்கிளியுடன் அவன் அளவளாவிக் கொண்டிருக்கும் நேரம்..

'நேரம் நல்ல நேரம்..'

மனதுக்குள் பாடல் வந்தது.. சுதர்சனம் பக்கத்தில் இருந்திருந்தால்,

'வரும்டா மாப்பிள்ள.. வரும்.. பக்கத்தில சித்தானை சித்ரா இல்லாம, கொடி போல பொண்ணு இருந்தா, உனக்கு பாட்டு மட்டுமா வரும்..? மயக்கமும் இல்ல சேர்ந்து வரும்..' என்று கிண்டல் பண்ணியிருப்பார்..

"என்ன.. நீங்களா சிரிச்சுக்கறிங்க..?" அவனை விசித்திரமாகப் பார்த்தபடி கேட்டாள் அஞ்சனலட்சுமி..

"என் தாய்மாமாவை நினைச்சுக்கிட்டேங்க.."

"அவரை நினைத்தாலே சிரிப்பு வந்துருமா..?"

"ஆமாங்க.. அவர் அப்பேற்பட்ட மனிதர்.. என்னோட ஹீரோ.."

காதலுடன் சொன்னவனைப் பார்த்து வாய்பொத்தி..

"களுக்.." என்று சிரித்து வைத்தாள் அஞ்சனலட்சுமி..

"ஏங்க.. நானென்ன ஜோக்கா சொன்னேன்..?" புரியாமல் வினவினான் ரகுநந்தன்..

"மாமா மகளை இப்படிக் காதலுடன் நினைத்தால் நல்லாயிருக்கும்.. நீங்க மாமாவை நினைச்சுல்ல மயங்கறிங்க.."

"ஓ.. நீங்க அப்படிக்கா வர்றீங்களா..?"

ரகுநந்தன் உரக்கச் சிரித்தான்.. பஸ்ஸில் இருந்த சக பயணிகள் திரும்பிப் பார்த்தனர்.. அஞ்சனலட்சுமி உதடுகளைக் குவித்து அவற்றின் மேல் ஒற்றை விரலை வைத்து..

"உஸ்ஸ்.." என்றாள்.

குவிந்த உதடுகள் ரோஜாவின் இதழ்களாக அவனை அழைத்ததில் அவன் தடுமாறினான்..

'இன்னும் என்னை என்ன செய்யப் போகிறாய்..?

என் அன்பே.. அன்பே..'

இப்போது இந்தப் பாடல் மனதில் ஒலித்துக் தொலைத்தது.. இதமான அந்த இம்சைகளில் தொலைந்து கொண்டிருந்தான் ரகுநந்தன்.. கண்ணாமூச்சி விளையாடும் காதல் உணர்வுகள்தான் எத்துனை நுட்பமானவை.. இன்ப லாகிரியில் அவனை அமிழ்த்தி மூச்சுத்திணற வைக்கின்றனவே.. நூதனமான இந்த உணர்வுகளைத் தோற்றுவித்தது யார்..? அந்த மன்மதனா..?

"பஸ்ஸில் நாம் மட்டுமில்லை.. மைண்ட் இட்.."

"ஐ'ம் ஸாரி.. பேச்சு சுவராஸ்யத்தில சிரிச்சுட்டேன்.."

அவள் அவனையே பார்த்தாள்.. இதுபோன்ற சுவராஸ்யமானப் பேச்சுக்களை அவள் பேசியிருக்கிறாளா என்று யோசித்தாள்.. இல்லை.. அவள் பேசியதில்லை.. சிறுவயது முதலே அவள் தாத்தாவின் அன்பான கண்காணிப்பில் வளர்ந்தவள்.. நொடிப் பொழுதையும் வீணாக்காமல் அவளுக்கு பிஸினெஸ் நெளிவு, சுளிவுகளையும், நுட்பங்களையும் கற்றுக் கொடுப்பதிலேயே அவர் கவனமாக இருந்தார்.. பள்ளிப் பருவத்திலேயே அவளை கம்பெனிக்கு அழைத்துச் செல்வார்.. கல்லூரியில் காலடி வைக்கும் போது அஞ்சனலட்சுமி அவளுடைய பெயரில் இயங்கும் கம்பெனிகளை நிர்வகிக்கும் திறமையைப் பெற்றிருந்ததிற்கு சாம்பசிவத்தின் டிரெயினிங்தான் காரணம்.. அவளுக்கு ஆசுவாசமாக உட்கார்ந்து பேசிச்

சிரிக்க நேரமும் இருந்ததில்லை.. மனிதர்களும் இருந்ததில்லை..

'அதைத்தானே அவர்களாலே தாங்கிக்க முடியல..' அஞ்சன லட்சுமியின் கண்கள் சிவந்தன..

சாம்பசிவம் ஆழ் மயக்கநிலையில் விழுந்தபோது தொழிலகளைப் பார்க்க முடியாமல் அவள் தடுமாறுவாள் என்று சாம்பசிவத்தின் தம்பி மகனும், மகளும் நினைத்தார்கள்.. அஞ்சனலட்சுமியின் பெற்றோர் மறைவுக்குத் துக்கம் விசாரிக்க வந்தவர்கள், தாத்தாவும் பேத்தியும் தனியாக இருக்கிறார்களே என்று அனுதாபப்பட்டு சேர்ந்து இருப்பதைப் போல பெங்களூரிலேயே தங்கி விட்டார்கள்.. அஞ்சனாவுக்குத் தனிமை உணர்வு இல்லாமல் இருக்கும் என்று சாம்பசிவம் அதை ஆட்சேபிக்கவில்லை.. ஆனால் தம்பி பிள்ளைகளை தன் பிள்ளைகள் என்று அவர் நினைத்ததில்லை.. தள்ளியே வைத்திருந்தார்..

அதைத்தான் "கிழவனுக்கு வினயம்.." என்று அவருடைய தம்பி மகனான நடராஜன் விமரிசித்தார்.. அவருடைய சொத்துக்களைக் கொடுத்து வைத்திருந்தைப் போல..

"ஆமாங்க.." என்று ஆமோதித்தாள் நடராஜனின் மனைவி பரிமளா..

"சரியாச் சொன்ன அண்ணா.. நாம நம்ம குடும்பத்தோட இந்த வீட்டில உக்காந்திருக்கோம்.. அந்த நன்றி உணர்ச்சி மனசில இல்லாம... உனக்கும், என் புருசனுக்கும் கம்பெனியில பங்கு கொடுக்காம, மாதச் சம்பளத்தில வேலை கொடுத்திருக்கிற வினயக்காரனில்ல இந்தக் கிழவன்.."

"அதைச் சொல்லு.." பெரிய மாமனாரின் வீட்டோடு மாப்பிள்ளையாக செட்டிலாகி விட்ட வெட்கமில்லாமல் வழிமொழிந்தார் அவளது கணவனான நாராயணன்..

"சரி.. போனாப் போகட்டும்.. அந்த அஞ்சனாக் கழுதையை என்மகன் பிரசன்னாவுக்கு கல்யாணம் பண்ணி

வைச்சுட்டா சொத்து நம்ம கைக்கு வந்திரும்.. என் மகளை உன் மகனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்து நாம ஒன்னுக்குள்ள ஒன்றாகிரலாம்.. சொத்தை சரிபங்கா பிரித்துக்கிரலாம்ன்னு கணக்குப் போட்டுக் கிழவன்கிட்டச் சொன்னா, அது சரிவராதுன்னு ஒற்றை வார்த்தையில முடிச்சிருச்சே.. அத்தோட விட்டுச்சா.. நீங்க ரெண்டு பேரும் ஒன்றுக்குள்ல ஒன்றா ஆகனுமுன்னா உங்க பிள்ளைகளைப் பெண் கொடுத்துப் பெண்ணெடுத்துக்க வேண்டியதுதானே.. அதுதான் ஆணொன்னு பொண்ணொன்னு பெற்று வைத்திருக்கீங்கள்ல.. இதில் சம்பந்தமில்லாம அஞ்சனாவை ஏன் இழுக்கறிங்கன்னு கேட்ட கிழமில்ல இது.." வெறுப்புடன் பேசினாள் சாந்தா..

"நம்மை தம்பி பிள்ளைகள்ன்னு நினைக்கல.. வேலைக்காரங்களாத்தானே வைச்சிருந்தது." அதே வெறுப்பை உமிழ்ந்தார் நடராஜன்..

"கேட்டா.. அந்தக்காலத்திலேயே உங்கப்பன் ஒட்டு மொத்தச் சொத்தையும் அபகரிச்சுக்கிட்டான்.. நான் கையும் காலோட பெங்களூருக்குப் பிழைக்க வந்தேன்.. உழைச்சு முன்னேறியிருக்கிறேன்னு கதை சொல்லுவான்."

"இந்த ஆளை நம்ம அப்பா வீட்டை விட்டு விரட்டினதில தப்பேயில்ல.."

"குடிச்சு அத்தனை சொத்தையும் அழிச்ச அப்பனைப் பத்திப் பேசாதே.."

"கூத்தியாளை விட்டுட்டியே.."

"அது ஒரு குறையா..? ஆனாலும் நம்ம அப்பா கெட்டிக்கார ஆளுதான்.. அத்தனை சொத்தையும் பிடுங்கிக்கிட்டு இந்தக் கிழவனைத் துரத்தியிருக்கே.."

அத்தனை பேச்சுக்களும் மனதில் ஓட அஞ்சனலட்சுமியின் முகம் வாடியது.. துயரத்துடன் ஜன்னல் மீது தலை சாய்ந்த்தாள்.. என் தோள் சாய்ந்தாலென்ன என்று ரகுநந்தன் தவித்துப் போனான்.

**'அலையே.. கடலலையே..!**

**நீ கலங்காதே.. மனம் மயங்காதே..**

**உன் அருகினில் நானிருப்பேன்..'**

ரகுநந்தனின் மனம் பாடியது.. அஞ்சனலட்சுமியின் துயரம் என்னவாக இருக்கக்கூடும் என்று தெரியாமல் அவனது மனம் கனத்தது.. திருவாரூரில் இறங்கியதும் காத்திருக்கும் போராட்டத்தைப் பற்றிய கவலையை அவன் மறந்தான்.. அவனது மனம் கவர்ந்த அஞ்சனாவின் மனதிலிருக்கும் சோகத்தை ஆற்ற விழைந்தான்..

இங்கே இப்படியிருக்க, திருவாரூரில் அவனது வீட்டில் சுதர்சனத்திற்கும் அம்புஜத்திற்குமான பனிப்போர் களை கட்டிக் கொண்டிருந்தது.. தங்கை மகனிடம் பேசலாம் என்று சுதர்சனம் செல்போனை கையில் எடுத்தார்.. அவரை நிஷ்டூரமாக முறைத்தாள் அம்புஜம்..

"இப்ப என்னத்துக்கு அண்ணி இப்படிப் பாக்கறிங்க..?" எரிச்சலுடன் கேட்டார் சுதர்சனம்..

"இப்ப யாருக்குப் போன் போடப் போறிங்க..?"

"யாருக்கோ.. அது எதுக்கு உங்களுக்கு..?"

"உங்க வீட்டில உக்காந்து யாருக்கு வேணும்னாலும் போனைப் போடுங்க கொளுந்தனாரே.. அது எதுக்கு எனக்கு..?"

"இது உங்க வீடா..?"

"என் அண்ணன் வீடு.. என் பிறந்த வீடு.."

"இந்த வக்கணையை நாங்களும் செப்புவோம்.. இது என் தங்கையின் வீடு.. அவ புகுந்த வீடு.."

"இந்த வக்கணைக்கு ஒன்னும் கொறைச்சலில்ல.."

அம்புஜம் தோள்பட்டையில் முகவாயை இடித்துக் கொண்டாள்.. அதைபடு அலட்சியமாகப் பார்த்து அவளது ரத்த அழுத்தத்தை எகிற வைத்தார் சுதர்சனம்.. அருகில் இடித்த புளியாக அமர்ந்திருக்கும் கணவனைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டாள் அம்புஜம்.. மனைவி எதற்காகத் தலையில் அடித்துக் கொள்கிறாள் என்று புரியாமல் அப்பாவியாக விழித்த கிருஷ்ணன்..

"இப்ப என்னத்துக்கு தலையில் அடிச்சுக்கிற அம்புஜம்..?" என்று கரிசனமாக விசாரித்தார்..

'ம்ம்ம்.. உங்களுக்குக் கழுத்தை நீட்டியிருக்கேனே.. அதுக்காகத்தான்..'

மனதில் நினைத்ததை வெளியில் சொல்ல முடியாமல் பல்லைக் கடித்தாள் அம்புஜம்..

"விவரம் கெட்ட மனுசன்.."

மைண்ட் வாய்ஸை அவள் சவுண்டு வாய்ஸாகப் பேசிவிட..

"அதுசரி.. உங்க விவரத்துக்கு முன்னால அண்ணனாலே தாக்குப் பிடிக்க முடியுமா..? இவரு பாவம்.. அப்பாவி மனுசன்.." என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்னார் சுதர்சனம்..

'எப்புடிக் கவுண்டரு கொடுக்கறான்.. இந்த மனுசனும் இருக்காரே..' அதற்கும் கணவரை முறைத்தாள் அம்புஜம்..

"அண்ணன் பாவம் அண்ணி.. இந்த முறைப்பு முறைச்சீங்கன்னா அவரு என்ன ஆவாரு..?"

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.."

"எங்கே..? நீங்க அந்தக் கவலையை எடுத்துக்கிட்டா நான் ஏன் வெட்டியாக் கவலப்படப் போறேன்..?"

"என்ன கொளுந்தனாரே.. விட்ட விடிகாலையில இருந்து வில்லங்கமாப் பேசனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கீங்க போல.. இருக்கிற இடத்த விட்டு நகராம

வில்லங்கத்துக்கு விதை போடறதில உங்கள அடிச்சுக்க ஆளே இல்ல கொளுந்தனாரே.."

"உங்க பாராட்டுக்கு நன்றி அண்ணி.. ஆனாலும் அண்ணி உங்கவாயாலே நீங்க வில்லங்கத்தப் பத்திப் பேசக் கூடாதுங்க அண்ணி.. வில்லங்கத்தோட மொத்த உருவமே நீங்கதானுங்களே.. மரமா நீங்க நிக்கிறப்ப, நான் விதை போட்டு என்னாகப் போகுது அண்ணி..?"

'போட்டுத் தாக்கறானே..'

எந்தப் பக்கமிருந்து அம்பெய்தாலும் அதைக் 'கபக்' என்று பாய்ந்து கேட்ச் பிடித்து விடும் சுதர்சனத்தின் வல்லமையில் வெம்பிப் போனாள் அம்புஜம்.. அவர் அங்கு வந்திருப்பது அவளை பயம் கொள்ள வைத்தது.. அண்ணன் மகனின் தலையில் அவளது மகளைக் கட்டிவிட அவள் காணும் கனா பலிக்காதோ என்ற கவலை வந்தது..

'இந்தம்மா முழிக்கிற முழியே சரியில்லயே.. மனதுக்குள்ளே என்ன சதிவேலையை யோசிக்குதோ..' சுதர்சனம் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தார்..

"என் முகத்தில என்ன இருக்கு..?" வெடுவெடுத்தாள் அம்புஜம்..

'சகுனி வேலை இருக்கு..' சொல்லாமல் மௌனித்தார் சுதர்சனம்..

'உக்காந்திருக்கிறதைப் பாரு.. இடிச்ச புளி மாதிரி.. என்ன சொன்னாலும் இடத்தக் காலி பண்ண மாட்டேங்கிறானே.. இவன் இங்கிருந்தா குச்சியை முறிச்சுப் போட்டுக் கட்டாயம் என் கனாவைக் கலைச்சுருவான்.. இவன ஓட்டிவிட ஒரு மார்க்கமும் அகப்பட மாட்டேங்குதே..'

அம்புஜம் அடுத்த அஸ்திரத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்தாள்..

"நாங்கள்ளாம் பொண்ணக் கொடுத்த வீட்டில கை நனைக்க யோசிப்போம்.. எங்கண்ணன் என் வீட்டுக்கு வந்து போகிறதே தெரியாது.. வாசலோட வந்துருவாரு.."

"எப்படி வீட்டுக்குள்ள வருவாரு..? அதுக்குள்ள நீங்க அண்ணன் வீட்டில குடும்பத்தோட டேரா போடலாம்ன்னு வீட்டுக் கதவை மூடிச் சாவியை இடுப்பில செருகிக்கிட்டு வாசலில் வந்து நின்னிருப்பீக.. அப்புறம் எப்படி உங்க வீட்டில வந்து அவரு விருந்தாடுவாரு.. ஒரு காப்பிக்கு வழியிருந்திருக்குமா..? அதுவே எங்க வீட்டில மச்சான் தலையைக் கண்டதும் கோழியடிச்சு, மீனைப் பிடிச்சு, முட்டையை அவிச்சுத் தடபுடலா விருந்தாக்கிப் போடுவோமே.. மச்சான் வந்து சாப்பிட்டு இளைப்பாறி ஒரு வாரம் தங்கியிருந்துட்டு இல்ல வருவாரு.."

அந்த அஸ்திரத்தையும் தவிடு பொடியாக்கினார் சுதர்சனம்..

"பொண்ணைக் கொடுத்தவரு இதக்கூடச் செய்யலைன்னா எப்புடி..? பதில் விருந்து தின்னத்தான் தங்கச்சி வீட்டில வந்து தங்கியிருக்கீங்களாக்கும்..?"

"ஆமாம்ன்னு சொன்னாக் குத்தமில்ல அண்ணி.. தங்கச்சியக் கட்டிக் கொடுத்த வீட்டில கை நனைச்சு விருந்தாடறதுக்கு எனக்கு ஆயிரம் காரணம் இருக்கு.. அதையெல்லாம் உங்ககிட்டச் சொல்லிக்கிட்டு இருக்கணும்ங்கிற அவசியமில்ல.. பொண்ணைக் கட்டிக் கொடுக்கிறதுக்கு முன்னாடியே இங்கே குடும்பத்தோட டேரா போட்டிருக்கிற நீங்கள்ளாம் பொண்ணைக்கட்டிக் குடுக்கிற வீட்டில கை நனைக்கிறதைப் பத்திப் பேசவே கூடாது.."

"வேற எதைப் பேசறது கொளுந்தனாரே.. வேணும்னா நடக்கப் போகிற என் மக கல்யாணத்தைப் பத்திப் பேசவா..?"

அதற்குத்தான் நீ விட மாட்டேன் என்கிறாயே என்ற காய்ச்சலுடன் கேட்டாள் அம்புஜம்..

"உங்க மக கல்யாணத்தைப் பத்திப் பேச நான் ஏன் தடா போடப் போறேன்.. தாராளமா பேசுங்க.." பெருந்தன்மையுடன் அனுமதி கொடுத்த சுதர்சனம்..

"ஆமாம்.. மாப்பிள்ள யாரு..? எந்த ஊரு..? என்ன பேரு..?" என்று கேட்டு சோதித்து வைத்தார்..

"என்னது..???"

ஆணானப்பட்ட அம்புஜத்திற்கே பேச வாய் வரவில்லை.. சுதர்சனம் போட்ட போட்டில் திக்கித் திணறினாள்.

உள்ளே தாய்க்கு உதவி செய்வதைப் போன்ற பாவனையுடன் ஹாலில் நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரதி மீனாவிற்கு சிரிப்புத் தாங்கவில்லை.. ஆர்ப்பாட்ட அம்புஜத்தை அனாசியமாக பந்தாடும் தாய்மாமனின் தாட்டியத்தை ரசித்தாள்..

"ம்மா.. மாமாவோட முடியல.. எப்படிக் கேக்கிறார்ன்னு பாருங்க.. அத்தைக்கு ஹார்ட் அட்டாக்கே வந்திருச்சு.." தாயிடம் முணுமுணுத்தாள்..

"ஹார்ட் அட்டாக்கெல்லாம் ஹார்ட் இருக்கிறவங்களுக்குத் தான் வரும்.. உங்க அத்தைக்கு ஏது ஹார்ட்டு..? இதயமில்லாத ஜென்மம்.." வெறுப்புடன் முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள் சுமித்ரா..

உள்ளூரில் வேலை கிடைத்தும் ஓய்ந்து உட்கார முடியாமல் சுமித்ரா பெற்ற மகன் சென்னைக்கு ஓடியதற்கு அம்புஜம்தானே காரணம் என்ற வெறுப்பு அவளுக்கு..

"கவலைப்படாதீங்கம்மா.. அதான் ட்ரீட்மெண்ட் கொடுக்க நம்ம மாமா இருக்காரில்ல.." உற்சாகத்துடன் சொன்னாள் ரதி..

"அந்த நிம்மதியிலதான் இருக்கிறேண்டி.. குத்துக்கல்லாட்டம் இருக்கிற எனக்கு உடம்பு சரியில்லன்னு என் மகனை திருவாரூருக்கு இழுத்துக்கிட்டு இருக்காங்களே.. என் நெஞ்சு கொதிக்குது.. சென்னையிலேயாவது என் மகனை நிம்மதியா இருக்க விடுதுகளா..? மனச்சாட்சி இல்லாத ஜென்மங்கள்.."

மனது கொதித்த கொதிப்பில் நாத்தனாரையும் கணவரையும் திட்டித் தீர்த்தாள் சுமித்ரா.. அவள் வேதனை

அவளுக்கு.. தாயைக் கட்டித் தோளில் முகம் புதைத்து ஆறுதல் படுத்தினாள் ரதி..

"கூல் மாம்.. அங்கே பார்த்தீங்களா.. உங்க அண்ணன் அலட்டிக்காம செஞ்சுரி அடிச்சுக்கிட்டு இருக்காரு.. அவரோட தங்கச்சி நீங்க.. அவரில பாதியாவது இருக்க வேணாமா...? அலட்டிக்காம ஆடுகளத்தில இறங்கி ஆடனும்மா.."

"அதுக்குத்தான் என் அண்ணன் இருக்காரே.. என்னை விடு.. கடோத்கஜிக்கு ஆக்கிப் போடப் போகனும்.."

"கடோத்கஜி..! ஹ..! எவ்வளவு பொருத்தமான பேரு.."

ரதிமீனா சத்தமின்றி குலுங்கிச் சிரித்தாள்.. தசரதன் தண்ணீர் கேட்டபோது மட்டும் அமைதியாக முகத்தை வைத்துக் கொண்டு தண்ணீர் சொம்பைக் கொண்டு போய் கொடுத்தாள்..

'மாமா போடற அணுகுண்டுக்கு அத்தைக்கு இல்ல தொண்டைத் தண்ணி வத்திப் போயி தண்ணி கேக்கனும்.. அப்பா ஏன் கேக்கறாரு..?' என்ற சிந்தனை வேறு..

"கேட்டுக்கிடிங்களா அண்ணே.. சுபத்திரையைக் காவக் காக்கிற தாட்டியமான அண்ணன் கண்ணனைப் போல என்னை நீங்க காவக் காத்து நிக்கிறப்பவே எப்படிக் கேள்வி வருதுன்னு..?"

அம்புஜம் பிலாக்கனத்தை ஆரம்பித்தாள்.. எதற்காக தந்தை தண்ணீர் கேட்டார் என்று ரதிமீனாவுக்கு பிடிபட்டது.. தசரதன் வருமுன் காக்கும் ரகம்.. அம்புஜத்தால் சுதர்சனத்திடம் மோத முடியாமல் பின்வாங்க நேரும்போது அவள் சார்பில் மோத அவள் தசரதனைத்தான் குறி வைப்பாள்.. அதற்காகத்தான் தசரதன் தண்ணீர் குடித்து தயாராகிறார்..

'அதுசரி.. ஒரு அண்டாத் தண்ணிய ஒருமிக்கக் குடித்தாலும் எங்க மாமா பேச்சுக்கு இசைப்பேச்சு பேச முடியுமா..?'

தகப்பனுடன் மோதப் போகும் தாய்மாமனின் பெருமையை சிலாகித்தது ரதி மீனாவின் மனம்..

"கேக்கிறது வேற யாருமில்லண்ணே.. உங்க மச்சினர்.. கொஞ்சமாச்சும் தங்கச்சிய இந்த வீட்டில கட்டிக் கொடுத்திருக்கோம்ங்கிற பயம் பத்து இருக்கா..? அப்படி இருந்திருந்தா உங்க முன்னாடியே உங்க தங்கச்சிய நாக்கு மேலப் பல்லப் போட்டுக் கேள்வி கேக்கிற தைரியம் வந்திருக்குமா..?" அம்புஜம் உருவேற்றினாள்..

"ஏன் அண்ணி..? இங்கே யாரு நாக்கு மேலப் பல்லப் போட்டுக் கேக்கக் கூடாத கேள்வியக் கேட்டது..? உங்க பொண்ணுக்குக் கல்யாணம்ன்னு சொன்னீங்க.. மாப்பிள்ள யாரு, எந்த ஊருன்னு கேட்டேன்.. இது ஒரு தப்பா..? அதுக்குப் போயி என் தங்கச்சிய இழுக்கறிங்க.. நீங்களாச்சும் சுபத்திரை, கண்ணன்னு புராணத்தை இழுத்துப் பாசப்பயிரை வளர்ப்பீங்க.. நாங்க அப்படியில்ல.. பிறப்பிலேயே சுதர்சனமும் சுமத்திரையும்ன்னு பிறந்தவங்க.. உங்களைக் கட்டிக் கொடுத்துட்டே என் மச்சான் பயம் பத்தில்லாம இருக்காரு.. அருமையான எந்தங்கச்சியக் கட்டிக் கொடுத்திருக்கிற நான் ஏன் பயப்படனும்..?"

ஹாலில் அம்புஜம் சட்டமாக உட்கார்ந்து கொண்டு சுமித்ராவின் தலையை உருட்டிக் கொண்டிருக்க, சுமித்ராவோ நாத்தனாரின் வாய்க்கு வக்கணையாக கோழி வறுவலை வறுத்துக் கொண்டிருந்தாள்..

"இது ஆடற ஆட்டத்துக்கு பல்லில பச்சைத்தண்ணி படாம வீட்டை விட்டு விரட்டியடிக்கனும்.. அண்ணனை வீடு தங்க விடாம விரட்யடிச்சிருக்கு.. இதுக்குப் போயி கோழியை வறுத்து ஆக்கிப் போடறிங்களேம்மா.." ரதிமீனா ஆதங்கப்பட்டாள்..

"வேற வழி..? எம்பிள்ளைக்கு அம்மாவா இந்த அம்புஜத்த ஒருகை பார்க்கணும்னுதான் மனசு துடிக்குது.. ஊடே உங்க அப்பா வந்து மதிலு சுவரு போல நிக்கிறாரே.. அவருக்காக அவரோட தங்கச்சின்னு ஆக்கிப் போட வேண்டியிருக்கே.." சேலை முந்தானையில் விழிகளைத் துடைத்துக் கொண்டாள் சுமித்ரா..

ரதிமீனாவுக்கு இரக்கமாக இருந்தது.. சுமித்ராவுக்கு மகன் மீது கொள்ளைப்பாசம்.. அவன் மனதுக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கத் துடியாய் துடித்தாள்.. அதற்கான சுதந்திரம் அவளுக்கு மறுக்கப்பட்டிருந்தது.. பத்து மாதம் சுமந்து பெற்றவளிடம் 'என் மகன்..' என்ற ஒற்றை வார்த்தையில் உரிமையைப் பறித்துக் கொண்டு தள்ளி நிறுத்தியிருந்தார் தசரதன்..

"விடுங்கம்மா.. உங்களாலே பேச முடியலைன்னா என்ன..? அதான்.. உங்களுக்குப் பதிலா நம்ம மாமா அம்புஜம் அத்தையை வாயைத் திறக்க விடாம வெளுத்துக் கட்டிக்கிட்டு இருக்காரே.." ஆறுதல் சொன்னாள் ரதி..

"அந்த நம்பிக்கையிலதான் நான் இருக்கேண்டி.."

"அதே நம்பிக்கையிலதான் அண்ணனும் துணிஞ்சு ஊருக்கு வந்துக்கிட்டு இருக்கு.."

தாயும் மகளும் நம்பிக்கையுடன் ஹாலைப் பார்த்தார்கள்.. அங்கே படு இயல்பாக சோபாவில் சாய்ந்து அமர்ந்து, சோபாவின் மீது ஒரு கையைப் போட்டுக் கால்களை ஆட்டியபடி, துளிக்கூட பதட்டமில்லாமல் தசரதனையும் அம்புஜத்தையும் எதிர்கொண்டு தலையால் தண்ணீர் குடிக்க வைத்துக் கொண்டிருந்தார் சுதர்சனம்..

"நம்ம மாமா இருக்காரே.." ரதிமீனா பெருமைப்பட்டாள்..

"இப்படி ஒரு அண்ணன் இருக்கிறப்ப அம்புஜம் அத்தைக் கெல்லாம் நீங்க அஞ்ச வேண்டியதே இல்லைதான் அம்மா.."

தமையனின் தாட்டியத்தில் பெருமிதம் கொண்டாள் சுமித்ரா.. தாங்கி நிற்கும் தமையன் வாய்க்கப் பெற்றவர்கள் கொடுத்து வைத்தவர்கள்..

"மச்சான் நீங்க பேசறது சரியில்லை.." தசரதன் மீசையை முறுக்கினார்..

"எது சரியில்லை மச்சான்..?" அறியாதவரைப் போல வினவி வைத்த சுதர்சனம், அருகில் அமர்ந்திருந்த கிருஷ்ணனிடம்..

"ஏன் அண்ணா.. நான் சரியில்லாம எதைப் பேசினேன்..?" என்று கேட்டும் வைத்தார்..

சமையலறையில் இருந்து வந்த அசைவ உணவு வகைகளின் வாசனையில் நாசியைத் தோய்த்திருந்த கிருஷ்ணன் நடந்து கொண்டிருந்த வாக்குவாதத்தைக் கவனிக்கவில்லை..

அம்புஜம் ஒன்றும் அமைதியின் சிகரமில்லையே.. ஆணவமாகப் பேசிக் கொண்டிருப்பவளின் வாய் அடங்கி இருந்ததே இல்லையே.. அதுவும் சுதர்சனத்தைக் கண்டு விட்டால் அவள் வம்புச் சண்டைக்கு சென்று விடுவது வழக்கம்தானே.. அதனால் கிருஷ்ணன் அம்புஜத்தின் வாயை கண்டு கொள்ளவில்லை.. திடிரென சுதர்சனம் அவரது தோள் தட்டி கேள்வி கேட்கவும்..

"நீங்க என்றைக்கு சரியில்லாம பேசினிங்க தம்பி..? எதைப் பேசினாலும் சரியாத்தானே பேசுவீங்க.." என்று சொல்லி விட்டார்..

"கேட்டுக்கிட்டிங்களா..?" தங்கையின் கணவரிடம் கேட்டபடி அம்புஜத்தைக் கேலியாக பார்த்தார் சுதர்சனம்..

"கேட்டுக்கிட்டிங்களா அண்ணே.." அதே கேள்வியை நாத்தளுதளுக்க கேட்டாள் அம்புஜம்..

"கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேம்மா.. உன் புருசனே இப்படிச் சொன்னா, நான் என்னத்தைக் கேள்வி கேக்கிறது..?"

மைத்துனனுடன் சண்டை வளர்க்காமல் தப்பிக்கப் பார்த்தார் தசரதன்.. அதை கண்டு கொண்ட அம்புஜம் வெகுண்டாள்..

"என் புருசனை நானாத் தேடிக்கிட்டேனா அண்ணா..? அண்ணியைப் பிடிச்சிருக்குன்னு ஆள் விட்டு நீங்க பொண்ணு கேட்டதைப் போல இந்த மனுசனைப் பிடிச்சிருக்குன்னு உங்ககிட்ட கை காட்டினேனா..? நீங்க கை காட்டின மாப்பிள்ளைக்கு மறுபேச்சு பேசாம கழுத்தை நீட்டின தியாகிண்ணா நானு.."

அம்புஜம் கண்களைத் துடைத்துக் கொள்ள சுதர்சனம் கிருஷ்ணனை மேலும் கீழும் பார்த்து விட்டு..

"யோவ் அண்ணா.. உம்ம பொண்டாட்டி தியாகியாம்.." என்று முணுமுணுத்தார்..

"யாரு..? இவ தியாகியா..? இவளுக்குத் தாலியக் கட்டி மாட்டிக்கிட்ட நான்தான் தியாகின்னு ஊருக்கே தெரியுமே தம்பி.." பதிலுக்கு முணுமுணுத்தார் கிருஷ்ணன்..

"உங்க மனசுக்குப் பிடிச்ச பொண்ணை நீங்க கட்டிக்கிட்டிங்களே.. என் மனசுக்குப் பிடிச்ச மாப்பிள்ளைக்கு என்னைக் கட்டிக்கொடுக்காம இப்படியொரு விவரம் கெட்ட மனுசனுக்குக் கட்டி வைக்கறீங்களேன்னு நான் ஒற்றைக் கேள்வி கேட்டிருப்பேனா..?"

அம்புஜத்தை விட்டால் அன்று முழுவதும் இதைப்போலப் பேசி தசரதனை ஓர் வழி பண்ணி விடுவாள் என்பதனால் சுதர்சனம் குறுக்கிட்டார்..

"அடடா அண்ணி.. உங்க வாய் தாட்டியத்துக்கு வாய் பேசாத அண்ணன்தான் தோதுன்னு மச்சான் நினைச்சிருப்பாரு.. மத்தவனா இருந்தா நீங்க பேசற பேச்சுக்கு ஒன்று உங்களை ஓட்டி விட்டிருப்பான்.. இல்லேன்னா அவனே ஓடிப் போயிருப்பான்.. அண்ணனா இருக்கப்போயி இருந்து பொழைக்கிறாரு.. மகனுக்கும் மகளுக்கும் கல்யாண வயசாகிருச்சு.. அதுகளுக்கு ஆளப் பாத்துக் கல்யாணத்தை முடிச்சு வைக்கிற வழியப் பாப்பீங்களா.. அத விட்டுட்டு இப்பத்தான் பதினாறு வயசான மயிலு மாதிரி உங்க கல்யாணக் கதையைப் பேசிக்கிட்டு இருக்கீங்க.. சுமித்ரா.. சமையல் ஆகிருச்சுன்னா தட்டைப் போடும்மா.. சாப்பிட்டுட்டு ஒரு தூக்கம் தூங்கி எழுந்திருக்கலாம்..

மாப்புள்ள வந்துட்டான்னா பஞ்சாயத்துப் பேச சக்தி வேணும்.. இருக்கிற எனர்ஜிய இப்பவே போக்கியாச்சுன்னா ரகு வந்து நிக்கிறப்ப கத்தறதுக்கு சக்தி வேணாமா..?"

அவர் சாப்பிடப் போகலாம் என்று எழுந்து நின்றதில் கிருஷ்ணன் உற்சாகமாகி..

"வாங்க போகலாம்.. வாங்க போகலாம்.." என்று பறப்பாய் பறந்தார்..

"பாருங்க அண்ணி.. அண்ணன் பறக்கிறத.. என்னைக்காவது ஒருநாள் வாய்க்கு ருசியா, வக்கணையா கறிக்கஞ்சி ஆக்கிப் போட்டிருந்திங்கன்னா இந்த அளவுக்குப் பறப்பாரா.? எங்கே.. நீங்கதான் வருசம் முழுவதும் அண்ணன் வீட்டிலேயே சீராடறிங்களே.. எந்தங்கச்சி நாத்தனாவைக் கவனிக்கனும்னு வாய்க்கு ருசியா வக்கணையா ஆக்கிப் போட்டு அண்ணனை கவனிச்சுக்குது.. நீங்க அந்த எண்ணமில்லாம அதுமேலேய பிராது சொல்லிக்கிட்டு இருக்கறிங்க.. ம்ம்ம்.. எண்ணம் போலதான் வாழ்க்கையும் அமையும்.." சுதர்சனம் சீண்டினார்..

"என் எண்ணத்துக்கு என்ன..? அது நல்லாத்தான் இருக்கு.. என்னை உள்ளங்கையில வைச்சுத் தாங்கற அண்ணன் இருக்கிற வரைக்கும் எனக்கு என்ன குறை..?" அம்புஜம் சிலிர்த்தாள்..

"அடேங்கப்பா.. மச்சான் உள்ளங்கை என்ன அம்புட்டுப் பெரிசாவா இருக்கு..?" சுதர்சனம் தசரதனின் கையைப் பார்த்தார்..

"நக்கலு..?"

"இல்லிங்க அண்ணி.. விக்கலு.. சுமித்ரா தண்ணியக் கொண்டா.."

"போதும் கொளுந்தனாரே.. இந்த நக்கல், நையாண்டியெல்லாம் எங்கிட்ட வேணாம்.. என் மகனுக்கும், மகளுக்கும் கல்யாணம் பண்ணி வைக்க நான் ஏன் வேறு

இடத்தில ஆளப் பாக்கனும் என்கூட சம்பந்தம் பண்ணத்தான் எங்கண்ணன் ஆண் ஒன்னு, பொண்ணொன்னு பெத்து வைச்சிருக்காரே.."

"அதுக்கு..?"

"பொண்ணக் கொடுத்துப் பொண்ணக் கட்டுவேன் கொழுந்தனாரே.."

சுதர்சனத்திற்கு தண்ணீர் கொண்டு வந்த ரதிமீனா அம்புஜத்தின் பேச்சைக் கேட்டதும் திகிலடித்துப் போனவளாக கையிலிருந்த தண்ணீர் தம்ளரை நழுவ விட்டாள்.. தங்கை மகளைக் கனிவுடன் பார்த்த சுதர்சனம்..

"இதுக்கெல்லாம் பயந்தா எப்புடிம்மா..? உங்கண்ணன் ஆம்பளை.. டெபுடேசன்னு ஊரை விட்டு ஓடிப் போயிட்டான்.. நீ பொம்பளப்புள்ள.. ஓடவும் முடியாது.. ஒளியவும் முடியாது.. தாய்மாமன்னு நான் ஒருத்தன் எதுக்கு இருக்கேன்..? எனக்குப் பெண்பிள்ளைதான் இல்லை.. சிங்கம் போல ரெண்டு ஆண்பிள்ளைகளைப் பெத்து வைச்சிருக்கேன்.. எக்காரணம் கொண்டும் உன்னை விட்டுத் தரமாட்டேன்.. நீ உள்ளே போ.." என்றார்..

ரதிமீனா உள்ளே ஓடி விட்டாள்.. தாய்மாமனின் பேச்சுக்குக் கட்டுப்படும் அண்ணன் மகளை ஆங்காரமாகப் பார்த்த அம்புஜம் சுதர்சனத்திடம் சீறினாள்..

"எங்க அண்ணன் மகளைக் கட்டிக்க எனக்குத்தான் உரிமையிருக்கு கொளுந்தனாரே.. நீங்க யாரு ஊட வர..?"

"உங்க அண்ணன் மகளோட தாய்மாமன்..! நான் வராம வேற யாரு வருவா..? ரதிமீனா என் தங்கச்சி மக.. அவளை என் மகனுக்குக் கட்டி வைக்க எனக்குத்தான் உரிமையிருக்கு.."

"கேட்டிங்களா அண்ணா.. நீங்க தாட்டியமா இருக்கிறப்பவே என் சொந்தத்தை அத்து விடப் பாக்குறாங்க.. இந்த வீட்டில அண்ணியோட அண்ணனுக்குத்தான் அதிகாரம்ன்னா நான் யாரு..? உங்க தங்கச்சிக்கு இந்த வீட்டில உரிமையில்லையா..?"

"பேசறது நானு.. மச்சானை ஏன் இதில இழுக்கறிங்க..? திங்க உரிமை.. தங்க உரிமை.. சீர்வரிசையைக் கேட்டு வாங்கிக்க உரிமை.. இதுக்கெல்லாம் நான் பங்குக்கு வந்தேனா..? ஏன்னு கேட்டேனா..? பிள்ளைகளைப் பத்தி பேச்சு வந்தா நான் ஊடே வருவேன்.. ஏன்னு கேப்பேன்.. ஏன்னா.. அந்தப் பிள்ளைகளுக்கு நான் தாய்மாமன்.."

அங்கே பானிபட் யுத்தம் ஆரம்பமானது.. ஆங்காரமான அம்புஜம் எட்டூருக்குக் கேட்பதைப் போலக் கத்த, காதுகளைப் பொத்திக் கொண்ட தசரதன் கர்ஜித்தார்..

"அம்புஜம்.. இப்ப ஆக வேண்டிய வேலையைப் பாரு.. ரகுநந்தன் வந்துக்கிட்டு இருக்கான்.. அவனுக்கும் சித்ராவுக்கும் கல்யாணம் பேசி முடிக்கிற வேலையை முதலில் பார்ப்போம்.. மத்த பஞ்சாயத்தை அப்புறமா பேசிக்கலாம்.."

'எப்புடி..?' அம்புஜம் வெற்றிக் களிப்புடன் சுதர்சனத்தைப் பார்த்தாள்..

"நடந்தாப் பார்த்துக்கலாம்.."

சுதர்சனம் செல்போனை காதில் வைத்து யாரிடமோ பேசுவதைப் போலச் சொல்லியபடி உள்ளே போனார்..

'அடங்க மாட்டேங்கிறானே..' அம்புஜத்தின் வயிற்றில் பயபந்து உருண்டது.. சுதர்சனத்தின் அலட்சியம் கலந்த அமைதி அவளை அச்சுறுத்தியது..

'இவன் என்ன செய்யக் காத்திருக்கிறானோ..'

பீதியுடன் டைனிங் ஹாலுக்குப் போனால் அங்கே அவர்களுக்கு முன்னதாக கிருஷ்ணன் உட்கார்ந்து தட்டில் இருந்த மட்டன் பிரியாணியையும் சிக்கன் சுக்காவையும் வெட்டிக் கொண்டிருந்தார்..

"உன் கை மணம் அப்படியே எங்கம்மாவின் கைப்பக்குவம் போல இருக்கும்மா.." கண்ணீர் பனிக்க சுமித்ராவை பாராட்ட வேறு செய்தார்..

'திங்கப் படிக்க மனுசன்..' அம்புஜத்துக்கு வெறுத்துப் போனது..

'இந்த சுதர்சனம் வேற கேலியாப் பார்த்துத் தொலைப்பானே..'

சுதர்சனத்தின் பக்கமே திரும்பாமல் கெத்தாக கிருஷ்ணனின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பிள்ளைகளை அழைத்தாள்..

'பந்திக்கு முந்தனும்ங்கிற அறிவில்லாம இதுக ரெண்டும் எங்கே போச்சுக..? இப்படியாப்பட்ட அப்பனுக்குப் பிள்ளைகளாப் பொறந்துட்டு வயித்தைப் பார்க்காம என்னத்தைப் பண்ணுதுக..?' மனதுக்குள் தாளிதம் செய்தபடி..

"ஏ சித்ரா.. சதானந்தா.. சாப்பிட வாங்க.." என்று குரல் கொடுத்தாள்..

"அதுக ரெண்டும் அப்பவே சாப்பிட்டிருச்சுகளே.." துளசி சொன்னாள்..

"சமத்துப் பிள்ளைகள்.." கிருஷ்ணன் சிலாகிக்க..

"நல்லதோர் குடும்பம்.. பல்கலைக்கழகம்.." என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்னார் சுதர்சனம்..

அம்புஜத்திற்கு சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. எதற்காக வந்திருக்கிறோம்.. என்ன சூழலில் இருக்கிறோம் என்ற நினைவில்லாமல் சாப்பாட்டு ராமன்களாகவும், ராமியாகவும் இருக்கும் கணவர், மகன், மகளை நினைத்துக் குன்றிப் போனாள்..

"கிண்ணத்தில் இருப்பதுதான் கரண்டியில் வரும்.." தத்துவம் சொன்னார் சுதர்சனம்..

தசரதன் புருவங்களை உயர்த்த..

"சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன் மச்சான்.." என்றார்..

சுதர்சனம் பேச்சுக்குச் சொல்லவில்லை என்பது அம்புஜத்திற்குப் புரிந்தது.. அவளுக்கு மட்டும் புரிந்து

என்ன பிரயோசனம்..? புரிய வேண்டிய அவளது குடும்பத்திற்கு புரிய வேண்டுமே..

"இன்னும் கொஞ்சம் வறுவலைப் போடும்மா.."

கேட்டு வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த கணவரை இயலாமையுடன் பார்த்தாள்..

"ஆசை இருக்கு தாசில் பண்ண.. அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க.." என்றார் சுதர்சனம்..

"என்ன கொளுந்தனாரே.. ஜாடைப் பேச்சு கொடி கட்டிப் பறக்குது.. உங்க தங்கச்சிக்கு நாத்தனாரு நானு.. அந்த பயம் மனசில இருக்கட்டும்.."

"அந்த நினைப்பு மனசில இருக்கண்ணி.."

"இருக்கறதைப் போலத் தெரியலையே.. கொஞ்சம்கூட பயம் பத்து இல்லாம இல்ல பேச்சு வருது.."

"இந்த சுதர்சனம் சாமிக்கு மட்டும்தான் பயப்படுவான்.. மனுசருக்கு அஞ்சினதில்ல.. அதனால இந்த பத்து அரைச்சுப் போடற வேலைய எல்லாம் வேற பக்கம் வைத்துக்கங்க.. பேச்சுன்னு வந்துட்டா அண்ணன் முகத்துக்காகவும் பார்க்க மாட்டேன்.. மச்சான் முகத்துக்காகவும் பார்க்க மாட்டேன்.. நான் வேற மாதிரி.."

அவர் எந்த மாதிரி என்பதை புரிந்து வைத்திருந்த அம்புஜம் வாயை மூடிக் கொண்டாள்.. காரியம் பெரிதா..? வீரியம் பெரிதா..? போடுகிற சண்டையை ஜாடைப் பேச்சுக்காக போடாமல் ரகுநந்தனின் தலையில் சித்ராவைக் கட்டிவிடப் போட வேண்டும்.. அதை விட்டுவிட்டு இப்போதே சண்டையை ஆரம்பித்தால் விசயம் வேறு திசையில் திரும்பி விடும்.. ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது..

'முதல்ல ரகுவுக்கு சித்ராவைக் கட்டிக் கொடுத்துட்டு, ரதிமீனாவை சதாவுக்கு கட்டி வைக்கிற வேலையைப் பார்ப்போம்.. அதுக்கப்புறம் இந்த ஆளை ஒரு கை பார்த்துக்கலம்.. இவன் தங்கச்சி குடுமிய என் மக பிடிச்சு

ஆட்டு ஆட்டுன்னு ஆட்டி வைக்கிறதில, இவன் என்னைக் கண்டாலே நடுங்கனும்..'

அம்புஜம் மனதுக்குள் கருவியபடி சாப்பாட்டை வெட்ட ஆரம்பித்தாள்.. அடிக்கண்ணில் அவளது முகமாற்றத்தை அவதானித்துக் கொண்டிருந்த சுதர்சனமும் கருவிக் கொண்டுதான் இருந்தார்..

'ஆட்டக் கடிச்சு, மாட்டக் கடிச்சு, ஆளக் கடிக்க வர்றியா..? என் தங்கச்சி புள்ளைகளை கதிகலங்க வைக்கிறதை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க நானென்ன ஏமாந்த சோணகிரியா..? நீ ரகுநந்தனுக்குப் பெண்ணைக் கொடுக்கவும் முடியாது.. ரதி மீனாவை உன் மகனுக்குக் கட்டிக்கவும் முடியாது.. நான் விட மாட்டேன்..'

அங்கே புயலும், பூகம்பமும் தற்காலப் போர் நிறுத்தம் செய்து சாப்பிட்டுக் கொண்டிருக்க.. ரகுநந்தனும் அஞ்சனலட்சுமியும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்..

## 14

'இன்னும் கொஞ்ச நேரம்தான்..'

ரகுநந்தன் பெருமூச்சு விட்டான்.. தேரில் வந்த திருமகள் போல அழகே உருவாக அவனெதிரே அமர்ந்திருந்த அஞ்சனலட்சுமியை ஏக்கத்துடன் பார்த்தான்.. திருவாரூர் வந்ததும் அவள் பிரிந்து போய் விடுவாள்.. மறுபடி அவளைச் சந்திக்க முடியுமா..?

"திருவாரூரில் யார் வீட்டுக்குப் போறிங்க..?"

அஞ்சனலட்சுமி திடுக்கிட்டதைப் போல நிமிர்ந்தாள்.. யார் வீட்டுக்கென்று சொல்வாள்..? அவளுக்கே தோழியின் முகவரி சரியாகத் தெரியாதே..

"அது எதுக்கு உங்களுக்கு..?"

ரகுநந்தன் முகத்தில் அடிவாங்கியதைப் போல உணர்ந்தான்.. ஒரு கேள்வியில் அவனைத் தள்ளி நிறுத்தி விட்டாளே.. அவ்வளவுதானா..? அவளுக்கும் அவனுக்குமான சம்பந்தம் அவ்வளவுதானா..? பக்கத்துப் பக்கத்து இருக்கைகளில் உட்கார்ந்து பேசிச் சிரித்ததெல்லாம் வெறும் பஸ் சிநேகிதம்தானா..? அவன் மடியில் அவள் படுத்து உறங்கியது கனவுதானா..? அவனது கற்பனைகளெல்லாம் வெறும் கானல்நீர்தானா..?

"ஐ'ம் ஸாரி.."

சட்டென எழுந்து கைகழுவப் போய் விட்டான்.. அஞ்சன லட்சுமியின் மனம் கனத்தது.. அவள் நிலையை என்னவென்று சொல்லுவாள்..? அதற்கு மேல் சாப்பிட முடியாமல் அவளும் எழுந்து கொண்டாள்.. இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வரும் போது பக்கத்திலிருந்த கடையில்..

"இன்னும் கொஞ்நேரம்..

இருந்தாத்தான் என்ன..?"

என்று பாடல் கேட்டுக் கொண்டிருந்தது..

"இருக்க ஆசைதான்.. முடியனுமே.." அவன் வாய்விட்டுச் சொல்லிவிட்டான்..

"என்ன..?" அவள் புரியாமல் கேட்டாள்..

"ஒன்றுமில்லை..." நிராசையுடன் அவன் பஸ்ஸில் ஏறினான்.

'ஒன்றுமில்லை என்ற வார்த்தையின் பின்னால் ஓராயிரம் கதைகள் ஒளிந்திருக்கின்றன..' மனபாரத்துடன் அவனைப் பின் பற்றினாள் அஞ்சனா..

அருகருகே அமர்ந்தவர்களின் மனதில் இருவேறுபட்ட போராட்டம்.... ரகுநந்தனுக்கு காத்திருக்கும் கலவரத்தை நினைத்து மனக் கவலை..

அஞ்சனலட்சுமிக்கோ, அடுத்து என்ன செய்வது என்று சிந்தனை.. திருவாரூரில் தோழியின் வீடு எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை.. அப்போதைய போன் நம்பருக்குப் போன் செய்தால் வேறு யாரோ பேசுகிறார்கள்.. தோழியின் வீட்டைக் கண்டு பிடித்துப் போனாலும் அவளுடைய சூழ்நிலை எப்படியிருக்கிறதோ, என்னவோ.. தங்க இடம் கிடைத்தாலும் அஞ்சனலட்சுமி அடுத்து என்ன செய்யப் போகிறாள்..? ஒரு முடிவுக்கும் வர முடியவில்லையே..

அவரவரர் சிந்தனைகளில் முழ்கியவர்கள் அவர்களையும் அறியாமல் கண்ணயர்ந்தார்கள்.. ரகுநந்தனும் சரி.. அஞ்சனலட்சுமியும் சரி.. இரண்டு நாள்களாக தூக்கமில்லாமல் உழன்று கொண்டிருந்தார்கள்.. பஸ்ஸில் ஏறியவுடன் ரகுநந்தனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியதுதான்.. அதற்குள் அஞ்சனலட்சுமி தூங்கி விழுந்து அவன் மடியில் சரிந்து விட்டாள்.. அந்த நொடிகளின் சொர்க்கத்தை அனுபவிக்க விரும்பியவனுக்குத் தூக்கம் பறந்தோடி விட்டது..

இந்த நொடிகளில் அப்படியில்லையே.. இருவரும் இன்னும் சற்று நேரத்தில் பிரியப் போகும் உணர்வு.. அஞ்சனலட்சுமி யாரென்பதைத் தெரிந்து கொள்ளாமலே விடைபெறப் போகிறான் என்ற பரிதவிப்பு.. மதியஉணவு உண்ட மயக்கம்.. என்று எல்லாம் சேர்ந்து ரகுநந்தனை உறங்க வைத்தன.. உறங்கி விழுந்தவனின் தோள்மீது சாய்ந்து அஞ்சனலட்சுமி உறங்கிக் கொண்டிருக்க, இவன் அவளது தலைமீது தலைசாய்த்து, ஏறக்குறைய அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு உறங்க ஆரம்பித்தான்..

அப்படி இருவரும் ஒருவர்மீது, ஒருவர் சாய்ந்து பஸ்ஸின் குலுக்களில் சுகமாக கண்ணயர்ந்து கட்டித் தழுவி உறங்கிக் கொண்டிருந்தபோது பஸ் திருவாரூர் பேருந்து நிலையத்துக்குள் நுழைந்து நின்றது.. பஸ்ஸில் இருந்த பயணிகள் எல்லோரும் முன்பக்க இருக்கைகளில் தூங்கிக் கொண்டிருந்தவர்களைப் பொறாமையுடன் பார்த்தபடி இறங்கிவிட.. இவர்கள் மட்டும் உறக்கத்தில் இருந்தார்கள்..

கண்டக்டர் உள்பக்கம் எட்டிப் பார்த்து விட்டு தலையில் அடித்துக் கொண்டான்..

"என்னப்பா.. உன் தலையில நீயே அடிச்சுக்கிற..?" டிரைவர் வினவினான்..

"ஏன்..? நீ வந்து வேனும்னா நாலு அடி அடிச்சுக்க.."

"அட.. என்னன்னுதானே கேட்டேன்..?"

"பஸ்ஸே காலியாகிருச்சு.. இங்கே புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி கட்டிப்புடிச்சுக்கிட்டுத் தூங்கிக்கிட்டு இருக்கு.."

"அதுகளா..? பஸ்ஸில செம ஷோ காண்பிச்சுக்கிடு இருந்துச்சுகளே.. விடுப்பா.. சின்னஞ்சிறுசுக.."

"அதுக்காக பஸ்ஸிலேயே குடும்பம் நடத்துங்கன்னு விட்டுரலாமா..?"

"எப்படி விட முடியும்..? பஸ் என்ன உனக்கும் எனக்கும் பாட்டன் சொத்தா..? கவர்ண்மெண்ட் சொத்தாச்சே.."

"தெரியுதில்ல.. அப்புறம் என்ன சின்னஞ்சிறுசுகன்னு வக்காலத்து வாங்கற..? பஸ்ஸ டெப்போவில விட்டுட்டு, நீயும் நானும் வீட்டுக்குப் போய் சேரனும்.."

கண்டக்டர் எரிச்சலுடன் போய் ரகுநந்தனின் புறங்கையில் தட்டி எழுப்பினான்.. மனதுக்குள் பொறாமை..

'புருசன் பொண்டாட்டின்னா இப்படி இருக்கனும்.. எனக்கும் வந்து வாய்ச்சிருக்கே..'

கண்டக்டர் போட்ட போட்டில் விழித்துக் கொண்டான் ரகுநந்தன்.. கண்ணைக் கசக்கியபடி சுற்று முற்றும் பார்த்தான்..

"ஒருத்தரும் இல்லை.. எல்லாம் ஊரு வந்ததும் முண்டியடிச்சு இறங்கி வீட்டைப் பாத்துப் போயிட்டாங்க.. நீங்க மட்டும்தான் பாக்கி.." பல்லைக் கடித்தான் கண்டக்டர்..

"இது எந்த ஊர்..?" ரகுநந்தன் கடுப்பைக் கிளப்பினான்..

"ஊம்..? திருவாரூர்.. இதுக்கு மேலே பஸ் போகாது.. நீங்கதான் இறங்கிப் போகனும்.." கிண்டலாகச் சொன்னான் கண்டக்டர்..

"திருவாரூர் வந்துருச்சா.."

ரகுநந்தன் கேட்டுக் கொண்டிருந்த போது, காதோரமாக கேட்ட பேச்சுக்குரல்களில் தூக்கம் கலைந்து எழுந்தாள் அஞ்சனலட்சுமி.. பஸ் திருவாரூர் வந்து விட்டது என்பதில் அவளது முகம் சோர்ந்தது.. இறங்க வேண்டும்.. அதற்குப் பின்..? அவளுக்குத் தெரியவில்லை..

"சீக்கிரம் இறங்குங்க சார்.."

கண்டக்டர் அவசரப்படுத்தியதில் இருவரும் ஆளுக்கு ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினார்கள்.. அவளது விழிகளுக்குள் தனக்கான நினைவுச் சுவடு ஏதும் இருக்கிறதா என்று தேடினான் ரகுநந்தன்.. அஞ்சனலட்சுமி தடுமாறினாள்.. அவள் இருக்கும் நிலைமையில் அவளது பாரத்தை அவனது தோள்களில் ஏற்றி வைக்க அவள் விரும்பவில்லை.. அவளுடைய உறவினர்கள் கொடூரமானவர்கள்.. அவளுக்காக ஏன் அவன் அவர்களுக்கு எதிரியாக வேண்டும்..? அவளது போராட்டத்தை அவள்தான் போராட வேண்டும்.. அடுத்தவரை முன்னிருத்தக் கூடாது.. அதுவும் ரகுநந்தன்.. யதார்த்தமானவன்.. நல்லவன்.. அவன் பாதையில் அவன் போகட்டும்..

அஞ்சனலட்சுமி அவனைத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்து ஆட்டோவில் ஏறிவிட்டாள்.. அவளைக் கூப்பிடப் போன ரகுநந்தனின் தோளில் கை விழுந்தது..

"மச்சான்.." கண்ணன் ரகுநந்தனின் தோள் தொட்டுத் திருப்பினான்.

"கண்ணா..? அம்மா எப்படிடா இருக்காங்க..?"

"அத்தைக்கு என்ன மச்சான்.. மட்டன், சிக்கன்னு வறுத்துக் கொட்டிட்டு பத்து நிமிசம் அக்கடான்னு படுத்தாங்க.. அதுக்குள்ள அம்புஜம் பெரியம்மா சாயந்திரக்

காப்பியில்லையான்னு கத்தினதில் எழுந்திருச்சு பாலைக் காய்ச்சிக்கிட்டு இருக்காங்க.. நாம வீட்டுக்குப் போகிறப்ப காபி ரெடியா இருக்கும்.."

"அவங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு அப்பா சொன்னாரே.."

"ஹை.. அது பொய்யின்னு உங்களுக்குத் தெரியும்ன்னு எனக்கும் தெரியும்.. வண்டியில ஏறுங்க.. வீட்டுக்குப் போகலாம்.."

சுதர்சனம் அஞ்னலட்சுமி ஏறிய ஆட்டோ எங்கே போகிறது என்று பார்க்க முடியாமல் கண்ணனுடன் புல்லட்டில் ஏறினான்.. அவர்களது புல்லட் ஆட்டோவைக் கடந்த போதுதான் அஞ்சனலட்சுமி பெட்டி மாறியிருந்ததைக் கவனித்தாள்..

'இது என் பெட்டி இல்லையே..'

அவளுடைய பெட்டியின் கைபிடியில் அவளுடைய பெயரின் முதல் எழுத்தான 'A' தங்க நிறத்தில் மின்னிக் கொண்டிருக்கும்.. இந்தப் பெட்டியில் அந்தப் பொன்னிற எழுத்து காணப்படவில்லை..

'அவன் பெட்டியும் என் பெட்டியும் அசப்பில் ஒன்று போல இருந்ததே..'

நொடிப் பொழுதில் பெட்டி மாறிப் போனதை யூகித்துவிட்ட அஞ்சனலட்சுமி, கடந்து போன புல்லட்டைக் காட்டி..

"டிரைவர்.. அந்த வண்டியை ஃபாலோ பண்ணுங்க.." என்று பதறினாள்..

"அது தசரதன் ஐயா மகனாச்சே.. பேங்க் மேனேஜர் வேலை பாக்கறாரே.." டிரைவர் அடையாளம் சொன்னான்..

"பேசிக்கிட்டே வண்டியை மிஸ் பண்ணிராதீங்க.."

"மிஸ் பண்ணினாலும் கவலையில்லம்மா.. அவங்க எங்கே போறாங்க.. வீட்டுக்குத்தானே போறாங்க..? தசரதன் ஐயா வீடு எங்கே இருக்குன்னு எனக்குத் தெரியும்.."

டிரைவர் நிதானமாக ஆட்டோவைக் கிளப்புவதற்குள் புல்லட் மறைந்து விட்டது.. அஞ்சனலட்சுமியை பயம் பிடித்துக் கொண்டது.. அந்தப் பெட்டியில் நகைகள், பணம், அவளது கம்பெனிகளின் முக்கிய ஆவணங்கள் என்று இருந்தன.. அவைகள் தொலைந்து போனால் அவளால் எதுவும் செய்ய இயலாது..

"வண்டியைக் காணோம் டிரைவர்.."

"நான்தான் சொன்னேனில்ல.. அவங்க வீடு எங்கேன்னு எனக்குத் தெரியும்.. உங்களைப் பத்திரமா கொண்டு சேர்க்கிறது என் பொறுப்பு.."

'என்னை எதுக்கு அவங்க வீட்டில கொண்டு போய் சேர்க்கனும்..'

அர்ச்சனாவுக்குத் தலையை வலித்தது.. ரகுநந்தன் பக்கத்தில் இருந்தபோது இந்த தனிமையுணர்வு வரவில்லை.. இப்போது நிர்கதியாக நிற்பதைப் போல இருந்தது..

கண்ணனும் ரகுநந்தனும் புல்லட்டை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் போன போது சுமித்ரா எல்லோருக்கும் காபி கொடுத்துக்கொண்டிருந்தாள்.. கண்ணன் ரகுநந்தனிடம்..

"நான் சொல்லலை..?" என்று சிரித்தான்..

எப்படி பொய் சொல்லலாம் என்று தசரதனிடம் சண்டை போட வாய்திறந்தான் ரகுநந்தன்.. அதற்குள் அங்கே உட்கார்ந்திருந்த பெரியவர்..

"வாப்பா.. ரகுநந்தன்.. என்னய்யா தனியா வந்திருக்கிற.. கூட வந்த உன் பெண்டாட்டி எங்கே..?" என்று கேட்டார்..

'ஆஹா.. இவரு ஹோட்டலில் என்னையும் அஞ்சனாவையும் சேர்த்து வைத்துப் பேசின தாத்தா இல்ல.. அதுக்குள்ள இங்க வந்துட்டாரா..?'

ரகுநந்தன் என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் திருதிருத்தான்..

"உன்னைச் சொல்லனும் தசரதா.. பெண்டாட்டி பிள்ளைன்னு ஆன பின்னாலே தன்குடும்பம், தன் பிள்ளைகள்ன்னு இருந்திருக்கனும்.. அத விட்டுட்டு, தங்கச்சி மகள கட்டி வைச்சிருவேன்னு பயமுறுத்தினா உன்மகன் இப்படித்தான் வீட்டுக்குத் தெரியாம மனசுக்குப் பிடிச்ச பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்து நிப்பான்.. சரிசரி.. மகன்கிட்ட சண்டை போடாம, மருமகளை ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ள அழைச்சுக்கிற வழியைப்பாரு.." பெரியவர் புத்திமதி சொன்னார்..

"என்னது.. திருட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டயா..?" தசரதன் கண்கள் சிவக்க மீசையை முறுக்கி கர்ஜித்தார்..

"இல்லேப்பா.." மறுத்துப் பேசப் போனான் ரகுநந்தன்..

அதற்குள்.. "இந்தா.. உன் பெண்டாட்டியும் வந்திருச்சு.." என்றார் பெரியவர்..

'என் பெண்டாட்டி வந்திட்டாளா..?'

ரகுநந்தன் குழப்பத்துடன் திரும்பிப் பார்த்தான்.. வாசலில் ஆட்டோவிலிருந்து பெட்டியுடன் இறங்கிய அஞ்சனலட்சுமி தயக்கத்துடன் வாசலில் நின்றாள்.. ரகுநந்தனின் விழிகள் அகன்றன..

15

தேரில் வந்த திருமகள் அவனைத் தேடி வந்து விட்டாளா..? பிரமிப்புடன் ரகுநந்தன் பார்த்துக் கொண்டிருக்க சுதர்சனம் ரகுநந்தனின் காதுகளில்..

"மாப்பிள்ள.. கெட்டிக்காரன்டா நீ.. கல்யாணத்தைக் கட்டிக்கிட்டுக் கையோட பொண்டாட்டியக் கூடக் கூப்பிட்டுக்கிட்டு வர்றன்னு சொல்லவே இல்ல பார்த்தியா..?" என்று முணுமுணுத்தார்..

"நீங்க வேற மாமா.. இந்தப் பொண்ணு யாரு, எவருன்னு எனக்குத் தெரியாது.. பேரு மட்டும் அஞ்சனலட்சுமின்னு தெரியும்.. பக்கத்துப் பக்கத்து சீட்டில உக்காந்திருந்தோம்.. அதை இந்த தாத்தா பார்த்துட்டு வீடு வரைக்கும் வந்து வில்லங்கத்தைக் கிளப்பறாரு.." ரகுநந்தன் பதிலுக்கு முணுமுணுத்தான்..

"அப்படிங்கறே..?"

"ஆமாங்கிறேன்.."

"விடுடா மாப்பிள்ள.. இதுவும் நல்லதுக்குத்தான்.. இப்போதைக்கு உன் லங்கிணி அத்தையிடமிருந்து தப்பிக்க இந்தப் புரளியையே மெயின்டெயின் பண்ணுவோம்.."

"நாளைக்கு விசயம் தெரிஞ்சிருச்சுன்னா..?"

"நாளை சங்கதியை நாளைக்குப் பார்க்கலாம் மாப்பிள்ள.."

சுதர்சனம் நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சமயோசிதமாக குரல் கொடுத்தார்..

"துளசி.. ஆரத்தியைக் கரைச்சுக்கிட்டு வா.."

"நீங்க என்ன மச்சான், முன்னப் பின்னத் தெரியாத பொண்ணுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கச் சொல்றீங்க.." தசரதன் எகிறினார்..

"அது முன்னப் பின்னத் தெரியாத பொண்ணில்லங்க மச்சான்.. நம்ம ரகுவோட பொண்டாட்டி.. உங்க மருமகள்.. துளசி ஆரத்தி ரெடியா..? மசமசன்னு நிற்காம மாப்பள்ளைக்கும் பொண்ணுக்கும் ஆரத்தி எடு.." சுதர்சனம் துளசியை அதட்டினார்..

சுமித்ராவையோ, ரதிமீனாவையோ ஆரத்தி எடுக்கச் சொன்னால் தசரதன் கத்துவார்.. அவரது கோபத்திற்கு அஞ்சி அவர்கள் அப்படியே நின்று விடுவார்கள்.. துளசியை தசரதனால் கோபித்துக் கொள்ள முடியாது.. இதையெல்லாம் கணப்பொழுதில் யோசித்துத்தான் கெட்டிக்கார சுதர்சனம் தன் மனைவியை விரட்டினார்..

துளசி வள்ளுவரின் வாசுகியாக கையில் ஆரத்தி தட்டுடன் வந்து விட்டாள்.. சுதர்சனம் ரகுநந்தனை தள்ளிய வேகத்தில் அவன் அஞ்சனலட்சுமியின் மீது போய் விழுந்தான்.. இவனது கனத்தைத் தாங்க முடியாமல் அவள் தடுமாறிச் சாய, இவன் அவளைத் தாங்கிப் பிடிக்க என்று அழகான காதல்காட்சி அரங்கேறிக் கொண்டிருந்தது.. ஆட்டோக்காரர் சுவராஸ்யமாகி..

"அட.. இவங்க தசரதன் ஐயாவோட மருமகளுங்களா..? பேங்க் மேனேஜர் தம்பி, வீட்டுக்குத் தெரியாம காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்திருக்காரா..?" என்று சுதர்சனத்திடம் கேட்டார்.

அவர் இதற்காகத்தானே காத்திருந்தார்.. ஆட்டோக்காரரும் ஆல் இண்டியா ரேடியோவும் ஒன்று என்று அந்தக் காலத்திலிருந்து சொல்லப்படும் பழமொழியென்று சொல்பவர் சுதர்சனம்.. என்ன ஒன்று.. நாளடைவில் ஆல் இண்டியா ரேடியோ செய்திகள் மருவி பி.பி.சி செய்திகளாகி விட்டன என்று சொல்லுவார்..

"ஆமாய்யா.." என்று சுதர்சனம் தலையசைக்க..

"அப்ப நான் வர்றேன்.." என்று ஆட்டோ சவாரிக்கான பணத்தைக்கூட வாங்கிக் கொள்ளாமல் மாயமானார் ஆட்டோக்காரர்..

'செய்தியை ஒலிபரப்பறதில அத்தனை வேகம்..! காசா முக்கியம்..? புறணிதானே முக்கியம்.. அப்பாடி.. அடுத்த சில, செகண்டில திருவாரூர் முழுக்க இதப் பத்தித்தான் பேச்சா இருக்கும்..' சுதர்சனம் திருப்தியாக தலையை ஆட்டினார்..

"பொண்டாட்டியக் கொஞ்சினது போதும்.. பக்கத்தில சேர்ந்து நில்லுங்க மாப்பிள்ள.." துளசி அன்புடன் சொன்னாள்..

'பெண்டாட்டியா..?'

அஞ்சனலட்சுமி அப்போதுதான் நிலைமையை யூகித்தாள்.. எரிதணலாய் அவள் ரகுநந்தனை முறைக்க அவன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்..

"ஏங்க.. நானாங்க எடுத்துக் கொடுத்தேன்..? அவங்களா இட்டுக் கட்டி கற்பனை பண்ணிக்கிட்டா அதுக்கு நான் பிணையாங்க..?"

"மிஸ்டர் ரகுநந்தன்.. உங்க பெட்டியை விட்டுட்டு என் பெட்டியை அபேஸ் பண்ணிக்கிட்டு வந்துட்டிங்க.. பெட்டிக்காகத்தான் உங்களை ஃபாலோ பண்ணி வந்தேன்.."

"எனக்காக வரலைன்னு சொல்கிறிங்க.. இருக்கட்டும்.. ஆனா உங்க பெட்டியை நான் வேணும்னே அபேஸ் பண்ணிட்டு வந்துட்டேன்னு பழி போடறிங்க பாருங்க.. அது தப்புங்க.. பெட்டி மாறிப் போச்சுன்னு சொல்லுங்க.. கேட்டுக்கறேன்.. நான் அபேஸ் பண்ணிட்டு வந்தேன்னு மட்டும் சொல்லாதீங்க.."

"ஆமாம் சார்.. பெட்டிக்குக் கால் முளைத்து உங்ககூட மாறி வந்திருச்சு.. தூக்கிக்கிட்டு வந்தது நீங்கதானே.. அதுக்குள்ள என்ன என்ன இருக்குதுன்னு உங்களுக்குத் தெரியுமா..?"

"வைர வைடூரியமே இருக்கட்டும்ங்க.. அடுத்தவங்க பொருளுக்கு நான் ஆசைப்படமாட்டேன்.. உடனடியா உங்களைத் தேடிவந்து பெட்டியை ஒப்படைச்சிருப்பேன்.."

"எங்கேன்னு தேடி வருவீங்க..?"

"அதுதான் நீங்க தேடி வந்துட்டிங்களே.."

இருவரும் சன்னக்குரலில் வழக்கடித்துக் கொண்டிருக்க..

"அடடா.. இதுக ரெண்டும் இப்படித்தான் தசரதா.. நான் ஹோட்டலில பாக்கிறப்பவும் பக்கத்தில ஆளுக இருக்கிறதைப் பார்க்காம ரகசியம் பேசிக்கிட்டு இருந்துச்சுக.. இங்கேயும் நாம இருக்கிறத மறந்து கொஞ்சிக்கிட்டு இருக்குதுக.. ஏம்மா துளசி.. கையில ஆரத்தித்தட்ட வைச்சுக்கிட்டு உன் மருமகன் பொண்டாட்டிகிட்ட வாசலில நின்னு கொஞ்சிக் குழாவட்டும்ன்னா காத்துக்கிட்டு இருக்க..? சட்டுப்புட்டுன்னு ஆரத்திய எடுத்து வீட்டுக்குள்ள அழைச்சுக்கிட்டுப்

போம்மா.. நாலு பேரு நடந்து போகிற ரோடு.. இலவசமாக சினிமாக் காட்டனுமா..?" என்று பெரியவர் தசரதனுக்கு வெறியேற்றினார்..

"என்னாது.. வீட்டுக்குள்ள அழைக்கிறதா..? அப்படியே போயிரட்டும்.." தசரதன் கர்ஜித்தார்..

"அப்படியே போகனுமா..? எதுக்கு மச்சான்..? உங்க தங்கச்சி மகளக் கட்டினாத்தான் என் தங்கச்சி மகன் வீட்டுக்குள்ள வரனும், இல்லேன்னா வீதியோட போயிரனுமா..? நல்லா இருக்கு மச்சான் உங்க நியாயம்.. நீ ஆரத்தி எடு துளசி.. என் மாப்பிள்ளைக்கு இந்த வீட்டில இடமில்லாம போயிருமான்னு நானும் பார்க்கிறேன்.." சுதர்சனம் பதிலுக்கு மீசையை முறுக்கினார்..

சுமித்ராவும் ரதிமீனாவும் ஆவலுடன் வாசலுக்கு வந்து அஞ்சனலட்சுமியின் அழகை வியந்து கொண்டிருந்தார்கள்..

"அம்மா.. அண்ணன் லட்டு போல ஒரு அண்ணியை லவட்டிக்கிட்டு வந்திருச்சும்மா.."

"சாட்சாத் மகாலட்சுமி போல மருமகள் வந்திருக்கா.. உங்கப்பாவக் கேட்டா கட்ட விடுவாரா..? அதனாலதான் உங்க அண்ணன் கெட்டிக்காரத்தனமா கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு அழைச்சுக்கிட்டு வந்திருக்கான்.."

தாயும் மகளும் தங்களுக்குள் கிசுகிசுக்க..

"அங்கே என்ன பேச்சு.?" என்று அதற்கும் கர்ஜித்தார் தசரதன்.

"இது என்ன மச்சான், உங்ககூட வம்பாப் போச்சு.. உங்களுக்குக் கழுத்தை நீட்டினா என் தங்கச்சிக்குப் பேசக்கூட சுதந்திரம் இல்லாமப் போயிருமா..? பெரிய வன்கொடுமையாயில்ல இருக்கு.. துளசி.. இப்ப ஆரத்தி எடுக்கப் போறியா, இல்லியா..?" சுதர்சனம் தசரதனை விட அதிகமாக சப்தம் போட்டார்..

அங்கே நடந்த களேபரத்தில் அஞ்சனலட்சுமிக்கு கை,கால் உதறத் தொடங்கியது.. என்ன நடக்கிறது என்று

தெரியாமல் அவள் விழிக்க, ரகுநந்தனுக்கும் அவளுக்கும் ஆரத்தி எடுத்து அவள் நெற்றியில் பொட்டு வைத்து அணைத்துக் கொண்டாள் துளசி..

"திருவாரூர் தேர் மாதிரி அழகா இருக்கேம்மா.. வலது காலை எடுத்து வைச்சு வீட்டுக்குள்ள வாம்மா.."

அஞ்சனலட்சுமியை இழுத்துக் கொண்டு துளசி வீட்டுக்குள் போய் விட்டாள்.. அவள் கொண்டு வந்திருந்த பெட்டியை தள்ளிக் கொண்டு ரகுநந்தன் பின்தொடர்ந்தான்..

"இங்கே கொடுண்ணா.. அண்ணியோட பெட்டியை நான் தள்ளிக்கட்டு வர்றேன்.." ஆனந்தமாகப் பெட்டியை பறித்துக் கொண்டாள் ரதிமீனா..

பெரியவரின் முன்னால் மகனை வீட்டுக்குள் விட முடியாது என்று தகராறு செய்ய தசரதனால் முடியவில்லை.. ஏற்கனெவே, தங்கைக்காக பெற்ற மகனை ஊரை விட்டு ஓட வைத்து விட்டார் என்று திருவாரூர் முழுவதும் தசரதனை மெச்சிக் கொண்டிருக்கிறார்கள்.. இதில் மகனை வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை என்ற பெயரும் சேர்ந்து விட்டால் கேட்கவே வேண்டாம்.. தசரதனை இரக்கமில்லாத தகப்பன் என்று தூற்றி விடுவார்கள்..

அஞ்சனலட்சுமியின் பங்களாவைப் போல இல்லாவிட்டாலும், தசரதனின் வீடு பெரியதாகவே இருந்தது.. ஹாலில் இருந்த சோபாக்களில் ஒன்றில் அஞ்சனலட்சுமியும் ரகுநந்தனும் அமர வைக்கப்பட்டார்கள்.. சுமித்ரா ஓட்டமாக ஓடிப் பாலும், பழமும் கொண்டு வந்தாள்..

"முதலில் பூஜையறையில் மருமகள் விளக்கேத்திரட்டுமே அண்ணி.." துளசி சொன்னாள்..

"ஆமாமில்ல.. திடிர்ன்னு கல்யாணச் சேதி தெரிஞ்சதில கையும் ஓடல.. காலும் ஓடல அண்ணி.. வாம்மா.. வந்து பூஜையறையில் விளக்கேற்று.."

சுமித்ரா அன்புடன் அஞ்சனலட்சுமியின் கையைப் பிடித்து அழைத்தாள்.. அஞ்சனலட்சுமி மறுப்பாக தலையை ஆட்டுவதற்குள் அவளை எழுப்பி விட்டாள் துளசி.. வேறு

வழியில்லாமல் பூஜையறைக்குள் சென்று விளக்கேற்றினாள்.. தீப ஒளியில் தெய்வத் திருவுருவங்களைத் தரிசித்தவளுக்குள் இனம் புரியாத ஓர் அமைதி வந்தது.. ஓடிக் கொண்டிருந்தவளுக்கு இளைப்பாற நிழல் கிடைத்த உணர்வு.. ஆனால் இது அவளுக்கு நிரந்தமில்லையே..

பூஜையறையிலிருந்து வெளியே வந்தவளை ஹால் சோபாவுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.. அங்கே ரகுநந்தனுக்கும் அவளுக்கும் பாலும் பழமும் கொடுத்து உபசரித்தார்கள்..

"திருட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுகளுக்கு சாஸ்திர சம்பிரதாயம் ஒன்னுதான் குறைச்சலாக்கும்.." அம்புஜம் ஆங்காரமாகக் கத்தினாள்..

"என் தங்கச்சி பிள்ளைகளுக்குத்தான் ஒழுங்காக் கல்யாணம் நடந்துரக் கூடாதுன்னு நீங்க கங்கணம் கட்டிக்கிட்டு அலையறீங்களே.. பெண்டாட்டி, பிள்ளைகள் முக்கியம்ன்னு என் மச்சான் நினைச்சிருந்தா என் மாப்பிள்ள எதுக்காக வீட்டுக்குத் தெரியாமக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்கப் போறான்..?" மறைமுகமாக தசரதனை விட்டு விளாசினார் சுதர்சனம்..

"அதென்ன என் தங்கச்சி பிள்ளைகன்னு ரதி மீனாவையும் கூட்டுச் சேர்க்கறிங்க கொழுந்தனாரே.."

"ஏன் அண்ணி..? ரதி எந்தங்கச்சி பெத்த பிள்ளைதானே..? அதை என்ன தவிட்டுக்கா வாங்கியிருக்கோம்..?"

"ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டது ரகுநந்தன்தான்.. என் மருமக ரதிமீனா குணவதி.. தகப்பன் சொல் மிக்க மந்திரமில்லைன்னு வளர்ந்திருக்கிற பொண்ணு.. எங்கண்ணன் கோடு கிழிச்சாத் தாண்டாத உத்தமி.. குல விளக்கு..!"

"அட்ரா சக்கைன்னானாம்.. ரகுநந்தன் எஸ்கேப் ஆகிட்டான்னதும் அடுத்த குறியை ரதிமீனாவுக்கு வைச்சுட்டிங்களா..?"

சுதர்சனம் கைதட்ட அம்புஜத்தின் முகம் பயங்கரமாகக் கோணியது..

16

யாராலும் கணிக்க முடியாத அம்புஜத்தின் யுக்திகளை அட்சரம் பிசகாமல் சுதர்சனம் மட்டும் கணித்து விடும் நுட்பம் எதுவாக இருக்கக்கூடும் என்று அம்புஜத்தால் கணிக்க முடியவில்லை.. அவள் எட்டுப் போட நினைப்பதற்குள் அவர் எண்பத்து எட்டைப் போட்டு விட்டு அலட்சியமாக நின்றிருப்பார்..

'இந்த ஜெகஜாலனுக்குத் தெரியாம எதையும் திட்டம் போட முடியலை..' அம்புஜம் சினம் கொண்டாள்..

"எந்தங்கச்சி பெத்து வளர்த்த பொண்ணு குல விளக்காத்தான் இருக்கும்.. அதுக்காக யார் வேணும்னாலும் தீக்குச்சியைக் கொளுத்திக்கிட்டு வந்து விளக்கேத்திர முடியாது.. உடந்தைப் பட்டவனுக்கு உரிமையான குலவிளக்கு இது.."

"உடந்தைப் பட்டவன் என் மகன்தானே.."

"ஊஹீம்.. ரதிக்கும் ஊரைக் கூட்டிக் கல்யாணம் நடத்த விட மாட்டிங்க போல இருக்கே.."

"எங்கண்ணன் மகன்தான் ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்குவான்.. எங்கண்ணன் மக அப்படியில்ல.."

"அது எதுக்கு ஓடனும்..? அத்தை மகளுக்குக் கால் வலிக்கும்ன்னு என்மகன் தூக்கிக்கிட்டுப் போயில்ல தாலியைக் கட்டுவான்.. இதை யார் தடுக்கிறாங்கன்னு பார்க்கிறேன்.."

சுதர்சனம் பகிரங்கமாக சவால் விட்டார்.. அம்புஜத்திற்குத் திகில் பிடித்துக் கொண்டது.. அங்கேதான் நட்டு வைத்த நெடு மரங்களாக கிருஷ்ணனும், சதானந்தனும் நின்று

கொண்டிருந்தார்கள்.. சுதர்சனம் பேசிய பேச்சிற்கு பதில் பேச வேண்டுமே..

நீ தசரதனுக்கு மைத்துனன் என்றால் எனக்கு தசரதன் மைத்துனன் என்று உரிமைக்குரல் கொடுக்க வேண்டிய கிருஷ்ணன் காபியை ருசித்துக் குடிக்கும் கர்மத்தில் கண்ணாக இருந்தார்..

உன் மகன்தான் அத்தை மகளைத் தூக்கிக் கொண்டு போய் தாலி கட்டுவானா..? நான் என் மாமன் மகளைத் தூக்கிக் கொண்டு போய் தாலிகட்ட மாட்டேனா என்று புஜம் தட்ட வேண்டிய சதானந்தன் பஜ்ஜி, ஜொஜ்ஜியை மொக்கிக் கொண்டிருந்தான்..

இப்பேற்பட்ட வீராதி வீரர்களை கணவராகவும், மகனாகவும் பெற்றிருக்கும் அம்புஜம் எப்படி சுதர்சனத்தின் சவாலை எதிர் கொள்வாள்..? எவரை நம்பிக் களத்தில் இறங்குவாள்..?

"கேட்டிங்களா அண்ணா.." அம்புஜம் தசரதனை துணைக்கு அழைத்தாள்..

"என் அண்ணன் மகனுக்குப் பொண்ண கொடுக்க ஆசைப்பட்டேன்.. அதுக்கு வாயிலயும் வயித்திலயும் அடிச்சுக்கிட்டாங்க.. இவங்க வாயில விழுந்ததிலே ரகுநந்தன் எவளோ ஒருத்தியை இழுத்துக்கிட்டு வந்திருக்கு..."

அம்புஜத்தின் 'எவளோ ஒருத்தி' என்ற வார்த்தைப் பிரயோகத்தில் பாதிக்கப் பட்டாள் அஞ்சனலட்சுமி.. அவள் ரகுநந்தனை முறைக்க அவன் கையெடுத்துக் கும்பிட்டு அவளது கோபத்தை ஆற்றுப்படுத்தினான்..

"இனி இருக்கிறது ரதிமீனாதான்.. நீங்களும் நானும் ஒட்டிக்க இருக்கிற ஒரே வழி ரதிமீனாவை என் மகனுக்குக் கட்டிக் கொடுக்கிறதுhன்.. அதுக்கும் சவாலுக்கு வந்தா எப்படிண்ணே.."

"அதை மச்சானிடம் கேட்டா எப்படியண்ணி..?"

"வேற யாருகிட்டக் கேக்கனும் கொழுந்தனாரே.."

"என்கிட்டக் கேக்கனும் அண்ணி.. காத்திருக்கிறவனோட அத்தை மகளை வேற ஒருத்தன் தட்டிக்கிட்டுப் போக என் மகன் விடமாட்டான் அண்ணி.."

"வேணாம் கொழுந்தனாரே.. வீணா வம்புக்கு வராதீங்க.. இப்படி ஒத்துமையில்லாம நீங்களும் நானும் அடிச்சுக்கிட்டு நிக்கிறதினாலதான் வெளியாளு வீட்டுக்குள்ள வந்தாச்சு.."

"அண்ணி.. ரகுவோட பொண்டாட்டி வெளியாளு இல்ல.. நம்ம வீட்டு ஆளு.."

"சூப்பர் லேடியில்ல.. என்னமா பேசறாங்க.." அஞ்சனலட்சுமி பாராட்டினாள்..

"இப்படிப் பேசிப் பேசித்தான் அண்ணனை ஊரை விட்டு ஓட வைச்சாங்க அண்ணி.. அண்ணன் தப்பிச்சு உங்களை கை பிடிச்சிருச்சு.. இப்ப அடுத்ததா என்னை டார்கெட் பண்றாங்க.." ரதிமீனா முணுமுணுத்தாள்..

அவள் அண்ணி என்று அழைத்ததில் சங்கடம் கொண்டாள் அஞ்சனலட்சுமி.. ஆனால் அந்த அழைப்பும் பிடித்திருந்ததில் கலவரமும் அடைந்தாள்.. உரிமையில்லாத உறவு.. நிலையில்லாத சொந்தம்.. இதை எப்படி அவள் அனுபவிப்பது..?

"அண்ணியா.. கொக்கா..? சோழியன் குடுமி சும்மாவா ஆடும்..? அண்ணி வாயில இருந்து நல்லதா நாலு வார்த்தை பாராட்டிப் பேசினாங்கன்னா அதுக்குப் பின்னாலே வில்லங்கம் கூடாரம் கட்டி கும்மியடிக்கும்ன்னு எனக்குத் தெரியாதா..?"

சுதர்சனத்திற்கும் அம்புஜத்திற்குமான சொற்போர் தொடர்ந்தது.. தசரதனால் ஊடே வர முடியவில்லை.. அவருக்குப் பெரியப்பா முறையிலிருக்கும் பெரியவர் அங்கே இருந்தார்.. ஊரில் பெருந்தனக்காரர்.. சுதர்சனத்தின் ஆதரவாளர்.. அவரை வைத்துக் கொண்டு அம்புஜத்திற்கு ஆதரவாக பேசிவிட முடியாது..

அம்புஜம் அண்ணனின் தயவை எதிர்பார்க்கவில்லை.. இரண்டில் ஒன்று என்ற வெறியுடன் மோதிக் கொண்டிருந்தாள்.. அவள் வைத்த குறிகளில் ஒன்றான ரகுநந்தன் தப்பி விட்ட ஆத்திரம் அவளுக்கு.. அடுத்த குறியான ரதி மீனாவையாவது அவள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்..

"வில்லங்கம் வரும்ன்னு தெரியுதில்ல.. விலகி நில்லுங்க.." சுதர்சனத்திடம் சட்டமாகப் பேசினாள்..

"விலகி நிற்கிறதா..? சுதர்சனமா..? ஹ.." சுதர்சனம் அலட்சியமாக கையை ஆட்டினார்..

அவர்களின் மோதலை ரசித்த அஞ்சனா ரகுநந்தனிடம்..

"உங்க வீட்டில ஒரு உயிர்ப்பு இருக்குது.. இப்படி அத்தையும், தாய்மாமாவும் ஆளுக்கொரு பக்கம் நின்று போட்டிச் சண்டை போடுவதைப் பார்க்க இண்ட்ரெஸ்ட்டா இருக்கு.." என்றாள்..

"உங்களுக்கு இண்ட்ரெஸ்ட்டா இருக்கும்.. எங்களுக்குத்தான் வேதனையா இருக்கும்.." சோகமாக சொன்னான் ரகுநந்தன்..

"என்ன அண்ணா இது.. அண்ணியை வாங்க, போங்கன்னு சொல்ற..?" ரதிமீனா புருவங்களைச் சுருக்கினாள்..

நாக்கைக் கடித்துக் கொண்ட ரகுநந்தன் கெஞ்சுதலாக அஞ்சனலட்சுமியைப் பார்த்துவிட்டு..

"உனக்குன்னுதான் சொன்னேன் ரதி.. நீ சரியாக் கவனிச்சிருக்க மாட்டே.." என்று மழுப்பினான்..

பொழுது சாய ஆரம்பித்ததில் சுமித்ரா கவலையுடன் துளசியின் காதைக் கடித்தாள்.. தசரதனின் பெரியப்பா முறையிலிருக்கும் பெரியவர் அங்கே இருக்கும்வரை தசரதன் மகனிடம் கோபம் காட்ட மாட்டார்.. அவர் போய் விட்டால் வீட்டில் யுத்தம் மூண்டு விடும.. அதனால் பெரியவர் இருக்கும் போதே ரகுநந்தனையும் அஞ்சனலட்சுமியையும் மாடியறைக்கு அனுப்பி விடுவது

சாலச்சிறந்தது.. மாடியறையின் கதவைத் தட்டி, மகனை வெளியே அழைத்துச் சண்டை போடும் அளவிற்கு தசரதன் நாகரிகம் இல்லாத மனிதரல்ல..

"ரதி.." துளசி அழைத்தாள்..

"என்னங்கத்தை.." ரதி துளசியின் அருகே போனாள்..

"அண்ணனையும், அண்ணியையும் மாடிக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போ.. அவங்க ரூமில தங்க வைச்சுட்டு வா.. நாங்க போனா உங்கப்பா எங்களை உண்டு இல்லைன்னு ஒரு கை பார்த்திடுவார்."

"அதுதான் தெரிந்த சங்கதியாச்சே.. நான் பார்த்துக்கிறேன் அத்தை.."

ரதிமீனா ரகுநந்தனின் அருகே வந்து குனிந்து அவன் காதுகளில் முணுமுணுத்தாள்..

"அத்தையும் மாமாவும் ஃபைட் பண்ணிக்கிட்டு இருக்கிறப்பவே நீ அண்ணியுடன் எஸ்ஸாகி மாடிக்கு ஓடிப் போயிரு.. எந்த செகண்டிலும் தாத்தா டாட்டா சொல்லிட்டுக் கிளம்பி விடலாம்.. இவர் இருக்கிறவரைக்கும்தான் அப்பா சாது வேசம் கட்டுவார்.. அவர் அந்தப்பக்கம் நகர்ந்தா இந்தப்பக்கம் உன்னிடம் போர் முரசு கொட்டிருவார்.. எப்படி வசதி..?"

"அப்பாவிடம் அகப்படுவதுதான் வசதின்னு சொல்ல நான் என்ன கேணையனா..?"

ரகுநந்தன் அஞ்சனலட்சுமிக்கு கண்ஜாடை காட்டியபடி எழுந்தான்.. அவன் எதையோ பேச அழைக்கிறான் என்ற நினைவில் அவளும் எழுந்து அவனுடன் நடந்தாள்.. தங்கையும் மைத்துனனும் போட்டுக் கொண்டிருந்த வாய்ச் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த தசரதனின் பார்வையில் படாமல் அவர்கள் நகர்ந்து மாடிப்படிகளில் ஏறிவிட்டார்கள்..

"அப்பாடா.. கிரேட் எஸ்கேப்.." நெஞ்சில் கை வைத்து ஆழமாக மூச்சு விட்டாள் ரதிமீனா..

தங்கையின் தலையில் செல்லமாகத் தட்டினான் ரகுநந்தன்.. அவள் வலிப்பதாக பாவனை செய்து சிணுங்கினாள்.. அண்ணன் தங்கையின் செல்லச் சண்டையில் மனம் லயித்தாள் அஞ்சனா.. அறைக்குள் நுழைந்ததும் ரதிமீனா..

"அண்ணி.. இதுதான் அண்ணனோட ரூம்.. இனி உங்களோட ரூமும் இதுதான்.." என்று சொன்னாள்..

அஞ்சனலட்சுமிக்குத் 'திக்'கென்று ஆகி விட்டது..

17

சில்லென்ற ஏஸி குளிரிலும் உடல் வியர்க்கத் தூக்கமில்லாமல் புரண்டு படுத்தாள் அஞ்சனா.. அறையில் விடி விளக்கின் ஒளி நிரம்பியிருந்தது.. சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தின் 'டிக், டிக்' ஒலி அவளது இதயத்துடிப்பைப் போல தடதடத்தது.. அறியாத ஊரில், தெரியாத மனிதர்களின் வீட்டில், அன்னிய ஆணுடன் ஒரே அறையில் தங்கும்படி நேர்ந்து விட்டதில் அவளுக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியிலிருந்து அவளால் மீள முடியவில்லை..

அவனையும் ரகுநந்தனையும் மாடியறையில் விட்டு விட்டு ரதிமீனா போனவுடன் அஞ்சனலட்சுமி ரகுநந்தனைத் திட்டித் தீர்த்து விட்டாள்.. அவன் பதிலே பேசாமல் அனைத்தையும் வாங்கிக் கட்டிக் கொண்டான்.. நடந்ததை அவன் நியாயப்படுத்த முனையவில்லை..

"யாருங்க நீங்க..? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்..? பஸ்ஸில் பக்கத்து பக்கத்து சீட்டில் உட்கார்ந்து டிராவல் பண்ணினோம்.. அதை அட்வான்டேஜா எடுத்துக்கிட்டு என்னென்னவோ பேசுவீங்களா..? உங்களை டீசன்ட் மேனுன்னு நினைத்தேன்.. ச்சே.."

அமைதியாக கைகளை மடித்து கட்டிக் கொண்டு அவள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்த ரகுநந்தன் இமைக்காமல் அவளை ஓர் பார்வை பார்த்தான்.. அதில் பேச்சிழந்தாள் அஞ்சனா..

"என் டீசன்ட்டுக்கு என்ன குறைவு வந்து விட்டதுங்க..? நான் உங்களை என்ன செய்தேன்.. கையைப் பிடித்து இழுத்தேனா..? பஸ்ஸை விட்டு இறங்கியதும் நீங்க வேகமாப் போய் ஆட்டோவில் ஏறிட்டிங்க.. நான் என் வழியைப் பார்த்துக்கிட்டு வீட்டுக்கு வந்தேன்.. பின்னாடியே தொடுத்துக்கிட்டு வந்தது யாருங்க..? நானா..?"

நிதானமாக அவன் கேட்ட கேள்வியில் அஞ்சனலட்சுமிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது..

"ஆஹா.. நீங்க பெரிய மன்மதன் பாருங்க.. உங்க அழகில் மயங்கி நான் பின்னாடியே ஃபாலோ பண்ணினேன்.. என் பெட்டியைத் தூக்கிக்கிட்டு நீங்க போனால், பெட்டியை வாங்க பின்னாடி துரத்த மாட்டாங்களா..?"

"மாத்திச் சொல்றீங்க பாருங்க.. என் பெட்டியைத் தூக்கிக்கிட்டு முதல் ஆளா பஸ்ஸை விட்டு இறங்கினது நீங்க.. ஓடிப் போய் ஆட்டோவில் ஏறினது நீங்க.."

"வேண்டாம் ரகுநந்தன்.. நான் யார், என் உயரம் என்ன, என் பெட்டியில் என்னவெல்லாம் இருக்குன்னு உங்களுக்குத் தெரியாது.. தெரியாம வார்த்தையை விடாதீங்க.."

"அதையேதான் நானும் சொல்கிறேன்ங்க.. நீங்க யார், உங்க உயரம் என்ன, உங்க பெட்டியில் என்னவெல்லம் இருக்குன்னு எனக்குத் தெரியாதே.. அப்புறம் எதற்காக நான் உங்க பெட்டியை அபேஸ் பண்ணியிருக்கப் போறேன்..?"

"அது.. அது.. வந்து.."

"ரெண்டு பெட்டியும் ஒன்னு போல இருந்ததில பெட்டிகள் மாறிருச்சு.. இதுக்கு ஏன் இவ்வளவு டென்சன்..?"

எதுவுமே நடக்காததைப் போல ரகுநந்தன் பேசியதில் அஞ்சனாவிற்குச் சுள்ளென்ற கோபம் தலையில் ஏறியது..

"கெட்டிக்காரர்தான் நீங்க.. பெட்டியை வாங்க வந்தவளை உங்க பக்கத்திலே நிறுத்தி, ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ளே அழைத்து, பூஜையறையிலே விளக்கை ஏற்ற வைத்து, பாலும் பழமும் சாப்பிடக் கொடுத்து, இப்ப மாடியறையில உங்களுடன் சேர்ந்து தங்கனும்னு கொண்டு வந்து சேர்த்திருக்கீங்க.. இதுக்கு டென்சன் ஆகாம வேற எப்படி ரியாக்ட் பண்ணனும்னு நினைக்கறிங்க மிஸ்டர் ரகுநந்தன்..?"

"பாருங்க.. சிக்கலை நான் உருவாக்கலை.. தானா அது ஃபார்ம் ஆகியிருக்கு.. எனக்கு வீட்டில் பிராப்ளம் காத்திருக்குன்னு உங்களிடம் சொன்னேனா இல்லையா..? வரும் வழியில் நாம சேர்ந்து ஹோட்டலில் சாப்பிட்டு வந்ததைப் பார்த்த என் தாத்தா தப்பாப் புரிந்துக்கிட்டு என் அப்பாவிடம் பற்ற வைத்ததுக்கு நான் எப்படிங்க பொறுப்பாவேன்..? இல்லைன்னு நான் விளக்கம் சொல்கிறதுக்குள்ள நீங்க எண்ட்ரி கொடுத்து பெட்டியும் கையுமா என் பக்கத்தில வந்து நின்னுட்டிங்க.. என் வீட்டில ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ள அழைச்சுட்டாங்க.. இதில என் தப்பு எங்கேயிருக்குன்னு சொல்லுங்க..?"

எங்கேயும் இல்லைதான்.. அதற்காக ரகுநந்தனின் மனைவியாக அவன் வீட்டில் ஒரே அறையில் அவனுடன் தங்க முடியுமா..?

அஞ்சனலட்சுமி பேச வாய் வராமல் தவித்துக் கொண்டிருக்க ரதிமீனா பெட்டிகளுடன் உள்ளே வந்தாள்..

"அண்ணா.. உங்க பெட்டிகளையும் தள்ளிக்கிட்டு வந்துட்டேன்.. கீழே காச், மூச்சுன்னு ஒரே களேபரமா இருக்கு.. தாத்தா போகிற வழியாத் தெரியலை.. குடுமிப்பிடி சண்டையில பஞ்சாயத்து பண்ண சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு உக்காந்துட்டாரு.. இப்போதைக்கு சண்டை முடியாது போல.. அதுவும் நல்லதுக்குத்தான்னு அத்தையும் அம்மாவும் சொல்கிறாங்க.. நைட் டிபனை

மாடிக்கே கொண்டு வந்துடறேன்.. நீங்க சாப்பிட்டுட்டுத் தூக்கம் போடுங்க.. மிட் நைட்டிலதான் சண்டை முடியும் போல.. அதுக்கு மேலே அப்பா உன்னிடம் விசாரணைக்கமிசன் வைக்க மாட்டார்.. தூங்கி எழுந்து நாளைக்குக் காலையிலே பேசறப்ப வேகம் குறைஞ்சிருக்கும்.. கவலைப்படாதே.."

அவள் போனவுடன் அஞ்சனலட்சுமி அவசரமாக அவளுடைய பெட்டியைக் கைப்பற்றினாள்..

"என் பெட்டி.. என் பெட்டி.."

"உங்க பெட்டிதான்.. யாரு இப்ப இல்லைன்னு சொன்னது..?" என்று சொன்ன ரகுநந்தன் அடுத்து அஞ்சனலட்சுமி செய்த செயலில் திடுக்கிட்டுப் போனான்..

"இந்தப் பெட்டிக்காகத்தான் வந்தேன்.. பெட்டி கிடைச்சிருச்சு.. நான் கிளம்பறேன்.." என்றபடி அஞ்சனா பெட்டியைத் தூக்கிக் கொண்டு கதவைத் திறக்கப் போனாள்..

பாய்ந்து போய் கதவின் மீது சாய்ந்து வழியை மறைத்த ரகுநந்தன்..

"கெடுத்தீங்களே காரியத்தை.." என்றான் கலவரமாக..

"வாட் இஸ் திஸ் ரகுநந்தன்.. ? திஸ் இஸ் நாட் பெயர்.. வழியை விடுங்க.. நான் என் வழியில் போகனும்.." அஞ்சனலட்சுமி படபடத்தாள்..

"தாராளமாப் போங்க.. யாரும் தடுக்கலை.. பட், இப்பக் கிளம்பாதீங்க.. ப்ளீஸ்.." ரகுநந்தன் கெஞ்சினான்..

"நைட் ஆகப் போகுது ரகுநந்தன்.. இந்த நேரத்தில் நான் உங்க வீட்டில், உங்க ரூமில் தங்கக் கூடாது.."

"என்னங்க நீங்க.. புரியாமப் பேசிக்கிட்டு இருக்கீங்க.. கீழே பானிபட் ஃபைட்டை விடப் பயங்கரமா ஃபைட் நடந்துக்கிட்டு இருக்கு.. எங்க தாத்தா பஞ்சாயத்து பண்ணுகிறேன் பேர்வழின்னு செல்போனை ஆன் பண்ணி வைச்சு சொந்த பந்தங்களுக்கு லைவா ஆடியோவ அனுப்பிக்கிட்டு

இருக்கார்.. ஊரெல்லாம் என் வீட்டை நோட் பண்ணிக்கிட்டு இருக்கிற சமயத்தில நீங்க பொசுக்குன்னு பொட்டியைத் தூக்கிக்கிட்டுக் கிளம்பினீங்கன்னா வேற வினையே வேண்டாம்.. இதையே காரணமாச் சொல்லி எங்கப்பா சிற்றானைச் சித்ராவை என் தலையில் கட்டி விடுவார்.. என்னைக் காப்பாத்துங்க.. என் மூஞ்சியைப் பாருங்க.. பாவமா இல்லையா..?"

தன்னையும் அறியாமல் ரகுநந்தனின் முகத்தைப் பார்த்தாள் அஞ்சனா.. தலை கலைந்து முன் நெற்றியில் படிந்திருந்த சிகை கவர்ச்சியாக இருந்தது.. சீரான முகம்.. செதுக்கப்பட்டதைப் போன்ற தோற்றம்.. அடர்ந்த மீசை.. ஆண்மையின் கம்பீரத்தோடு அவளது பெண் மனதை ஈர்த்தான்.. அஞ்சனா தடுமாறினாள்.. அதை மறைக்க முகத்தைத் திருப்பியபடி..

"சிற்றானைச் சித்ராவா..? யாரது..?" என்றாள்..

"சரியாப் போச்சு போங்க.. விடியவிடிய பாகுபலியப் பார்த்துட்டு தேவசேனைக்கு பாகுபலி சித்தப்பா முறையான்னு கேட்கிற மாதிரியில்ல கேட்டு வைக்கறிங்க.. பிரச்னைக்குக் காரணமே அவதான்ங்க.. ஹாலில் உட்கார்ந்து உளுந்தவடையை மொக்கிக் கொண்டிருந்தாளே.. அவதான் சித்ரா.. என் அம்புஜம் அத்தையின் அழகுமகள்.."

"அந்தப் பெண்ணா..?" ஆச்சரியத்துடன் வினவினாள் அஞ்சனா..

"அவளேதான்.."

"அவளுக்கும் உங்களுக்கும் மேரேஜ் பண்ணி வைக்கத்தானே உங்களுக்கு ஃபேல்ஸா நியூஸ் கொடுத்து வர வைத்திருக்காங்க..?"

"ஆமாங்க.."

"என்னங்க இது..? மேரேஜ் பண்ணிக்கிறதா இருந்த மாமா மகன் யாரோ ஒரு பெண்ணை மேரேஜ் பண்ணிக்கிட்டு வந்திருக்கிறான்.. இந்தப் பெண் அதைப்பத்திக்

கவலைப்படாம வடையைச் சாப்பிட்டுக்கிட்டு இருக்காளே.. ஸோ ஸேடு.."

"புரிஞ்சுக்கிட்டாச் சரி.. எப்படி இந்தப் பிரச்னையில இருந்து தப்பிக்கிறதுன்னு தெரியாம வீட்டில வந்து சிக்கினேன்.. என்னைக் காக்க வந்த தேவதையாய் நீங்க வந்து நிற்கறிங்க.. கையெடுத்துக் கும்பிடறேன்.. கை கழுவிட்டுப் போயிராதீங்க.. மீ பாவம்.."

ரகுநந்தன் பாவம் போல மூக்கை உறிஞ்சி வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.. இமைகளைக் கொட்டினான்.. போதாக் குறைக்கு கெஞ்சுதலாக முகத்தை வைத்துக் கொண்டு அவளைக் கையெடுத்துக் கும்பிட்டான்.. அவன் செய்த கோணங்கிச் சேட்டைகளில் அஞ்சனாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.. அதைக் கவனித்த ரகுநந்தன் நெஞ்சில் கை வைத்து..

"பிழைச்சேண்டா சாமி.." என்றான்..

அஞ்சனா பெட்டியை வைத்துவிட்டுக் கட்டிலில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தாள்..

"இப்ப என்னதான் செய்கிறது..?" ரகுநந்தனிடம் கேட்டாள்..

"இன்னும் கொஞ்ச நேரத்தில் ரதி நமக்கான டிபனுடன் வந்து விடுவாள்.. எங்கம்மா சமையலை நீங்க சாப்பிட்டதில்லையே.. அம்புட்டு ருசியாச் சமைப்பாங்க.." ரகுநந்தன் நாக்கைச் சப்புக் கொட்டினான்..

"நான் என்ன கேட்கிறேன்.. நீங்க என்ன சொல்கிறீங்க..? இந்த இக்கட்டான நேரத்தில சாப்பாட்டைப் பத்திப் பேசறிங்களே.."

"சோறு முக்கியம்ங்க.. அடுத்துதான் மத்ததெல்லாம்.."

"விளங்கிரும்.."

அஞ்சனா நொடித்தது அழகாக இருந்தது.. ரகுநந்தன் அவளை ஆழ்ந்து பார்த்ததில் முகம் சிவந்தாள்.. உண்மையிலேயே இவள் காதல் மனைவியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏக்கம் கொண்டான்

ரகுநந்தன்.. ம்ஹீம்.. அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.. அவன் மீது இரக்கம் கொண்டு அந்த நொடிகளில் அங்கே தங்கியிருக்கிறாள்.. வாய்ப்புக் கிடைத்ததும் பறந்து போய் விடுவாள்..

"பாருங்க.. நான் நல்லவன்.. என்னாலே உங்களுக்கு எந்தக் கெடுதலும் வராது.. உங்க ரூமில் எனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறதா நினைத்துக்கங்க.. கட்டிலில் படுத்து நிம்மதியாத் தூங்குங்க.. நான் தரையில் படுத்துக்கறேன்.. குட்நைட்.."

இரவு உணவு முடிந்து ரதிமீனா பாத்திரங்களுடன் போனதும் கதவை அடைத்த ரகுநந்தன் தரையில் விரித்து ஒரு தலையனையை எடுத்துத் தலைக்குக் கொடுத்துப் படுத்துத் தூங்கி விட்டான்..

அஞ்சனாவுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.. அதையும் மீறி அவள் தங்க பாதுகாப்பான ஓர் இடம் கிடைத்து விட்டதில் ஆறுதலாகவும் இருந்தது.. மெல்ல அவள் உறங்கிப் போனாள்..

18

கன்னத்தில் சில்லென்ற நீர்த்துளிகள் தெறித்ததில் அருவியில் நணைவதைப் போன்ற சிலிர்ப்புடன் கண்விழித்தாள் அஞ்சனா.. அவள் அருவியில் நணைந்து கொண்டிருக்கவில்லை.. கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறாள் என்று அறையில் சுற்றுப்புறத் தோற்றமும், கட்டிலில் அருகே நின்று கொண்டிருந்த ரகுநந்தனும் அறிவுறுத்தியதில் அவசரமாக வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்..

"ரிலாக்ஸ்.." ரகுநந்தன் முறுவலித்தான்..

"ஐ'ம் ஸாரி.. தூங்கிட்டேன்.." சங்கடத்துன் முணுமுணுத்த அஞ்சனா கன்னத்தில் ஈரத்தை உணர்ந்து தொட்டுப்

பார்த்தாள்..

இப்போது ஸாரி சொல்வது ரகுநந்தனின் முறையானது..

"ஐ'ம் ஸாரி.. ரதி காப்பியோடு வந்து கதவைத் தட்டிட்டா.. எட்டு மணியாகுதாம்.. நாம குளிச்சுட்டு கீழே போகனுமாம்.. இதுக்கு மேலயும் ரூமில ஒளிஞ்சிருக்க முடியாதுன்னு சொல்லிட்டுப் போறா.. காபியை வாங்கி வைச்சுட்டு உங்களை எழுப்ப வந்தேன்.. எப்படி எழுப்பறதுன்னு தெரியலை.. தொட்டு எழுப்பத் தயக்கமா இருந்தது.. பஸ்ஸில் பலபேர் மத்தியில் இருந்தோம்.. ஒருவர் மேலே ஒருவர் சாய்ஞ்சு தூங்கினாலும் ஒன்னுமில்லை.. இது தனி ரூம்.. தற்செயலா விரல் நகம் பட்டால்கூடத் தப்பாப் போயிரும்.. அதான்.. தண்ணியத் தெளிச்சு எழுப்பி விட்டேன்.." ரகுநந்தன் நீண்டதொரு விளக்கம் கொடுத்தான்..

"இட்'ஸ ஆல்ரைட்.." அஞ்சனா எழுந்து நின்றாள்..

ரகுநந்தனின் படுக்கையும் தலைக்கு வைத்திருந்த தலையணையும் கட்டிலுக்கு இடம் மாறியிருந்தது..

"ரதி பார்த்துட்டா சந்கேப்படுவா.." அவளது பார்வையைப் புரிந்து கொண்டு பதில் சொன்னான் ரகுநந்தன்..

"ம்ம்ம்.." என்ன சொல்வதென்று தெரியாமல் முணுமுணுத்தாள் அஞ்சனலட்சுமி..

கட்டிலில் அவளும், தரையில் ரகுநந்தனும் தனித்தனியாக உறங்கிக் கொண்டிருப்பதை ரதிமீனா பார்த்து விட்டால், புதிதாக திருமணமான அண்ணனும், அண்ணியும் ஏன் தனித்தனியாக படுத்து உறங்குகிறார்கள் என்று சந்தேகப்படுவாள்.. வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லி விடுவாள்.. ரகுநந்தன் போட்டுக் கொண்டிருக்கும் நாடகம் கலைந்து விடும்.. அவன் மறுபடியும் ஆரம்பப் புள்ளிக்கே போய், சிற்றானை சித்ராவுக்கு மாலையிட வேண்டிய ஆபத்தில் அகப்பட்டுக் கொள்வான் என்பதினால் அதை மறைக்க கதவைத் திறப்பதற்குள் படுக்கை விரிப்பையும் தலையணையையும் கட்டிலில் கடாசியிருக்கிறான்..

'இதை சமாளித்து விட்டான்.. மற்ற நேரங்களில் எப்படி சமாளிப்பது..?' அஞ்சனா கவலையில் ஆழ்ந்தாள்..

"ஓவர் சிந்தனை உடம்புக்கு ஆகாதுங்க.."

காபியை அவளிடம் நீட்டியபடி சொன்னான் ரகுநந்தன்..

"திங்க் பண்ணாம இருக்க முடியாதே.." அஞ்சனா காபி தம்ளரை வாங்கிக் கொண்டாள்..

"சிந்திக்கலாம்.. குளிச்சு முடிச்சு வயித்துக்குள்ள எதையாவது போட்டுக்கிட்ட பின்னாலே சிந்திக்கலாம்.. நேத்துக் காலையிலே ஆரம்பிச்ச சிந்தனை.. சாயந்திரம்தான் தற்காலிகமா தப்பிக்க முடிஞ்சிருக்கு.. நாம கீழே போனவுடனே பூகம்பம் வெடிக்கும்.. அதுக்கப்புறம் அதில் இருந்து தப்பிக்க என்ன வழின்னு போராடறதிலேயே மனசு போயிரும்.. சிந்தனை வராது.."

'எப்படி வழி சொல்கிறான்..' அஞ்சனாவுக்கு சிரிப்பு வந்தது.

"அதற்க்கப்புறம் என்ன செய்கிறது..?" புருவங்களை உயர்த்தினாள்..

"ஏங்க.. நேத்துக் காலையிலே இருந்து இப்ப வரைக்கும் என்ன செய்கிறதுன்னு யோசித்தா ஓடிக்கிட்டு இருக்கோம்..? எல்லாம் தானா நடந்ததுதானே.. இனியும் அப்படித்தான்.. என்ன நடக்கும், எப்படி நடக்கும்ன்னு எனக்கே ஐடியா எதுவும் இல்லை.. பாவம் நீங்க.. யாரோ, எவரோ..? என் பிரச்னையிலே மாட்டிக்கிட்டு முழிக்கறிங்க.. உங்களுக்கு மட்டும் ஐடியா கிடைச்சிருமா..? விடுங்க.. எது நடக்குதோ. அது நடக்கட்டும்.. நான் பர்ஸ்ட் குளிச்சுட்டு வந்துடறேன்.. அதுக்கப்புறம் நீங்க குளிக்கப் போங்க.. அதுவரை பால்கனியில் வேடிக்கை பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருங்க.."

ரகுநந்தன் கைகாட்டிய திசையில் கதவு இருந்தது.. இந்தக் கதவை இரவில் பார்க்கவில்லையே என்று நினைத்துக் கொண்டாள் அஞ்சனா..

"அப்பக் காட்டியிருந்தா என்னை அங்கே துரத்தி விட்டுத் தூங்கச் சொல்லியிருப்பீங்க.. மார்கழிப் பனியில பால்கனியிலே தூங்கற அளவுக்கு ஸ்ட்ராங்கான ஹெல்த் கண்டிசன் எனக்கில்லங்க.." ரகுநந்தன் குளியலறையில் புகுந்தபடி குரல் கொடுத்தான்..

'இவன் இருக்கானே..' அஞ்சனா மனம் விட்டுச் சிரித்தாள்..

ரகுநந்தனின் இயல்பான பேச்சும், நடவடிக்கைகளும் அவளைக் கவர்ந்தன.. அவள் வளர்ந்த சூழலே வேறு.. மேல்தட்டு வர்க்கத்தினரின் அகத்தில் என்ன இருக்கிறது என்பதை முகத்தைப் பார்த்துக் கண்டு பிடிக்கவே முடியாது.. சிரிக்கக் கூலி கேட்கும் இறுக்கமான முகம்.. நீ எனக்கு நிகரில்லை என்ற கர்வத்தைப் பிரதி பலிக்கும் முகம்.. சிரிப்பையும், அழுகையையும் தனக்கு தானே புதைத்துக் கொண்டு உணர்வுகள் துடைக்கப்பட்டு நாசுக்காக வெளிப்படுத்தும் முகம்..

ரகுநந்தன் அப்படியில்லை.. வெடிச் சிரிப்புச் சிரிக்கிறான்.. சத்தமாகப் பேசுகிறான்.. உணர்வுகளில் குமுறுகிறான்.. மனிதனாக போலி முகமூடியின்றி வாழ்கிறான்..

அஞ்சனா பால்கனிக்கு வந்தாள்.. சிறிய பால்கனிதான் என்றாலும் தெருவைப் பார்த்ததைப் போல இருந்தது.. அங்கே தொங்கிக் கொண்டிருந்த மூங்கில் ஊஞ்சலில் உட்கார்ந்து கால் விரல்களால் விந்தினாள்.. தொட்டில் போன்ற ஊஞ்சல் அசைந்தாடியது.. கூடை போன்ற அதன் அமைப்பு கூட்டுக்குள் இருப்பதைப் போன்ற பாதுகாப்பு உணர்வை அவளுக்குத் தந்தது.. தாய்ப்பறவையின் சிறகுகளுக்கு அடியில் அவள் இருப்பதைப் போல உணர்ந்தாள்.. அயர்வுடன் விழிகளை மூடிக் கொண்டாள்.

"தாத்தா.." அவளது வாய் முணுமுணுத்தது..

அவர் இப்போது எப்படியிருப்பாரோ.. அவர் சுய உணர்வுக்கு வருவது அவசியம் என்பதால் அவருக்கான மருத்துவ சிகிச்சை நின்றிருக்காது.. கோமாவில் அவர் இருக்கும் போதே அஞ்சனாவைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும்.. அவர் சுய உணர்வுக்கு வந்தவுடன் அவள் எங்கோ ஓடி விட்டாள்

என்று சொல்லி சொத்துக்களைத் தம்பி பிள்ளைகளின் பெயரில் எழுத வைக்க வேண்டும் என்பதுதானே அவர்களது திட்டம்..

"அஞ்சனா என் மகனை மேரேஜ் பண்ணிக்க ஒப்புக்கிட்டாத் தப்பித்தா.. இல்லைன்னா.."

சாம்பசிவத்தின் தம்பி மகள் கருவியது அஞ்சனாவின் காதுகளில் ஒலித்தது.. உடல் தூக்கிப் போட அவள் இமைகளைத் திறந்தாள். இப்போது அவர்கள் பொய் சொல்லத் தேவையின்றி அஞ்சனாவே வீட்டை விட்டு ஓடிவந்து விட்டாள்..

விழிமூட பயமாக இருந்தது.. ரகுநந்தனின் அருகில் இருக்கும் போது அப்போதையப் பிரச்னையில் மனம் போய் விடுகின்றது.. நினைவுகள் துரத்துவதில்லை..

அஞ்சனா ஊஞ்சலில் ஆடியபடி தெருவை வேடிக்கை பார்த்தாள்.. பெங்களூரின் தெருக்களைப் போல இல்லாமல் திருவாரூரின் தெரு வித்தியாசமாக இருந்தது.. காய்கறிப் பையுடன் நடந்து வரும் பெண்மணி.. கோவிலுக்குச் சென்றுவிட்டு அர்ச்சனைத் தட்டுடன் திரும்பி வரும் மடிசார் மாமி.. ஸ்கூட்டரில் வேலைக்குச் செல்பவர்.. சைக்கிளில் ரேசன் வாங்கப் போகும் இளைஞன்.. கார் என்று பல்தரப்பட்ட மனிதர்களைப் பார்க்க முடிந்தது.. அஞ்சனா விழிகள் விரிய அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.. பள்ளிச் சீருடையில் இருந்த இரு சிறுமிகள் பால்கனியில் அவளைக் கண்டதும் உற்சாகக் கூவலுடன் கையாட்டிக் குதித்தார்கள்..

"ஹாய் அக்கா.. யு ஆர் ஸோ பியூட்டிஃபுல்.."

'யார் இவங்க..?'

அஞ்சனாவுக்குத் தெரியவில்லை என்றாலும் பதிலுக்கு அவள் கையாட்டினாள்..

"ஹாய்.."

"காத்துக்கிட்டு இருந்த எங்ககிட்ட இருந்து ரகு மாமாவ லவட்டிக்கிட்டுப் போயிட்டிங்களே.."

சிறுமிகளில் ஒருத்தி கூவினாள்.. அர்ச்சனா திகைத்தாள்..

'லவட்டிக்கிட்டுப் போயிட்டேனா.. என்ன லாங்வேஜ் இது..?'

"தமிழ்தான்.." அவளது முதுகுக்குப் பின்னாலிருந்து ரகுநந்தனின் குரல் கேட்டது..

குளித்து விட்டுக் கைலியும் வெற்று மார்புமாகத் தலையைத் துவட்டியபடி பால்கனிக்கு வந்தான்.. கீழே எட்டிப் பார்த்து சிறுமிகளை அதட்டினான்..

"ஏய்ய்.. வாலுகளா.. ஸ்கூலுக்குப் போகாம இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?"

"அதுக்குள்ளே என்ன அவசரம் மாமா..? ஸ்கூல் என்ன கால் முளைச்சு ஓடியா போகப் போகுது..?"

"நேரம் ஓடும்.. தெரியுமில்ல.."

"தெரியுதில்ல.. இந்தா.. கண்ணை மூடிக் கண்ணைத் திறக்கறதுக்குள்ள ஒரு வருசம் ஓடிப் போயிருக்கும்.. எனக்கும் பதினெட்டு வயசு ஆகியிருக்கும்.. அதுவரைக்கும் காத்திருக்காம அவசரப்பட்டு அக்காவக் கட்டிக்கிட்டு வந்துட்டிகளே மாமா.."

"அடிங்.. பிளஸ் டூவில இருந்துக்கிட்டு வாயைப்பாரு.. உனக்காகக் காத்துக்கிட்டு இருந்தா சித்தானை சித்ராகிட்ட மாட்டிக்குவேனே.. யாரு காப்பாத்தறது..?"

"நான் காப்பாத்த மாட்டேனா மாமா..?"

"அப்படிங்கற.. அப்ப ஒன்னு செய்யி.. கீழே, அண்டா வாயி அம்புஜம் அத்தை கத்திக்கிட்டு இருக்காங்க.. அவங்ககிட்ட வாய் கொடுத்து ஜெயிச்சுக் காட்டு.. உன்ன ரெண்டாம்தாரமா நான் கட்டிக்கிறேன்.."

"ஆத்தி.. போகாத ஊருக்கு வழி சொல்றீகளே மாமா.. வாயா அது..? கடலு..! எனக்கு ஏரித்தண்ணியிலேயே நீச்சல் தெரியாது.. நீங்க கடலுத் தண்ணிக்குள்ளத் தள்ளி விடப்

பாக்கறிகளே மாமா.. உங்க சங்காத்தமே எனக்கு வேணாம்.. அக்காவும் நீங்களும் ஒருவனுக்கு ஒருத்தின்னு சந்தோசமா வாழ்ந்து காட்டுங்க.."

"நீ..?"

"ஸ்கூலுக்கு நடையைக் கட்டறேன்.."

அந்தப் பெண் கையாட்டி விட்டு ஓடிவிட.. ரகுநந்தன் உரக்கச் சிரித்தபடி அஞ்சனாவின் பக்கம் திரும்பி இயல்பாக கண் சிமிட்டினான்.. அஞ்சனா இமைக்க மறந்து பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள்..

அந்த நொடியில் அவள் மனது இதுவல்லவோ வாழ்க்கை என்றது..

## 19

ரதிமீனா வந்து விட்டாள்.. அரக்குகலரில் மெஜந்தா வண்ணத்தில் கெட்டி ஜரிகையிட்ட பட்டுப்பாவாடை.. மெஜந்தா வண்ணத்தில் கைப்பகுதியில் கெட்டி ஜரிகை பார்டர் வரும்படி தைக்கப்பட்ருந்த ஜாக்கெட்.. மெஜந்தா வண்ணத்தில் பட்டுத் தாவணி என்று தமிழகத்தின் பாரம்பர்யமாக வெகு அழகாக இருந்தாள்.. நீண்ட கூந்தல் அவளுக்கு.. கரிய அடர்ந்த கூந்தலைப் பின்னியிருந்தாள்.. அவள் நடக்கும் போது ஆடும் பின்னலில் அவளுடைய மாமன் மகன் கண்ணனின் மனமும் சேர்ந்து ஆடும்.. அதை கண்டு கொண்ட அத்தை அம்புஜத்தின் மனமும் பதட்டத்தில் ஆடும்.. ஆத்திரத்துடன் தன் மகனைப் பார்ப்பாள்.. அவன், இந்த விவகாரமெல்லாம் எனக்கு எதற்கு என்று சுமித்ரா சுட்டுப் போடும் வடைகளைத் தின்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பான்..

'இவனுக்கு சதானந்தன்னு பேரு வைச்சேன்.. இவன் என்னடான்னா, சதா தின்னுக்கிட்டு இருக்கிறதிலேயே குறியா இருக்கான்.. கண்ணுக்கு முன்னாலே ஒரு பேரழகி

மாமன் மகளா உலாத்திக்கிட்டு இருக்காளே.. அவளை 'அத்தை மகனே.. அத்தானே.. உன் அழகைக் கண்டு நான் பித்தானேன்'னு பாட்டுப்பாட வைக்கலாமேங்கிற குறிக்கோள் ஏதும் மனசில இருந்தா இப்படி அவ முன்னாலே தின்னிப் பண்டாரமா வேசம் கட்டிக்கிட்டு இருப்பனா..?' அம்புஜம் மனதுக்குள் குமைவாள்..

அன்று அந்தக் குமைச்சல் அதிகமாகவே இருந்தது.. ரகுநந்தனும் கை நழுவிப் போய்விட்டான்.. அதைக் காரணம் காட்டி ரதிமீனாவை வளைத்துப் போட்டு விடலாம் என்றால் சுதர்சனம் போட்டிக்கு வந்து நிற்கிறார்..

'இந்த மனுசன் பொண்ணைப் பெத்துக்காமலே ரகுநந்தனுக்கு சித்ராவைக் கட்டி வைக்க விடாம மல்லுக்கு நின்னவன்.. இப்ப ஒன்னுக்கு ரெண்டா மகன்கள் இருக்கிறப்ப என் மகனுக்கு ரதிமீனாவை விட்டுக் கொடுக்காம போட்டிக்கு வருவானே..' அம்புஜம் ஆத்திரம் அடைந்தாள்..

ரதிமீனா மாடிப்படிகளில் ஏறும் போதே அம்புஜம் முடிவு செய்து விட்டாள்.. அவள் அண்ணனையும் அண்ணியையும் அழைத்துக் கொண்டு வரப்போகிறாள் என்பதில் அம்புஜத்தின் மனம் ஆங்காரம் கொண்டது..

'வாடி.. என் வருச நாட்டுப் பைங்கிளி..! காத்திருந்தவ மருமகனை நேத்து வந்தவ கட்டிக்கிட்டு என் அண்ணன் வீட்டில மருமகளா அடியெடுத்து வைச்சிருக்கியா..? நேத்துச் சாயங்காலமே உன்னை ஆய்ந்து கூடையிலே அள்ளிப் போட்டிருப்பேன்.. சொந்தக்கார பெரிய மனுசர் வீட்டுக்குப் போகாம வேடிக்கை பாக்க இங்னயே குத்த வைச்சு உக்காந்துட்டாரு.. அந்தாளு முன்னாலே எங்கண்ணன் பிள்ளையைப் பேச முடியாம வாயை இறுக்கி மூடித் தழ்ப்பாளப் போட்டு உக்காந்துட்டாரு.. அதுதான் சாக்குன்னு இந்த வித்தாரக்கள்ளிக உன்னயும் உன் புருசனையும் மாடிக்கு அனுப்பி காபந்து பண்ணிட்டாளுக.. இப்ப விடிஞ்சிருச்சு.. நீங்க ரெண்டு பேரும் கீழே வந்துதானே ஆகணும்.. இருக்குடி கச்சேரி உங்களுக்கு..'

நம்பியாரைப் போல அவள் கைகளைப் பிசைந்தபடி காத்திருப்பதை அறியாமல் அஞ்சனா அறைக்குள் வந்த ரதிமீனாவின் அழகை வியந்து கொண்டிருந்தாள்..

"வாவ்..! வாட் எ டிரேசனல் மேக்கப்..! ஐ லைக் திஸ்.."

"நிஜமாவே நான் அழகா இருக்கேனா அண்ணி..?"

"செம அழகு.."

"உங்களை விட அழகில்லை அண்ணி.. நீங்க அப்படியே மைதாமாவு கலரில வெள்ளை வெள்ளேர்ன்னு இருக்கீங்களே.."

அரைத்து விட்ட சந்தன நிறத்தில் இருந்த ரதிமீனா அஞ்சனாவைக் கட்டிக் கொண்டாள்.. அதுபோன்ற பாசப் பிணைப்புக்களுக்குப் பழக்கப்பட்டிராத அஞ்சனாவின் கண்கள் கலங்கி விட்டன.. அந்தப் பாசம் அஞ்சனாவுக்குச் சொந்தமானதல்லவே..

"வாங்க அண்ணி.. கீழே போகலாம்.. குடும்பமே உங்களைப் பார்த்துக் கும்மியடிக்கக் காத்துக்கிட்டு இருக்கு.. பயந்துராதீங்க.. அப்பாவும், அத்தையும்தான் போர்முரசு கொட்டுவாங்க.. மத்தவங்க எல்லாம் உங்க பக்கம்தான் நிற்போம்..

ரதிமீனா தைரியம் கொடுத்தாலும் அஞ்சனாவின் வயிற்றில் பயபந்து உருண்டது.. அவளுக்கும் அந்த வீட்டிற்கும் சம்பந்தமில்லை என்பதை அவள் மறந்தாள்.. உண்மையாகவே அவளும் ரகுநந்தனும் சதிபதி என்பதைப் போல பயந்தாள்.. ரகுநந்தன் அவளைவிட பதினாறு அடி முன்னே பாய்ந்தான்.. அவளுடைய மிரண்ட விழிகளைப் பார்த்தவன்..

"நானிருக்கேனில்ல.." என்று அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

அவர்கள் மூவரும் மாடிப்படிகளில் இறங்கி வருவதை சிவந்த கண்களால் உறுத்துப் பார்த்த தசரதன்..

'ஜோடிப் பொருத்தம் நல்லாத்தான் இருக்கு..' என்று மனதுக்குள் சிலாகித்தார்..

வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல் கண்களை உருட்டி விழித்தார்.. அதையறியாத அம்புஜம்..

"பாத்தீங்களாண்ணே.. இம்புட்டு பெரிய காரியத்தை அசால்ட்டா செஞ்சுட்டு.. எதுவுமே நடக்காததைப் போல பயமத்து வருதுக.. நம்ம புள்ளைமேல தப்பில்லண்ணே.. எந்தக் காட்டு சிறுக்கியோ.. நம்ம புள்ள மனசக் கெடுத்துத் திருட்டுக் கல்யாணம் பண்ண வைச்சுட்டா.." என்று ஓதினாள்..

"பாத்துப் பேசனும் அண்ணி.. கோபம் வந்தா வாய்க்கு வந்ததைப் பேசிறக் கூடாது.. எந்தக் காட்டுச் சிறுக்கியோவா..? அந்தப் பொண்ணு எங்கோ இருந்து வந்திருந்தாலும் மச்சான் வீட்டுக்கு மருமகளா வந்திருக்கு.. உங்க அண்ணன் மருமகளை இப்படித்தான் பேசுவீங்களா..?" சுதர்சனம் சண்டைக்கு வந்தார்..

'ஆத்தி... இந்த மனுசன் எங்கண்ணனோட என்னைப் பகையாளியா கோர்த்து விடறானே..'

மனதுக்குள் அரண்டு போனதை வெளியில் காட்டிக் கொண்டால் அவள் எப்படி அம்புஜம் ஆவாள்..?

"சட்டுன்னு மனசை மாத்திக்க எங்கண்ணன் ஒன்னும் சாதாரண மனுசனில்ல.. தெய்வப்பிறவி..!" என்று போட்டுத் தாக்கினாள்..

"அடேங்கப்பா.." என்றார் சுதர்சனம்..

"பாத்தீங்களாண்ணே.. உங்க மைச்சினன் உங்களை எப்படிப் பேசறாருன்னு.." அம்புஜம் மூட்டி விட்டாள்..

"என் மச்சானை நான் எப்படிப் பேசுவேன்னு அவருக்கும் நல்லாத் தெரியும்.. ஊருக்கும் நல்லாத் தெரியும்.. நீங்க மூட்டி விடாம வாயை மூடிக்கிட்டா நல்லா இருக்கும் அண்ணி.."

"நான் எதுக்குப் பேசாம இருக்கனும்..? நான் சொல்லத்தான் செய்வேன்.. எங்கண்ணன் என்னை எப்படி அருமை பெருமையா வளர்த்தாருன்னு இந்த ஊருக்கே தெரியும்.. அண்ணன் ஒரு கோவில்ன்னு பூப்போட்டு வணங்கிக்கிட்டு இருக்கிறவ நானு.. எங்க அண்ணனும் அப்படித்தான்.. தங்கைக்கொரு கீதம்ன்னு பாட்டுப்பாடி தூங்க வைச்சவரு.."

அம்புஜம் வராத கண்ணீரை முந்தானையால் துடைத்தாள்..

"அப்புடியே சினிமாப் பார்த்தாப்புலயே இருக்கு.." என்று ஏகடியம் பேசி வைத்தார் சுதர்சனம்..

அஞ்சனா ரகுநந்தனின் முதுகுக்குப் பின்னால் நின்றிருந்தாள்.. அவளுக்குப் பயமாகவும் சங்கடமாகவும் இருந்தது.. அம்புஜத்தின் பார்வையைச் சந்திக்கவே அஞ்சினாள்.. அதைப் பார்த்த தசரதனின் முகத்தில் இணக்கம் வந்தது.. அம்புஜம் அதை கண்டு கொண்டாள்.. எரிமலையாக வெடித்தாள்..

"ஏளனம் பேசறவங்களுக்கு எங்க அண்ணன் தங்கச்சி பாசத்தைப் பத்தி என்ன தெரியும்..? என் அண்ணன் மருமகன்னு என்மக சித்ராவை மட்டும்தான் சொல்லுவார்.. எங்கிருந்தோ வந்ததுகளையெல்லாம் ஒரு நாளும் மருமகளா ஏத்துக்க மாட்டார்.." என்று தசரதனின் மகன், மருமகள் பாசத்திற்கு தடையை விதித்தாள்..

"அதுசரி.. தங்கச்சி மகள மருமகள்ன்னு ஒரு பாசத்துக்குச் சொன்னா அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்க முடியுமா..? நாளைக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இன்னொரு வீட்டுக்கு மருமகளா வாழப் போகிற பொண்ணு, இந்த வீட்டுக்கு மருமகளா ஆகிருமா..? ரகுநந்தனோட பொண்டாட்டி மட்டும்தான் இந்த வீட்டுக்கு மருமகளா ஆக முடியும்.. விட்டா சதானந்தன இந்த வீட்டு மருமகன்னு சொல்லிருவீங்க போல.." சுதர்சனம் அம்புஜத்தின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தார்..

"கேட்டிங்களாண்ணே.." அம்புஜம் எப்போதும் அவள் பாடும் பல்லவியை ஆரம்பித்து விட்டாள்..

"அதான் நீங்க பிறந்ததில இருந்து இந்த கேட்டிங்களா அண்ணே பல்லவிய மச்சான் கேட்டுக்கிட்டு இருக்காரில்ல.. வேற பல்லவியை மாத்தி பேசினாத்தான் என்ன அண்ணி..? மச்சானுக்கும் போரடிக்கும்ல்ல..?" வினயமாக வேண்டுகோள் வைத்தார் சுதர்சனம்..

'அடேய்..' அம்புஜத்தின் கண்கள் சிவந்தன..

ஒற்றை ஆளாக அவள் போராடிக் கொண்டிருக்க கிருஷ்ணனும் அவள் பெற்ற பிள்ளைகளும் டைனிங் ஹாலில் குழுமி காலை டிபனை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

'இதுகளை வைத்துக்கிட்டு நான் படற பாடு இருக்கே..' அவளுக்குத் தலை வேதனையாக இருந்தது..

ரகுநந்தனின் பின்னால் நின்று கொண்டிருந்த அஞ்சனாவின் விழிகள் சுழன்றன.. அழகான பாரம்பர்யம் மிக்க பெரிய வீடான தசரதனின் வீட்டை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.. முதல் நாள் மாலையில் அவளுக்கு இருந்த பதட்டத்தில் வீட்டை அவள் சரியாகப் பார்க்கவில்லை.. தூங்கி எழுந்து குளித்து முடித்து வந்திருக்கும் புத்துணர்வுடன் பார்த்த போது வீடு வேறு மாதிரியான அழகுடன் மிளிர்ந்து அவளை ஈர்த்தது.. ஹாலின் விஸ்தீரனமும்.. அங்கே சோபாவில் கால்மீது கால் போட்டு அமர்ந்திருந்த தசரதனின் கண்டிப்பான முகமும், பட்டுப்புடவை, வைர நகைகளுடன் சாந்தமாக ஒளிர்விடும் சுமித்ராவின் அழகும் அவளைக் கவர்ந்தன..

"என்னடா இதெல்லாம்..?" தசரதன் சீறினார்..

"விசாரணைக்கமிசன் ஆரம்பிச்சுருச்சு அண்ணா.." ரதிமீனா முணுமுணுத்தாள்..

"என்ன வேலையை செய்துட்டு வந்திருக்கிற..? திருவாரூர் தசரதன்னா கட்டுக்கோப்பாக் குடும்பத்தை நடத்தறவன்னு ஒரு பேரு இருந்ததுச்சு.. அதைக் கப்பலில் ஏத்தி அனுப்பி விடக் கங்கணம் கட்டிக்கிட்டு இப்டியொரு வேலையைச் செய்து வைத்திருக்கியா..? இத்தனை நாளா நான் கட்டிக்

காப்பாத்தி வந்த குடும்ப கௌரவத்தையும் பெருமையையும் காத்தோட பறக்க விட்டுட்டியேடா.."

"காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.. வேற என்ன தப்பைச் செஞ்சேன்..? உங்களிடம் என் காதலைச் சொல்லியிருந்தா, வாடா மகனே, உனக்குப் பிடிச்ச பெண்ணை உனக்குக் கட்டி வைச்சுட்டுத்தான் வேற வேலைன்னு கிளம்பி வந்துருவீங்களா..? இல்லையில்ல..? அப்புறம் எதுக்கு என்மேல குற்றம் கண்டு பிடிக்கறிங்க.. எனக்கு வேற என்ன வழி இருந்தது..?"

ரகுநந்தன் அனல் பறக்கப் பேசிய பேச்சில் சுதர்சனம் மூக்கின் மீது விரலை வைத்தார்.. அவர் மனதில் வியப்பு வந்தது..

'மாப்புள அப்புடியே நிசமாலுமே காதல் கல்யாணம் கட்டிக்கிட்டு வந்ததைப் போலப் போட்டுத் தாக்கறானே..'



அவருக்கு என்ன தெரியும்.. அஞ்சனலட்சுமியைத் தன் காதல் மனைவி என்று சொல்லிக் கொள்வதில் ரகுநந்தன் புளகாங்கிதப் பட்டுக் கொண்டிருந்தான் என்பது.. அவர் என்னவோ ரகுநந்தன் சிற்றானைக்குட்டி சித்ராவிடமிருந்து தப்பிக்கத்தான் நடித்துக் கொண்டிருக்கிறான் என்று நினைத்தார்.. ரகுநந்தனோ இப்படியொரு அழகியைத் திருமணம் செய்துகொள்ள முடியவில்லையென்றாலும் நடிப்பிற்காகவது அதை நிறைவேற்றிக் கொள்ளலாமே என்ற நடிப்பு வேகத்துடன் எகிறிக் கொண்டிருந்தான்.. அஞ்சனலட்சுமிக்கே அது நடிப்பு என்பது மறந்து போயிருந்தது எனும்போது ரகுநந்தனுக்கு உற்சாகம் பீறிட்டுக் கிளம்பாதா..?

"வேறவழி இல்லேன்னா இப்படிச் செய்வியா..?"

"வேற எப்படிப்பா செய்திருக்க முடியும்..? உங்களுக்குத்தான் பெண்டாட்டி பிள்ளைகள்தான் உங்க குடும்பம் என்கிற பாசமே இல்லாமப் போயிருச்சே.. எங்களைப் பத்தி எப்போதாவது நினைத்துப் பார்த்திருப்பீங்களா..? இல்ல, உங்களை குடும்பம் குழந்தைகன்னு நினைக்கிறதுக்கு உங்க தங்கை அலோவ் பண்ணியிருப்பாங்களா..? எப்போப் பார்த்தாலும் அவங்களைப் பத்தி மட்டும்தானே நீங்க நினைக்கனும்..? அப்படித்தானே ஸ்க்ரு கொடுத்து வைச்சிருக்காங்க..?"

ரகுநந்தன் கேட்ட கேள்வியில் ஆடிப் போனார் தசரதன்.. அவன் தந்தையின் முகம் பார்த்து அப்படியெல்லாம் பேசுகிறவன் அல்ல.. சுதர்சனம்தான் தங்கையை தசரதனுக்குக் கட்டிக் கொடுத்து விட்ட கோராமைக்காக அவருடன் மல்லுக்கு நின்று இந்தக் கேள்விகளைக் கேட்பார்.. முதன் முறையாக மகன் கேட்கிறான்..

பட்டுப் புடவையின் முந்தானையில் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட சுமித்ராவைப் பார்த்தார்.. அதீத அழகுடன் இருந்தாள்.. வாய்பேசாத சாந்தமான அழகு.. குத்து விளக்கின் சுடர்தரும் அமைதியுடன் கூடிய அழகு.. அந்த அழகில் ஆகர்ஷிக்கப்பட்டுத் தானே அவளைப் பெண் கேட்டு மணந்து கொண்டார்.. ஆசைப் பட்டு மணந்த மனைவிக்கு அவர் நியாயம் செய்தாரா..?

மனைவியின் துயரத்தில் மனம் கரைந்தார் தசரதன். அவள் பெற்ற பிள்ளையின் திருமணத்தை அவள் பார்க்க முடியாமல் போனதற்கு யார் காரணம்..? அவர்தானே..

"காதலிக்கிறதினாலே குடும்ப கௌரவமும், மானமும் காற்றில் பறந்து விடுமா..? மனதுக்குப் பிடித்தவளைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு நீங்க ஆசைப்படலாம்.. அதுவே நான் ஆசைப்பட்டாக் குற்றமாப்பா..? அம்மா மேல ஆசைப்பட்டு நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்டதை மாமா என்னிடம் கதை கதையாய் சொல்லியிருக்கார்.." ரகுநந்தன் சிக்சர் அடித்தான்..

'மாப்புள்ள பாயிண்ட், பாயிண்ட்டா போட்டுத் தாக்கறானே.. என் டிரெயினிங் வீண் போகலை..' சுதர்சனம் பெருமைப் பட்டுப் போனார்..

"டேய்.." வெட்கச் சிரிப்புடன் மகனை அதட்டினாள் சுமித்ரா.. அதை ஓரக்கண்ணால் தசரதன் ரசிப்பதைக் கண்ட அம்புஜம் வெகுண்டாள்..

"கிடக்கிறதையெல்லாம் விட்டுட்டுக் கிழவியைத்தூக்கி மனையில வைச்சுக்கிட்டு இருக்காதே ரகு.. உங்கம்மாவ ஒன்னும் என் அண்ணன் காதலிச்சுக் கல்யாணம் பண்ணலை.. உறவு மொறையில இருக்கிற பொண்ணுன்னு ஊடே இருக்கிற சொந்த பந்தம் கிட்டச் சொல்லி விட்டாரு.. கல்யாணம் முடிவாச்சு.. நீ எதுக்கும் எதுக்கும் இணை கூட்டற..? படிச்சு இளந்தாரியா வளந்து நிக்கிற இல்ல.. சர்க்கார் ஆபிசரா உத்தியோகம் வேற பாக்கிற.. சுயமா சம்பாதிக்கிற திமிர் உன்னைப் பேச வைக்குது.. சொந்தங்கள மறக்க வைக்குது.. என் அண்ணனையே கேள்வி கேக்குறயா..? இது யார் கொடுத்த தைரியம்..?"

அம்புஜம் ரகுநந்தனின் பின்னால் மறைந்திருந்த அஞ்சனலட்சுமியை உறுத்துப் பார்த்தாள்.. அவள் பயந்து போனவளாக ரகுநந்தனின் முதுகோடு முதுகாக ஒட்டிக் கொண்டாள்..

'ஆஹா..!'

ரகுநந்தன் கள் குடித்த வண்டானான்.. அந்த நொடியில் வந்த அந்த மயக்கம் அவனை எங்கெங்கோ கொண்டு போனது.. கிறங்கிப்போனான்..

"ஆமாம்.. என் பொண்டாட்டி கொடுத்த தைரியம்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?"

அஞ்சனாவைப் பெண்டாட்டி என்று சொல்லும்போது ஏன் அவன் நாக்கில் வெல்லக்கட்டியைத் தூள் துளாக்கிக் கொட்டி விட்டதைப் போல இனிக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை..

"பாத்தீங்களாண்ணே.." அம்புஜம் தசரதனைத் தூண்டிவிட, சுதர்சனம்..

"மாத்தி யோசிங்கண்ணின்னு சொன்னா, அண்ணி கேட்டிங்களாண்ணே.. பல்லவியை கொஞ்சமா மாத்தி பாத்தீங்களாண்ணேன்னு யோசிச்சிருக்காங்கடா ரகு.." என்று ஊடே விகடம் பேசினார்..

"உங்களுக்கு எல்லாமே ஏளனமாத்தான் இருக்கும் கொழுந்தனாரே.. உங்க காட்டில மழை பெய்யுதில்ல.."

"ஆமாங்கண்ணி.. குடை பிடிக்க தேவையே இல்லாத மழை.. சொட்டச் சொட்ட நனைஞ்சுக்கிட்டு இருக்கேன்னா பாருங்களேன்.."

"அம்புட்டு சந்தோசம்..?"

"ஆமாங்கண்ணி.. எம்புட்டு சந்தோசம்..!"

"இருக்காதா பின்னே..? இங்ஙன ஆடிக் காத்தில பறக்கிற அம்மியாப் பறந்துக்கிட்டு இருக்கிறது என் அண்ணனோட குடும்ப கௌரவம்..! உங்க மகன் உங்க சொல்பேச்சு கேட்டு அடங்கி ஒடுங்கி இருக்கானில்ல.. நீங்க சந்தோசம் கொண்டாடத்தான் செய்வீங்க.."

"ஊஹீம்.. அப்புடியெல்லாம் தப்புக் கணக்குப் போட்டுராதீங்க.. என் மகன் அடங்காமாறி.. நாளைக்கே ரதிமீனாவைக் கட்டக் கூடாதுன்னு நான் சொன்னேன்னு வையுங்க.. நீயும் வேண்டாம், உன் சொத்தும் வேண்டாம்ன்னு சொல்லிட்டு வீட்டை விட்டு வெளியில் போயி ரதிமீனாவுக்குத் தாலியைக் கட்டிருவான்.."

'நான் என்னத்தைச் சொல்றேன்.. இந்த ஆளு எங்கே வந்து நிக்கிறாரு..' அம்புஜத்தின் வயிற்றில் அமிலம் சுரந்தது..

சுதர்சனத்தின் மகனான கண்ணன் அப்படிப்பட்ட தாட்டியக்காரன்தான் என்பதில் அம்புஜத்திற்குள் அனல் பறந்தது..

"கேட்டிங்களாண்ணேன்னு சொன்னாலும் கேலிப் பேச்சு வருது.. பாத்தீங்களான்னு சொன்னாலும் பகடிப் பேச்சு

வருது.. உங்க கண்ணு முன்னாடியே அண்ணியோட அண்ணன் ஏளனமாப் பேசறாரு.. நீங்க தாட்டியமா இருக்கிறப்பவே எனக்கு இந்த கதியா அண்ணா..? பொண்ணக் கொடுத்து பொண்ண எடுத்துட்டா இந்த வீட்டில எனக்கு பிடிப்பு இருக்கும்.. எங்கண்ணனுக்கு தங்கச்சிங்கிற சொந்தம் உடையாம இருக்கும்ன்னு கனாக்கண்டேனே.. நான் கண்ட கனா பகல் கனாவாப் போச்சேண்ணே.. பொண்ணத்தான் கட்டிக் கொடுக்க முடியல.. அண்ணன் பொண்ணயாவது என் மகனுக்குக் கட்டி வைக்கலாம்ன்னு பாத்தா அதுக்கும் இடியா குறுக்க வந்து நிக்கிறாங்களே அண்ணே.." என்று உண்மையாகவே குமுற ஆரம்பித்து விட்டாள்..

தசரதன் மகன் கேட்ட கேள்வியில் அதிர்ந்து போயிருந்தார்.. சுமித்ராவின் மீது அவர் ஆசைப்பட்டுத் திருமணம் செய்து கொண்டது உண்மைதானே.. அம்புஜம் அதைத் தட்டி விட ஆனமட்டும் முயற்சி செய்தாளே.. சுமித்ரா வேண்டாமென்று சொன்னாளே.. அவர் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லையே.. அவருக்கு மட்டும் ஒரு நியாயம்.. அவருடைய பிள்ளைகளுக்கு வேறொரு நியாயமா..?

அவர் மட்டும் அம்புஜத்தின் மகளை ரகுநந்தனின் விருப்பத்துக்கு மாறாக அவன் தலையில் கட்டி வைக்க வேண்டும் என்று நிர்பந்தம் செய்திருக்கா விட்டால் ரகுநந்தனும் சென்னைக்கு ஓடியிருக்க மாட்டான்.. இப்படி வீட்டுக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொண்டு வந்து நின்றிருக்க மாட்டான்.. இப்போது அம்புஜம் அடுத்த பிள்ளையையும் துரத்தி விட அடிப் போடுகிறாள்..

மகளின் முகத்தைப் பார்த்தார்.. அம்புஜத்தின் பேச்சில் ரதிமீனாவின் முகம் வெளிறியிருந்தது.. சதானந்தனைப் பார்த்தார்.. அவன் தின்பதிலேயே குறியாக இருந்தான்.. கண்ணனோ கம்பீரமாக நின்றிருந்தான்..

வாய் நிறைய வடைகளைத் திணித்துக் கொண்டிருந்த சதானந்தனைப் பார்த்த ரதிமீனாவின் விழிகளில்

'இவனையா நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்..?' என்ற பயம் இருந்தது..

அவளருகில் நின்றிருந்த கண்ணன் அத்தை மகளைப் பார்வையில் அதட்டிக் கொண்டிருந்தான்.

"ஏய்ய்.. உன்னைத் தூக்கிட்டுப் போயித் தாலியைக்கட்ட மாமன் மகனிருக்கேன்.. நீயேண்டி இந்த முழி முழிக்கிற..?" என்று தாழ்ந்த குரலில் வெடுவெடுத்தான்..

"அதுக்கு விட்டுட்டுத்தான் நான் வேற வேலயப் பார்ப்பேணாக்கும்..? அண்ணன்காரன் பக்கத்திலதான் இருக்கேண்டா மாப்பிள்ள..?" ரகுநந்தன் முணுமுணுத்தான்..

"முதல்ல நீ உன் பஞ்சாயத்தைப் பாருமச்சான்.."

"அடுத்து உன் பஞ்சாயத்துதான் மாப்பிள்ள.."

"பார்த்துக்கிட்டு நிக்காம வேற என்ன செய்வியாம்..?"

"நாளு நட்சத்திரம் பார்த்து ஊரைக் கூட்டி என் தங்கச்சிய உனக்குக் கட்டிக் கொடுப்பேண்டா.."

"அஃது.."

மாமன்மகனும் அத்தை மகனும் கையடித்துக் கொள்ள..

"இந்த வித்தாராமெல்லாம் என் புள்ளைக்குச் சுட்டுப் போட்டாலும் வராது.." என்று விரல்களை நெறித்தாள் அம்புஜம்.

"வீடான வீட்டில இது என்ன அண்ணி..?" சுமித்ரா தாங்க முடியாமல் கேட்டு விட்டாள்..

"நீ ஏன் அண்ணி பேசமாட்ட.. நீ நினைச்சதெல்லாம் நடக்குதில்ல.. உன் மகனையே நினைச்சுக்கிட்டு இருந்த என் பொண்ணை கைகழுவிட்டு எங்கிருந்தோ ஒருத்தியைக் கொண்டு வந்து மருமகன்னு வீட்டுக்குள்ள நிப்பாட்டிட்ட.. இப்ப அண்ணன் மகனுக்குப் பொண்ணைக் கொடுத்துப்புடலாம்ன்னு அடிக்கல்ல நாட்டற.. ஒருநாளும் அது நடக்காது அண்ணி.."

"அம்புஜம்.." தசரதன் அதட்டினார்..

வீடே அவரை இமைகொட்டி அதிசயமாகப் பார்த்தது..

"சும்மா அச்சாணியமாப் பேசிக்கிட்டே இருக்காதே.. ரகுநந்தன் செஞ்சது தப்புத்தான்.. அதுக்குத்தான் அவனைக் கண்டிச்சுக்கிட்டு இருக்கேன்.. அதுக்காக அவன் செஞ்சுக்கிட்டு வந்திருக்கிற கல்யாணத்தை ஏத்துக்காம இருக்க முடியுமா..?"

"என்னது..?" அம்புஜத்தால் தாங்கவே முடியவில்லை..

இவ்வளவு எளிதாக மகனின் திருமணத்தை தசரதன் அங்கீகரித்து விட்டதில் அவளுக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது.. அத்துடன் தசரதன் நிறுத்தினாரா..? அடுத்த குண்டையும் தூக்கிப் போட்டார்..

"ரதியோட கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்..? இன்னார்க்கு இன்னார்ன்னு இறைவன் எழுதி வைச்சிருக்கான் அம்புஜம்.. ரதிக்கு சதானந்தன்னு எழுதி வைக்கலையே.. நாம என்ன செய்ய முடியும்..?"

21

"குக்கூ..."

குயிலின் கூவலில் விழித்துக் கொண்டாள் அஞ்சனா.. முதலில் அந்த இனிமையான இசை , சுவர் கடிகாரத்திலிருந்து வருகிறதோ என்று சுவரைப் பார்த்தாள்.. சுவரில் எந்தக் கடிகாரமும் மாட்டப்பட்டிருக்கவில்லை..

'எங்கேயிருந்து இந்தச் சத்தம் வருகிறது..?' யோசித்தவளின் காதுகளில்..

"கொர்.. கொர்.." என்ற குறட்டை சப்தமும் சேர்ந்து ஒலித்தது..

புரண்டு படுத்துக் கீழே பார்த்தாள்.. தரையில் படுத்திருந்த ரகுநந்தன்தான் அப்படிப்பட்ட அற்புத ஒலியுடன் கூடிய குறட்டையை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான்.

'எப்படித் தூங்குகிறான் பார்..' சன்னப் புன்னகையுடன் அவளுக்குள் சன்னமான பொறாமையும் சேர்ந்து வந்தது..

கட்டில் மெத்தையில்லாமல் வெறும் தரையில் விரிப்பை மட்டும் விரித்துத் தலையணையைப் போட்டுத் தூங்கும் மனிதனால் இப்படி அயர்ந்து சுகமாக தூக்கத்தை ரசித்து அனுபவித்து தூங்க முடியுமா..?

"முடியுமே.."

திருவாரூரில் இதே கேள்வியை அவள் கேட்டபோது புன்னகையுடன் சொன்னான் ரகுநந்தன்..

"வெறும் தரையில் படுத்து உறங்கும் சுகமே தனி.. ஓர்முறை படுத்துத் தூங்கிப் பாருங்க.. உங்களுக்கும் அது தெரியும்.. நான் அடிக்கடி வெறும் தரையில் படுத்து விடுவேன்.. உடம்பில் எவ்வளவு வலி இருந்தாலும் ஓடிப் போய் விடும் தெரியுமா..?"

"இஸ் இட்..?"

ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டாள் அஞ்சனா.. அவன் விவரிக்கும் அனுபவங்கள் அத்தனையும் நூதனமானவையாக இருந்தன.. கொட்டும் மழையில் நனைந்தபடி ஐஸ்கிரிம் சாப்பிட்டதுண்டா என்று கேட்டான்.. மார்கழிப்பனியின் அதிகாலையில் தலைக்குக் குளித்து விட்டு கிருஷ்ணன் கோவிலின் பஜனைக் கூட்டத்தில் சேர்ந்து பாடியபடி நகர்வலம் வந்ததுண்டா என்று கேட்டான்.. மிளகாயின் காரத்துடன் இட்லியை விழுங்கி விட்டு சூடான காப்பியை குடித்ததுண்டா என்று கேட்டான்.. இரவின் அமைதியில் மொட்டை மாடியில் ரேடியோவில் இரவின் மடியில் என்று ஒலிபரப்பாகும் பழைய பாடல்களைக் கேட்டதுண்டா என்று கேட்டான்.

இப்படி அவன் கேட்ட கேள்விகளில் எதற்குமே ஆமாம் என்று பதிலளிக்க முடியாமல் இல்லை என்று இடம் வலமாகத் தலையை ஆட்டிய அஞ்சனாவின் மனதில் இப்படி ஓர் வாழ்வைத் தான் வாழ்ந்ததில்லையே என்ற ஏக்கம் வந்தது..

"குக்கூக்கு.."

மறுபடியும் குயில் பாட்டு.. அஞ்சனா ஆர்வத்துடன் கவனித்தாள்.. திறந்திருந்த ஜன்னலின் அந்தப்பக்கம் அசைந்தாடிய மரக்கிளைகளில் இருந்துதான் குயில் பாட்டு கேட்டது.. அடர்ந்த மரக்கிளைகளின் பசுமையால் இது திருவாரூர் வீடு இல்லை.. சுதர்சனத்தின் ஊரில் இருக்கும் தோப்புவீடு என்ற நினைவே அஞ்சனாவுக்கு வந்தது.. இரவில் ஜன்னல்கதவுகளைத் திறந்து விட்டு ஏஸியை அணைத்திருந்தான் ரகுநந்தன்..

"செயற்கைக் குளிரில் தூங்காமல் இயற்கைக் குளிரில் தூங்கிப் பாருங்க.. ஃபெண்டாஸ்டிக்கா இருக்கும்.."

அவன் சொன்னதைப் போல்தான் இருந்தது.. ஜன்னல் வழி வந்த சிலுசிலுவென்ற குளிர்காற்றில் அஞ்சனா ஆழ்ந்து தூங்கி விட்டாள்..

'இவன் சொல்கிற எல்லாமே நல்லாத்தான் இருக்கு..'

அஞ்சனா கட்டிலை விட்டு இறங்கி ஜன்னலோரம் சென்றாள்.. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தென்னந்தோப்பு.. அதனூடே மா, கொய்யா, சப்போட்டா, மாதுளம் என்று பலவகையான பழ மரங்கள்.. தென்னந்தோப்பைச் சுற்றியிருக்கும் வயல்கள்..

'பார்க்கவே ரம்யமா இருக்கு..'

ஜன்னல் கம்பிகளில் கன்னம் பதித்து இயற்கையின் பசுமையை ரசித்து அனுபவித்தாள் அஞ்சனா.. மனம் லேசாக இருந்தது..

தசரதன் மகனை மன்னித்து அவனது திருமணத்தை ஏற்றுக் கொண்டதுடன் இல்லாமல் ரதிமீனாவையும் சதானந்தனுக்குத் திருமணம் செய்து கொடுக்க

மறுத்துவிட்டார் என்றதும் அம்புஜம் வீட்டைப் போர்க்களமாக்கி விட்டாள்..

"அது மனசும் ஆறனுமில்ல..? நீங்க ரகுவையும் மருமகளையும் விருந்துக்கு அழைத்துக்கிட்டுப் போயிருங்க மச்சான்.. பாவம் அந்தப் பொண்ணும் பார்க்க சாதுவா இருக்கு.. அம்புஜம் போடற சத்தத்தில பயந்து முழிக்குது.. ஒருவாரம் பத்துநாளைக்கு உங்க ஊரில இருக்கட்டும்.. அதுக்குப் பின்னாலே ஆக வேண்டியதை பேசிக்கலாம்.." என்று தசரதனே சுதர்சனத்திடம் சொல்லி விட்டார்.

'ஆஹா..' என்று மகிழ்ந்து போனார் சுதர்சனம்..

ரகுநந்தனின் பிரச்னையில் யாரோ ஒரு பெண் சம்பந்தமேயில்லாமல் மாட்டிக் கொண்டு விழிக்கிறாளே என்ற பரிதாபம் அவருக்கு. விருந்துக்கு அழைத்துக் கொண்டு போவதைப் போல திருவாரூர் வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அந்தப் பெண்ணின் ஊரைப் பார்த்து அனுப்பி வைக்க வழி கிடைத்து விடும்.. அஞ்சனா ரகுவின் மனைவியல்ல என்ற உண்மை துளசிக்கும், சுதர்சனத்தின் மகன்களுக்கும் மட்டுமே தெரியும்.. சுமித்ராவுக்கும் ரதிமீனாவுக்கும் தெரியாது..

"ஊருக்குள் இருக்கிற பங்களாவில நீங்க வந்து தங்கினா வீட்டுக்கு வந்து போகிற சொந்த பந்தங்களுக்குத் தெரிஞ்சு போகும் மாப்புள்ள.. தோப்பு வீட்டுக்குப் போயிரலாம்.."

சுதர்சனத்தின் யோசனை ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.. சுதர்சனத்தின் தோப்பு வீடு என்பது சுற்றுலாத்தலம் போல.. தசரதனின் குடும்பமும், சுதர்சனத்தின் குடும்பமும் சேர்ந்து அங்கே போய் தங்கியிருப்பதுண்டு.. பெரிய தென்னந்தோப்பு.. அதைச் சுற்றிலும் வயல்கள்.. நடுவே போடப்பட்டிருந்த தார் ரோடு தோப்பின் மையத்திலிருக்கும் பிரம்மாண்டமான வீட்டின் முன்னே போய் நிற்கும்.. வீட்டின் பக்கவாட்டில் மோட்டார் ரூம்.. அதிலிருந்து அருவியைப் போலக் கொட்டும் தண்ணீர் அகன்ட பெரிய நீச்சல் குளம் போல இருக்கும் சிமிண்டு தொட்டியில் விழுந்து நிரம்பி, தொட்டியின் ஓரமாக

இருக்கும் சிமிண்டு வாய்க்காலில் பாய்ந்து ஓடி தோப்பிலும், வயலிலும் பாயும்..

வீட்டைப் பார்த்ததும் அஞ்சனா..

"வாவ்..!" என்றாள்..

"ஃபார்ம் ஹவுஸ்.."

"உனக்கு இது ஃபார்ம் ஹவுஸ்.. எங்களுக்குத் தோப்பு வீடு.." சுதர்சனம் சிரித்தார்..

அஞ்சனலட்சுமி முதல் இரண்டு நாள்களும் விருந்துச் சாப்பாட்டை ருசித்துச் சாப்பிட்டாள்.. மோட்டார் தண்ணீர் விழுந்து பாயும் சிமிண்டு தொட்டியில் குதித்து நீச்சலடித்தாள்.. அருவியில் தலை காட்டுவதைப் போல மோட்டார் தண்ணீரில் தலையைக் காட்டினாள்.. தோப்பைச் சுற்றி வந்தாள்.. இளநீர் குடித்தாள்.. மூன்றாம் நாளில் அவளுக்குப் போன் வந்தது.. மறைந்து சென்று பேசினாள்..

மாடி பால்கனியில் நின்றிருந்த ரகுநந்தனின் முகம் மாறியது.. அவள் எங்கு சென்றாலும் அவன் பார்வை அவளைத் தொடரும்.. யாருக்கும் தெரியாமல் அவள் மறைந்து நின்று பேசுவதைக் கவனித்தான்.. பேசி முடித்தவளின் முகத்தில் பதட்டம் கவிந்திருந்தது.. மாடியறைக்கு வந்தவள் யோசனையாக அமர்ந்து விட்டாள்.. ரகுநந்தன் என்ன, ஏது என்று விசாரிக்கவில்லை.. சுதர்சனத்திடம் மட்டும் விவரத்தை பகிர்ந்து கொண்டான்..

"அவ ஏதோ பிரச்னையில இருக்கான்னு தோனுது மாமா.."

"அதைப் பத்தி நமக்கென்ன மாப்பிள்ள..? அந்தப் பொண்ணு யாரோ எவரோ..?"

"அப்படி என்னால நினைக்க முடியலையே மாமா.." ரகுநந்தனின் கண்கள் கலங்கி விட்டன.. சுதர்சனம் அவன் மனதை புரிந்தவராக மௌனித்தார்..

"இந்த ஒருவாரமா அவளை என் பொண்டாட்டியா நினைச்சு வாழ்ந்துக்கிட்டு இருக்கேன் மாமா.. அவ பிரிஞ்சு போனாலும் நல்லபடியா வாழனும்.. அவ பிரச்னை

என்னன்னு கேட்டுச் சரிபண்ணி அனுப்பி வைக்கனும் மாமா."

ரகுநந்தன் உறுதியாகச் சொல்லி விட்டான்.. அன்று மாலையில் அஞ்சனாவைத் தேடி இரண்டு நபர்கள் வந்து நின்றார்கள்..

22

இரவின் இருளைக் கிழித்துக் கொண்டு ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியது கார்.. முன்சீட்டில் அமர்ந்து முரட்டு மீசையைத் திருகியபடி கர்ஜித்தார் சுதர்சனம்..

"ஆவ, பாவத்துக்கு அஞ்சாத பயலுக.. எம்புட்டு விசம் மனசிலிருந்தா இப்படியாப்பட்டக் காரியத்தைப் பண்ணத் துணிஞ்சிருப்பானுக.. வயசான மனுசரை மயக்கமருந்து கொடுத்துப் படுக்க வைச்சுட்டு, அவரைக் காரணம் காட்டி உன்னைக் கல்யாணம் பண்ணனும்.. இல்லேன்னா போட்டுத் தள்ளனும்னு திட்டம் போட்டிருக்கானுகளே.. இருக்க இடம் கொடுத்து, பாக்க வேலையும் கொடுத்து ஆதரிச்ச குடும்பத்த அழிக்கப் பாக்குறான்களா..?"

அஞ்சனலட்சுமி துயரம் தாங்காமல் விம்மினாள்.. காரை ஓட்டிக் கொண்டிருந்த கண்ணன் திரும்பிப் பார்த்தான்.. அஞ்சனாவின் அருகில் உட்கார்ந்திருந்த ரகுநந்தன் அவளை அனைத்துக்கொண்டான்..

"கலங்க வேணாம் அஞ்சனா.. உங்களுக்கு நானிருக்கேன்.. நமக்குத் துணையா மாமா இருக்கார்.. ஒரு கை பார்த்துரலாம்.."

அஞ்சனலட்சுமிக்கு யானை பலம் வந்ததைப் போல இருந்தது.. மாலையில் அவளைப் பார்க்க வந்த ஆகாஷீம், சுனிலும் அவளிடம் பெங்களூரில் நடக்கும் நிகழ்வுகளைக் கூறினார்கள்.. வீட்டிலிருந்து தப்பித்த அஞ்சனா உடனடியாக செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்தாள்.. வேறு

ஒரு போன், சிம் என்று மாறினாள்.. அலுவலகத்தில் சாம்பசிவத்தின் நம்பிக்கைக்கு உரியவர்களான ஆகாஷிடமும், சுனிலிடமும் பேச ஆரம்பித்தாள்.

"இப்போதைக்கு நான் தலைமறைவாக இருப்பதுதான் ஷேஃப்.. தாத்தாவுக்கு எதுவும் ஆகாம இருக்கனும்னா நான் அவங்க கையில் சிக்கக் கூடாது.. எனக்கென்னவோ ட்ரீட்மெண்ட் கொடுக்கிற டாக்டரின் மீதும் நர்ஸின் மீதும் டவுட்டா இருக்குது.. வாட்ச் பண்ணி நியுஸைச் சொல்லுங்க.."

அதன்படி அந்த இருவரும் பத்துநாள்கள் தொடர்ந்து கண்காணித்ததில் சேகரித்திருந்த விவரங்களை அஞ்சனாவிடம் போனில் சொன்னார்கள்.. அதைக் கேட்ட அஞ்சனா பதட்டம் கொண்டாள்..

"யு ஆர் கரெக்ட் மேம்.. எம்.டி சாருக்கு கோமா இல்லை.. மயக்க மருந்தைக் கொடுத்திருக்காங்க.. ஹி இஸ் ஆல்ரைட்.."

"வாட்..? அகாஷ்.. நீங்க என்ன சொல்கிறீங்க..?"

"யெஸ் மேம்.. இதுக்கு டாக்டர் உடந்தை.. அவருக்கு சொத்தில் ஒரு ஷேர் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களாம்.. நர்ஸ் அவர்களின் ஆள்.. அவங்க பிளான் பண்ணினது நடக்கலை.. சொத்தெல்லாம் உங்க பெயரில் இருக்கு.. அதில் ஆத்திரமா இருக்காங்க... எம்.டி சாரை நாங்க பார்க்கப் போயிருந்தப்ப அவர் அரை மயக்கத்தில் இருந்தார்.. அவங்க பார்க்காதப்ப எங்களுக்கு கண்ஜாடை காட்டினார்.. சுனில் உடனே மேமை நான் மும்பையில் பார்த்தேன்னு சொன்னபடி ஹாலுக்குப் போயிட்டான்.. எல்லோரும் மேட்டர் என்னன்னு கேட்க அவன் பின்னால் போயிட்டாங்க.. நான் சாரின் காதருகே குனிந்து அவர் சொன்னதைக் கேட்டுட்டேன்.."

"நீங்க உடனே கிளம்பி திருவாரூருக்குப் பக்கத்திலிருக்கும் வில்லேஜீக்கு வாங்க ஆகாஷ்.." அஞ்சனா தான் இருக்கும் இடத்தைச் சொன்னாள்..

ஆனாலும் அவள் மனதில் பயம்.. ஆகாஷும், சுனிலும் நம்பிக்கைக்கு உரியவர்கள்தான் என்றாலும் பணம் எவரையும் மாற்றும் சக்தி படைத்தது.

'இவங்களும் விலை போயிருக்க மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்.?'

பதட்டமும் குழப்பமும் ஒன்று சேரத் தவித்தவளிடம் என்ன விவரம் என்று கேட்க முடியாமல் ரகுநந்தன் தவித்தான்.. அஞ்சனாவைச் சந்திக்க வந்த ஆகாஷும், சுனிலும் உடனடியாக அவள் அவர்களுடன் பெங்களூருக்கு வர வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.. அஞ்சனாவின் மூளையில் அலாரம் அடித்தது.

"நீங்க வந்தாத்தான் எம்.டி சாரைக் காப்பாற்ற முடியும் மேடம்.. இல்லேன்னா சாரை விச ஊசி போட்டுக் கொன்று விடுவாங்க.." ஆகாஷ் பயமுறுத்தினான்..

"யெஸ்யெஸ்யெஸ்.." சுனில் கூடத் தாளம் போட்டான்..

அஞ்சனா சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள்.. அவர்களைப் பார்த்து..

"ஓகே.. நீங்க கிளம்புங்க.. நான் என் ஹஸ்பெண்டுடன் உங்க காரை ஃபாலோ பண்றேன்.." என்று சொல்லி விட்டாள்..

"ஹஸ்பெண்டா..? யார் அது..?" ஆகாஷ் வாய் பிளந்தான்..

"நான்தான்.." என்றபடி மரத்தின் பின்னாலிருந்து வெளியே வந்தான் ரகுநந்தன்..

'இவன் இங்கேதான் இருந்தானா..?'

பற்றுதல் தேடும் கொடியாக அலைபாயும் மனதுடன் அவனைப் பார்த்தாள் அஞ்சனா..

இமைகளை மூடித் திறந்து 'ஆம்' என உணர்த்தினான் ரகுநந்தன்.. ஆகாஷும் சுனிலும் அஞ்சனாவுக்குத் திருமணமாகி விட்ட செய்தியை பெங்களூருக்குச் சொல்ல செல்போனை காதில் கொடுத்து ஓடிவிட தனிமையில்

நின்ற அஞ்சனா கேவியபடி ரகுநந்தனின் மார்பில் சாய்ந்தாள்..

"தப்பிக்கிறதுக்காக நான் அப்படிச் சொல்லலை ரகு.. உண்மையாகவே நீங்க என் ஹஸ்பெண்டுன்னே தோணுது.. இந்த டென்டேஸீம் நான் வாழ்ந்த வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மனநிறைவும் சந்தோசமும் கடைசிவரை நிலைக்கனும்.. ஐ லவ் யு ரகு.. என் காதலை இக்னோர் பண்ணிராதீங்க ரகு.. எனக்கு உங்க காதல் வேண்டும்.."

"நிராகரிப்பதா..? உன்னையா..? தேரில் வந்திருக்கும் திருமகள் நீ அஞ்சனா.. என்னை ரட்சிக்க வந்தவள்.. ஐ லவ் யு ஸோ மச்.."

இருவரும் சுதர்சனத்தைத் தேடிச் சென்றார்கள்.. அஞ்சனாவின் கதையைக் கேட்ட சுதர்சனம் மீசையை முறுக்கியபடி..

"கிளம்புடா மாப்புள்ள.. அவனுகள ரெண்டில ஒன்னு பார்த்துப்புடலாம்.. வயசான மனுசரை மயக்கத்தில் படுக்க வைச்சுட்டு, வயசுப் பொண்ணக் கொல்லத் துணிஞ்ச பேடிப்பயலுகள கிழித்துத் தோரணம் கட்டித் தொங்க விடனும்டா.." என்று அவர்களுடன் கிளம்பி விட்டார்..

"நாங்களும் வர்றோம்ப்பா.." கோகுலும் கண்ணனும் புஜம் தட்டினார்கள்.. சுதர்சனம் யோசித்தார்..

"அம்மா தனியா இருப்பா.. அதனால கோகுல், நீ அம்மாவுடன் ஊருக்குள் இருக்கும் நம் பங்களாவுக்குப் போய்விடு.. தோப்பு வீட்டில் தனியா இருக்க வேண்டாம்.. கண்ணா.. நீ எங்களுடன் வா.. ஆனால் வீட்டுக்கு வெளியில் காரில் இரு.. நாங்க சொல்லும்போது வந்தால் போதும்.."

சுதர்சனத்தின் திட்டப்படி கோகுலும் துளசியும் ஊருக்குள் இருக்கும் பங்களாவுக்குப் போய்விட, மற்ற நால்வரும் காரை எடுத்துக்கொண்டுக் பெங்களூருக்குக் கிளம்பினார்கள்.. திருட்டு முழி முழித்துக் கொண்டே ஆகாஷ்..

"நீங்க முன்னால் போங்க மேம்.. நாங்க உங்க காரை ஃபாலோ பண்றோம்.." என்றான்..

"என் மகன் காரை ஓட்டினா சோழாவரம் கார் ரேசில் கலந்துக்கிறதைப் போல படுவேகமா ஓட்டுவான்.. நீ ஃபாலோ பண்ணவே முடியாது.. எப்படி வசதி..?" கிண்டலாகக் கேட்டார் சுதர்சனம்.. வாயை மூடிக்கொண்டு ஓடிப் போனான் ஆகாஷ்..

"நன்றி கெட்டவன்க.." கண்ணன் பல்லைக் கடித்தான்..

அஞ்சனா சாம்பசிவத்திற்கு வேண்டிய போலிஸ் உயர் அதிகாரிக்குப் போன் போட்டு விவரத்தைச் சொன்னாள்.. அடுத்ததாக அவளது நம்பிக்கைக்கு உரிய மருத்துவமனைக்குப் போன் போனது.. ரகுநந்தன் பெங்களூரில் இருந்த அவனது நண்பர்களை உதவிக்கு அழைத்தான்.. சுதர்சனம் அவரது பங்குக்கு ஓசூரில் இருந்த உறவினர் பட்டாளத்தை டாடா சுமோக்களில் கிளம்பி பெங்களூருக்கு வந்து விடச் சொன்னார்..

ஆகாஷின் காரைப் பின்தொடர்ந்த சுதர்சனத்தின் கார் பெங்களூரைத் தொட்டபோது அவருக்காக பதினைந்து டாட்டா சுமோக்களில் ஓசுர் உறவினர் படை காத்திருந்தது.. ஆறு கார்களில் ரகுநந்தனின் நண்பர் பட்டாளம் வரவேற்றது.. அனைத்து வாகனங்களும் ஒன்று கூடிப் பின் தொடர்ந்ததில் ஆகாஷீம் சுனிலும் அலறியடித்துக் கொண்டு அஞ்சனாவின் பங்களாவுக்குப் போகாமல் பெங்களூரின் வீதிகளில் தொலைந்து போனார்கள்..

"ஓடிப் போயிட்டானுக.. பேடிப் பயலுக.." சினந்தார் சுதர்சனம்..

"அதான் நம்ம சொந்த பந்தம் வந்தாச்சேப்பா.. நான் எதுக்கு வெளியில் நிற்கனும்.. கூட வர்றேன்.." கண்ணன் முஷ்டியை மடக்கினான்..

"அதுவும் சரிதான்.." சதர்சனம் தலையை அசைத்தார்..

வரிசை கட்டி வந்த வாகனங்களைக் கண்ட செக்யூரிட்டி அரண்டு போனான்.. அஞ்சனாவின் கையசைவில்

காம்பவுண்டு கேட்டுகள் திறந்தன.. பெரிய மாளிகை போன்ற பங்களாவை பிரமிப்புடன் பார்த்த சுதர்சனம்..

"இம்புட்டுப் பெரிய பணக்காரப் பொண்ணாம்மா நீ.. எங்க வீட்டில நடந்த கூத்துக்குத் தலையைத் தலையை ஆட்டிக்கிட்டு கூட இருந்தியே.." என்று ஆச்சரியப்பட்டுப் போனார்..

திமுதிமுவென பங்களாவுக்குள் நுழைந்த ஆள்படையைப் பார்த்த நடராஜனும் நாராயணனும் திகிலடித்துப் போனவர்களாக தம்தம் மகன்களை அழைத்தார்கள்..

"டேய் நித்தியானந்தா" நடராஜன் கத்த..

"பிரசன்னா.." என்று அபயக்குரல் கொடுத்தார் நாராயணன்.

அவர்கள் பெற்றிருந்த அருந்தவப் புதல்வர்கள் வந்து விட்டேன் தந்தையே என்று களத்தில் குதிக்காமல் அவரவர் அறைகளில் பதுங்கியபடி செல்போனில் குறுஞ்செய்திகளை அனுப்பினார்கள்..

"வந்திருக்கிறது படைப்பா.. முரட்டு மீசையும் வாட்ட சாட்டமான உடம்புமா இருக்கிறானுக.. நம்மிடம் இருக்கும் ஆள்களால் இவங்களை எதிர்த்து ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது.. வெளியிலிருந்து ஆள்களை வரச் சொல்லியிருக்-கிறோம்.. அதுவரை வாலை ஆட்டாம அமைதிகாத்து ஏதேனும் ஓர் அறையில் ஒளிந்து கொள்ளவும்.."

செய்தியைப் பார்த்து தலையில் அடித்துக்கொண்ட நடராஜனும் நாராயணனும் பதுங்குவதற்குள் வந்திருந்த கூட்டம் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது.

## 23

"தாத்தா.."

சாம்பசிவத்தின் கைபிடித்துத் தேம்பினாள் அஞ்சனா.. அரைமயக்கத்தில் கண்விழித்த சாம்பசிவத்தின் விழிகளில் பேத்தியைக் கண்டதும் ஒளிர்வு வந்தது.. அஞ்சனா போன் பண்ணியிருந்ததினால் அவளது நம்பிக்கைக்கு உரிய மருத்துவமனையிலிருந்து டாக்டர்கள் ஆம்புலன்ஸீடன் வந்திருந்தார்கள்.

"என்னங்க நடராஜன்.. ஆம்புலன்ஸ் வந்திருக்கு.. இதைக் கவனிக்கலையே.."

"ஒட்டு மொத்தமா டாடா சுமோ, கார்ன்னு உள்ளே வந்ததிலே ஆம்புலன்ஸைத் தனியாக் கவனிக்க முடியுமா மாப்பிள்ள..?"

"இப்ப என்ன செய்யலாம்..?"

"கிழவனை இங்கிருந்து நகரவிடக் கூடாது.. நகர விட்டா நம்ம குட்டு உடைஞ்சிரும்.. மாட்டிக்குவோம்.."

"ஆமாமாம்.."

அவர்கள் இருவரும் சாம்பசிவத்தை அணைத்துப் பிடிப்பதைப் போல நெருங்கி வந்தார்கள்.. ரகு கைகளை விரித்து அவர்களைத் தடுத்து நிறுத்தினான்..

"பெரியவர் பக்கத்தில வந்தீங்க.. நடக்கிறதே வேற.."

"அதைச் சொல்ல நீ யாருடா..?"

"அஞ்சனாவின் புருசன்.."

அந்த ஒரு வார்த்தை அவர்களின் அனைத்து அதிகாரங்களையும் பிடுங்கிப் போட்டது.. சாம்பசிவத்தைப் பரிசோதித்த டாக்டர்கள் அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப் பட்டிருப்பதை உறுதி செய்தார்கள்.

"இம்மீடியட்டா இவரை ஹஸ்பிடலில் அட்மிட் பண்ணியாகனும்.. ஓவர் டோஸ் கொடுத்திருக்காங்க.. ஏஜ்டு பெர்சன்.. இவரோட ஹெல்த் கண்டிசன் மோசமா இருக்கு.."

"தாத்தா.."

நடராஜனின் கண் முன்னாடியே அவரின் பெரியப்பா பாதுகாப்பாக ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்டார்.. வந்திருந்த ஆள் படையைப் பார்த்த நடராஜனின் அடியாள்கள் ஓடி விட்டார்கள்.. அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கக் கூடிய நடராஜன், சாந்தா குடும்பத்தினரை போலிஸ் கைது செய்தது..

"அஞ்சனா.. என்னதான் இருந்தாலும் நான் உன் சித்தப்பா.."

"நான் உன் அத்தைம்மா.."

"எங்களை போலிஸில் பிடித்துக் கொடுப்பது சரியில்லை.."

"எதுவா இருந்தாலும் நமக்குள் பேசித் தீர்த்துக்கலாம்.."

நடராஜனும் சாந்தாவும் அஞ்சனாவிடம் கெஞ்சினார்கள்.. அஞ்சனா உறுதியுடன் மறுத்து விட்டாள்..

"எனக்கு நீங்க சித்தப்பா, அத்தைதான்.. தாத்தாவுக்கு யார்..? சொந்தத் தம்பியின் பிள்ளைகள்.. அவரைக் கொல்லத் துணிஞ்சீங்களே.. என்னை வீட்டை விட்டு ஓட வைத்தீங்களே.. உங்க முகத்தைப் பார்த்தால் கூடப் பாவம்.. வீட்டை விட்டு வெளியே போங்க.."

அவர்கள் சென்றவுடன் அஞ்சனா காவல்துறையின் உயர் அதிகாரிக்குப் போன் செய்தாள்..

"என் சித்தப்பா மகள் நிர்மளாவும், அத்தையின் மகள் பிரமிளாவும் நல்லவங்க அங்கிள்.. வயதுப் பெண்கள்.. அவர்கள்மீது கேஸ் பதிய வேண்டாம்.. மற்றவர்கள் மீதும் நான் புகார் கொடுக்கப் போவதில்லை.. ஆனால், அவர்கள் எங்கள் வீட்டுப்பக்கமோ, கம்பெனிகள் பக்கமோ வரக் வடாது.. நெல்லூரில் இருக்கும் வீடுகளையும் சொத்துக்களையும் தாத்தாவிடம் சொல்லி அவர்கள் பெயருக்கு எழுதி வைக்கச் சொல்கிறேன். அங்கே போய் விடச் சொல்லுங்க.."

"அவங்களுக்கான பனிஷ்மெண்ட் கிடைக்க வேண்டாமா அஞ்சனா..?"

"வேண்டாம் அங்கிள்.. தாத்தாவுக்குத் தம்பி பிள்ளைகளாப் போயிட்டாங்க.. பனிஷ் பண்ண மனம் வரலை.."

"ஓகேம்மா.. பட்.. அவங்களிடம் எழுதி வாங்கிக் கொண்டுதான் ரிலிஸ் பண்ணுவேன்.. அதற்கு முன்னால் லாடம் கட்டி இனி சாம்பசிவத்தின் பக்கமே திரும்பக்கூடாதுன்னு புத்தியில் உறைக்க வைத்துத்தான் வெளியே விடுவேன்.."

"ஆகட்டும் அங்கிள்.. தேங்க்ஸ்.."

"எதுக்கும்மா தேங்க்ஸ் சொல்கிற..? உன் தாத்தாவும் என் அப்பாவும் உயிர் சிநேகிதர்கள்.. உன் தாத்தா எனக்கு அப்பாவைப் போல.. நானிருந்தும் அவரையும் உன்னையும் கொல்லப் பார்த்திருக்காங்களே.."

"கூடவே இருந்த எனக்கு இவங்க துரோகத்தைக் கண்டு பிடிக்க முடியலையே அங்கிள்.. நான் சந்தேகப்பட்டு உங்களிடம் சொல்லியிருந்தா நீங்க உடனே ஆக்சன் எடுத்திருப்பீங்களே.."

"உன் தாத்தா அவங்களுக்கு ஓவர் ரைட்ஸ் கொடுத்ததேயில்லை.. டிஸ்டன்ஸ் கீப்அப் பண்ணினார்.."

"யெஸ் அங்கிள்.. எனக்குக் கூட என்னமோ போல இருக்கும்.. பேச்சுக்குக்கூட நீங்க என் பிள்ளைகள்ன்னு அத்தை, சித்தப்பாவிடம் தாத்தா சொன்னதில்லை.. இப்போதுதான் புரிகிறது.. அவர் அவங்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருந்தார் என்பது.."

'நடராஜன் அண்ட் கோ..' போலிஸின் கவனிப்பில் பம்மிப் பதுங்கியது.. சட்டப்படி அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு நெல்லூருக்கு விரட்டி விட்டாள் அஞ்சனா.. சாம்பசிவத்தின் உடல்நிலை சரியானதும் அவரருகில் அமர்ந்து அனைத்து விவரங்களையும் சொன்னாள்.. ரகுநந்தனையும், சுதர்சனத்தையும் அறிமுகப்படுத்திவைத்தாள்..

"இவங்க மட்டும் இல்லைன்னா.." பேச்சு வராமல் அவள் தேம்பி அழுதபோது சாம்பசிவத்தின் உடல் பதறியது..

"என் செல்லமே.. இந்தத் தாத்தாவால் உன்னைப் பாதுகாக்க முடியாமல் போயிருச்சே.. கடல் போல செல்வமிருக்க நீ ஊர் விட்டு ஊர் அகதி போல ஓடினாயா..?"

"விடுங்கப்பா.." சுதர்சனம் ஆறுதல் சொன்னார்..

"எல்லாம் ஒரு நேரம்தான்.. என்ன சொல்கிறது..? போனதை நினைத்து வேதனைப் படறதைவிட இனி ஆக வேண்டியது என்னங்கிறத யோசிக்கலாம்.. என்ன நான் சொல்கிறது..?"

உரிமையுடன் அவர் 'அப்பா' என்று அழைத்ததில் சாம்பசிவம் நெக்குருகிப் போனார்.. இதைப் போல ஆத்மார்த்தமான பாசத்துடன் அவரது தம்பி பிள்ளைகள் ஓர்நாள் ஒர் பொழுதாவது அவரை அழைத்திருப்பார்களா..? பாசத்துடன் பேசியிருப்பார்களா..?

"பணபலம், ஆள் படைபலம் இருக்கனும்னு சொல்வாங்க சுதர்சனம்.. என்னிடம் பணபலம் இருக்கு.. ஆள் படைபலம் இல்லை.. ஆள்பலம் அன்பினாலும் பாசத்தாலும் ஒன்னு சேரனும்.. பக்க பலமா நிக்கனும்.. உனக்கு நானிருக்கேன்னு சொல்லனும்.. அது உங்களிடம் இருக்கு.."

"அப்புறம் என்னங்கப்பா.. நம்ம பொண்ண எந்தங்கச்சி மகனுக்குக் கட்டிக் கொடுத்திரலாம்ல்ல.. அதில பாருங்க.. என் தங்கச்சி புருசன் , ரகுவுக்கும் அஞ்சனாவுக்கும் கல்யாணம் ஆகிருச்சுன்னு நம்பிக்கிட்டு இருக்கார்.. இன்னும் ஆகலேன்னு தெரிஞ்சா தங்கச்சி மகளக் கட்டச் சொல்லி மாப்பிள்ளய நெருக்கிருவார்.. மாப்பிள்ள இமயமல உச்சியிலே தவம் செய்யப் போறேன்னு கிளம்பிருவான்.."

"அது எதுக்கு..? அழகு பேத்தி அஞ்சனா இருக்கிறப்ப என் பேரன் எதுக்காக காவியைக் கட்டணும்..? தசரதனோட நான் பேசறேன்.. யாருக்கும் தெரியாம அவங்க பண்ணிக்கிட்ட கல்யாணத்தை ஊர் பார்க்க நாம நடத்தி விடலாம்ன்னு சொல்கிறேன்.."

"ஆஹா தாத்தா.. அருமையான யோசனை.."

அதன்படி தசரதனுக்குச் செய்தி போனது.. அவர் பெண்டாட்டி மகளோடு பெங்களூருக்குப் பறந்து வந்தார்.. கூடவே துளசி, கோகுல் மற்றும் அம்புஜத்தின் குடும்பமும் சேர்ந்து வந்தார்கள்.. அஞ்சனாவின் செல்வச் செழிப்பில் அம்புஜம் 'ஆ' வென வாய் பிளந்து அடங்கிப் போனாள்..

"சின்னஞ்சிறுசுக.. ஒருத்தர் மேல ஒருத்தர் ஆசைப்பட்டு நமக்குத் தெரியாம கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டா நாம் அப்படியே விட்டுவிட முடியுமா தசரதன்.. ஊர் பார்க்க ஜாம்ஜாம்ன்னு நடத்தி வைத்து விட வேண்டியதுதானே..? நீங்க திருவாரூர்க்காரர்.. மனதைத் தொட்டுச் சொல்லுங்க.. என் பேத்தி திருவாரூர் தேர் போல அழகா இருக்காளில்ல..?"

"தேரில் வந்திருக்கும் திருமகள் போலவே இருக்கு மாமா.."

வினயத்துடன் பதில் சொன்னார் தசரதன்.. அவரது விருப்பப்படித் திருவாரூரில் திருமணம் செய்யமுடிவானது.. சாம்பசிவத்தின் வேண்டுகோளின்படி பெங்களூரில் திருமண வரவேற்பை நடத்தத் தசரதன் ஒப்புக் கொண்டார்.

24

"மாங்கல்யம் தந்துனானே.."

அய்யர் மந்திரம் ஓத தாலியை எடுத்து அஞ்சனலட்சுமியின் கழுத்தில் கட்டினான் ரகுநந்தன்.. அருகில் அமர்ந்திருந்த அஞ்சனலட்சுமியைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பிரமிப்பாக இருந்தது.. தன் அதிர்ஷ்டத்தை நம்ப முடியாமல் கையைக் கிள்ளிக் கொண்டான்.. நடப்பது உண்மைதான் என்று கைவலி அறிவுறுத்தியது.. அவன் ஆசைப்பட்டபடி அழகின் திருவுருவமாக மனைவி அமைந்து விட்டாளா..? மறந்தும் அவன் அஞ்சனலட்சுமியின் செல்வத்தை நினைத்துப் பார்க்கவில்லை..

இருவரும் அக்கினியை வலம் வந்தபோது தசரதன் பெருமையுடன் உறவினரையும் ஊர் மக்களையும் பார்த்தார்.. மகன் அவருக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொண்டான் என்று இனி ஊர் பேசாது.. திருவாரூரையே ஒரு கலக்குக் கலக்கி பிரம்மாண்டமாகத் தசரதனின் மகனது திருமணம் நடந்தது என்று பெருமை பேசும்..

அம்புஜத்திற்கு ஆத்திரமான ஆத்திரம்.. அண்ணன் மகன் திருட்டுக் கல்யாணம் பண்ணிக் கொண்டான் என்று பேச வழியில்லாமல் போனதுடன் மட்டுமில்லாமல் அவனது திருமணத்தின் அருமை பெருமைகளைப் பற்றி ஊர் வாய் வலிக்காமல் பேசப் போகிறதே என்று வயிறெரிந்தாள்..

திருமணம் முடிந்த ஒரு வாரத்தில் பெங்களூரில் திருமண வரவேற்பு நடந்தது.. திருவாரூரே பெங்களூருக்குச் சென்றது.. சாம்பசிவம் பணத்தைத் தண்ணீராக வாரியிறைத்து ஏஸி பஸ்களில் ஊரை வரவழைத்தார்..

"காசிருக்கிற பகுமானத்தக் காட்டறானுக.."

கைவிரல்களை நெட்டி முறித்தாலும் ஒட்டுப் புல் போல முதல் ஆளாக தொற்றிக் கொண்டு திருமண வரவேற்புக்குச் சென்றாள் அம்புஜம்..

"எப்படி ஆடறானுகன்னு பாக்க வேணாமா..?" அதற்கு ஒரு காரணத்தையும் சொன்னாள்..

"எதுக்கு இப்படி அலுத்துக்கிறவ.. போக வர ஏஸி பஸ்.. தங்குறதுக்கு ஏஸி ரூம்.. திங்கிறதுக்கு நேரா நேரத்துக்கு விதம் விதமான சாப்பாடு.. கலந்துக்கறதுக்கு கசக்குமா..?"

அம்புஜத்தின் புகுந்த வீட்டு வகையறாவைச் சேர்ந்த உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி வாய் விட்டு விட்டு அம்புஜத்திடம் வாங்கிக் கட்டிக் கொண்டாள்..

"உடந்தப்பட்டவுக இப்புடி இருக்கப் போயித்தான் எங்கண்ணன் என்மகள விட்டுப்புட்டு எங்கிருந்தோ ஒருத்திய மருமகளாப் பிடிச்சிருக்கு.." அம்புஜம் மூக்கைச் சிந்தினாள்.

"இதுக்கா இந்தப் பாடு..? கையிலே வெண்ணையை வைச்சுக்கிட்டு நெய்யிக்கு ஏன் அலையற அம்புஜம்..? உன் அண்ணன் வீட்டில பொண்ணக் கொடுத்து பொண்ண எடுக்கனுமின்னு நீ ஆளாப் பறக்கிறயே.. உன் ஒன்னுவிட்ட நாத்தனாவும் உன்னப் போலதானே பறப்பா..? அத ஏன் நினைக்கல..? உனக்கு உன் பொறந்தவீடு பெரிசாப் போச்சு.. உடந்தப்பட்ட புகுந்தவீட்டு ஜனங்க எளிசாப் போயிட்டாங்க.. உன்மேல குத்தத்தை வைச்சுக்கிட்டு மத்தவுக மேல பாஞ்சா என்ன அர்த்தம்..?"

'ஆமாமில்ல..'

அதுவரை நினைத்துப் பார்க்காத ஒன்று விட்ட நாத்தனாரின் பிள்ளைகளை நினைத்துப் பார்த்தாள் அம்புஜம்.. நாராயணனின் சித்தப்பா மகளான காமாட்சியை பள்ளி ஆசிரியருக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.. ஆண் ஒன்று பெண் ஒன்று என அவர்களின் பிள்ளைகள் திருமண வயதில் இருப்பதை அம்புஜம் எப்படி மறந்தாள்..?

"அதில பாரு அம்புஜம்.. நாராயணனோட வம்சமே பொந்தாம் பொதுக்குன்னுதான் இருக்கும்.. உன் பிள்ளைகளைப் போலவே காமாட்சியோட பிள்ளைகளும் பொந்தாம் பொதுக்குன்னு இருக்குதுக.. காமாட்சியோட மகன் அப்பனைப் போலவே பள்ளிக்கூட வாத்தியார் வேலையில இருக்கான்.. மக மட்டும் என்ன மிதமா..? அண்ணனுக்குப் போட்டியா அவளு டீச்சர் வேல பாக்கிறா.. உன் வீட்டில பொண்ணுக் கொடுத்துப் பெண்ண எடுக்கறதுன்னா காமாட்சி மகிழ்ந்து போவா.. என்ன சொல்ற..?"

அம்புஜம் என்ன மாட்டேன் என்றா சொல்வாள்..? வேலைக்குப் போகாத சதானந்தனுக்கு வேலைக்குப் போகும் பெண் கிடைத்திருக்கும் போது அவள் எதற்காக ரதிமீனாவைப் பெண் கேட்டுத் தொங்க வேண்டும்..? எப்படியும் ரதிமீனா சதானந்தனைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கப் போவதில்லை.. சுதர்சனமும் தங்கை மகளை விட்டுக் கொடுக்கப் போவதில்லை.. சதானந்தன்

கண்ணனுடன் மல்லுக்கு நின்று ஜெயிக்கப் போவதில்லை..

'போகாத ஊருக்கு வழி கேக்கனுமா..? அத விட்டுட்டு அவுக கண்ணுக்கு முன்னாலே என் புள்ளைக ரெண்டு பேரோட கல்யாணத்தையும் ஒரே மேடையில நடத்திக் காட்டிரனும்..'

எல்லோரும் பெங்களூரைச் சுற்றிப் பார்க்க அம்புஜம் காமாட்சியைச் சுற்றினாள்.. கவர்ண்ட்மெண்ட் வேலை இல்லையென்றாலும் சொத்து சுகம் அதிகமிருந்த சதானந்தனுக்குப் பெண் கொடுத்து, வண்டி வண்டியாக சீர்வரிசைகளுடனும் அசையாச் சொத்துக்களுடனும் பெண் எடுக்க மகிழ்ச்சியாகச் சம்மதித்தாள் காமாட்சி..

அப்புறம் என்ன..? அடுத்து வந்து சுபயோக சுபதினத்தில் அம்புஜம் பெற்ற செல்வங்களுக்குத் திருவாரூரில் திருமணம் நடந்து முடிந்தது..

"அம்புஜமா கொக்கா..? அண்ணன் மகன் இவ மகளைக் கட்டிக்க மாட்டேன்னு சொன்னதுமே உன் மகளும் வேண்டாம்ன்னு சொல்லி உடனடியா ரெண்டு பிள்ளைகளுக்கும் ஒரே மேடையில கல்யாணம் பண்ணி வைச்சுட்டாளே.." என்று உறவுக்கார ஜனங்கள் வியந்ததில் அம்புஜத்தின மனம் ஆறிவிட்டது.

ரகுநந்தனும் அஞ்சனாவும் வெளிநாட்டிற்குத் தேனிலவு கொண்டாடப் பறந்தார்கள்.. கற்பனையில் இருந்தவள் கைவளைவுக்குள் வந்து விட்டதில் ரகுநந்தன் கள்ளருந்தும் சிங்கமானான்.. போதையுடன் மனைவியை ஆக்ரமித்தான்.. தேநிலவு முடிந்து வந்தவுடன் கம்பெனிப் பொறுப்புக்களில் பாதியை ஏற்றுக் கொண்டு பெங்களூரில் வாழ ஆரம்பித்தான்..

கண்ணனுக்கும் ரதிமீனாவுக்கும் திருமணம் நிச்சயமானது.. திருமணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பை ரகுநந்தனும் அஞ்சனலட்சுமியும் ஏற்றுக் கொண்டார்கள்.. ரகுநந்தனின் திருமணத்தைப் போலவே பிரம்மாண்டமாக நடத்தினார்கள்.. அதில் தசரதனின் மனம் குளிர்ந்தது.. நாத்தனாருக்குத் திருமணப் பரிசாக

சென்னையில் பங்களா, திருவாரூரில் வீடு, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், கார் என்று சீர்செய்து அசத்தினாள் அஞ்சனலட்சுமி..

"நீ அஞ்சனலட்சுமியில்லம்மா.. என் வீட்டுக்கு வந்த மகாலட்சுமி.." ஆனந்தக் கண்ணீருடன் மருமகளின் கன்னம் வழித்தாள் சுமித்ரா..

"ஆமாமாம்.. தேரில் வந்த திருமகள்..! அப்படித்தானேடா மாப்பிள்ள..?" உரக்கச் சிரித்தார் சுதர்சனம்.

அந்தக் குடும்பத்தில் உயிர்ப்பையும் மகிழ்வையும் கொண்டு வந்திருக்கும் அஞ்சனலட்சுமியைக் காதலுடன் பார்த்துத் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டான் ரகுநந்தன்.

தேரில் வந்த திருமகள் அனைத்து வேண்டுதல்களையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாள்.. வரும் நேரத்தில் தேரேறி நிச்சயம் நம் வாழ்வில் வருவாள்..

முற்றும்...